

# தமிழரசு

1-5-1991 ரூ.1





புரட்சிக்கவிஞர் நூற்றாண்டு
நிறைவுவிழாச் சிறப்பிதழ்





சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் மேதகு ஒரிஸ்ஸா மாநில ஆளுநர் திரு.யக்ஞதத் சர்மா அவர்கள் அம்பேத்கர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். மேதகு தமிழக ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங், ஆளுநரின் ஆலோசகர் திரு.வே.கார்த்திகேயன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலர் திரு.செ.செல்லப்பன், இ.ஆ.ப., செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர், திருமதி.ஜெயந்தி,இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர் (14.4.'91).


சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில், மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், அம்பேத்கர் நினைவு அஞ்சல் தலையை வெளியிட, நிலச்சீர்திருத்தத் துறைச் சிறப்பு ஆணையர் திரு.சி.தங்கராஜ், இ.ஆ.ப., அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டார் (14.4.1991).











# இந்த இதழில்...


| | | |
|---|---|---|
| பாவேந்தரின் மனிதநேயம் | ... | 2 |
| பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் | ... | 4 |
| கலைத்துறையில் பாவேந்தர் | ... | 6 |
| பாவேந்தர் வாழ்விலே | ... | 9 |
| பாவேந்தர் போற்றிய பாரதம் | ... | 12 |
| புரட்சிக் கவிஞரும் வ.ரா.வும் | ... | 13 |
| உலக மகாகவி பாரதி | ... | 15 |
| மரக்காலும் மண்ணாங்கட்டியும் | ... | 17 |
| இவர்தான் பாரதிதாசன் | ... | 22 |
| சந்தனக்கல் | ... | 24 |
| பெண்ணுக்குக் கல்வியே பெருமை தரும் | ... | 25 |
| பாவேந்தர் ஒரு படப்பிடிப்பு | ... | 27 |
| பாவேந்தர் ஒரு நல்லாசிரியர் | ... | 33 |
| பயற்றொடு கும்மாயம் | ... | 36 |
| புரட்சித் தோட்டத்தில் பூத்த மலர்கள் | ... | 40 |
| கோவை-பெரியார்-நீலகிரி மாவட்டங்களில் காவிரி நதிநீர்ப் பங்கீடு - நடுவர் குழு | ... | 41 |
| டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு நிறைவு விழா | ... | 45 |
| இந்தியச் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி - நிறைவு விழா | ... | 47 |
| பாவேந்தரும் குழந்தைகளும் | ... | 48 |



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

சித்திரைத் திங்கள் - 18

மலர்:21 இதழ்:21

1-5-1991


## தொழிலாளர் தடக்கை

நீர்கனல் நல்ல நிலம் வெளி காற்றென
நின்ற இயற்கைகளே! உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே! —புரட்சிக் கவிஞர்









# பாவேந்தரின் மனிதநேயம்

டாக்டர் சிலம்பொலி செல்லப்பன்

பாவேந்தரின் கவிதை வீச்சு தமிழ் மக்களிடையேயும், தமிழ்க் கவிஞர்களிடையேயும் பெரும் விழிப்புணர்வும், செயலாக்க உணர்வும் ஏற்படுத்தியது.

'இழப்பதற்கு விலங்குகளைத் தவிர வேறு எதுவுமற்ற மானுடம்' ''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'' என்ற மார்க்சின் அறைகூவலைக் கேட்டு உலகெங்கும் உள்ள ஒடுக்கப்பட்ட இனம் விழித்தெழுந்ததைப் போல, ஒரு பெரிய விழிப்புணர்வு ஏற்பட்டு விட்டது என்று கூற முடியாவிட்டாலும், சீர்திருத்த உணர்வும், பேதமற்ற பார்வையும், முன்னேற்ற உணர்வும் பெறத் தவறவில்லை. மானுடம் பாட வேண்டியது இக்காலக் கலை இலக்கிய நோக்கமாக அமைதல் வேண்டும் என்ற நோக்கத்தையும், அந்த மானுடத் தன்மை பரந்த ஓர் இயக்கமாக வெடிக்க வேண்டும் என்ற தாகத்தையும் பாரதிதாசன் கவிதைகள் ஏற்படுத்தத் தவறவில்லை.

'ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ!''

— என்றெல்லாம், ஓர் இனம் மற்றோர் இனத்தின் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு ஏமாற்றி உழைப்பை உறிஞ்சி வாழும் கொடுமையைச் சாடுகிறார் புரட்சிக் கவிஞர். அவருடைய தாலாட்டுப் பாடல்களிலே கூடப் புரட்சி முழக்கம் தான் முக்கியத்துவம் பெறுகிறது.




புரட்சிக் கவிஞரின் 'பிசிராந்தையார்' நாடக நூலுக்கு 'சாகித்ய அகாடமி'யால் 1969-ஆம் ஆண்டிற்கான பரிசாக வழங்கப்பட்ட காசோலையும், செப்புப் பட்டயமும்.

''எல்லாம் அவன்செயலே
என்று பிறர்பொருளை
வெல்லம்போல் அள்ளி
விழுங்கும் மனிதருக்கும்
-காப்பார் கடவுள்உமைக்
கட்டையில் நீர் போகுமட்டும்
வேர்ப்பீர், உழைப்பீர்
எனவுரைக்கும் வீணருக்கும்
மானிடரின் தோளின்
மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின் பெருக்கே, என்
செந்தமிழே கண்ணுறங்கு''

- என்று ஆண்குழந்தைத் தாலாட்டில் குறிப்பிட்டுள்ளார், அவர். பெண் குழந்தைத் தாலாட்டில்,



''வேண்டாத சாதி
யிருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த்
துலக்கும் பெருமாட்டி
புண்ணிற் சரம்விடுக்கும்
பொய்ம்மதத்தின் கூட்டத்தைக்
கண்ணிற் கனல்சிந்திக்
கட்டழிக்க வந்தவளே''

என்று குறிப்பிடுகிறார். அறிவூட்டுதல் என்ற ஒரு கோணத்தை நாம் கவிதை தொடங்கிய காலம் தொட்டு அறிந்திருந்தாலும் பாவேந்தரின் அறிவூட்டும் பணி மற்றவர்களின் பாதையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. கற்பனாவாத அறிவூட்டு தலை உடைத்தெறிந்தவர், அவர். மனித சமுதாயத்தில் மேடுபள்ளங்களையும், ஒட்டை உடைசல்களையும் அறிவியல் கண்கொண்டு சிந்தித்து அவற்றின் பொதுவான தன்மைகளைப் புரிந்து, மீண்டும் சமுதாயத்தை ஒருங்கிணைத்துக் கொண்டு செல்ல வேண்டியதே ஒரு புரட்சிவாதியின் கடமை ஆகும். இலக்கியவாதியான பாரதிதாசன் ஒரு புரட்சிவாதியின் கடமையை மிகச் சரியாக தமிழ்ச் சமூகத்திற்கு அளித்தவர்.

கவிஞன் சமுதாயத்தின் ஓர் அங்கம். சமுதாயம் கவிஞனுக்குக் கிடைத்த உலகம், சமுதாயச் சூழல் கவிஞனை உருவாக்குகிறது. கவிஞன் சமுதாயத்தை உருப்படுத்துகிறான். கவிஞனின் படைப்பின் இலட்சியம் சமுதாய உணர்வு மிக்கதாயின், அது மனித மேம்பாட்டுக்கு நன்மை பயக்கும், பாரதிதாசனின் படைப்பு, மனித நேயம் மிக்க கம்யூனிச நாகரீக உலகை உருவாக்கும் இலட்சியத்தை உடையது.



சென்னையில் - 29.7.1946 அன்று, பாவேந்தர் 'புரட்சிக் கவி' என்று போற்றப்பட்டார். நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் நடைபெற்ற அவ்விழாவில் அறிஞர் அண்ணா அவர்கள் ரூ.25 ஆயிரம் நிதி வழங்கிச் சிறப்பித்தார்.

ஆனால், பாரதிதாசன் பற்றிய ஆய்வுகள் பாரதிதாசன் ''பகுத்தறிவுக் குழுவினனாக மாறிய பின் அவனுடைய சமுதாயப் பார்வையில் புரை வளர ஆரம்பித்து விட்டது. ஆரியர், திராவிடர் என்ற பிரிவினைக் கண்கொண்டு ஆரியரைத் தாக்கிப் பாடுவதும், இந்தி மொழி பாடையேற வேண்டுமெனப் பிறமொழியைப் பழிதூற்றுவதும், அவருடைய பாடல்களின் ஆளுமைத் தரத்தைக் குறைக்கின்றது'' (டாக்டர் கோ. தான்யா, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் மார்க்சியக் கொள்கையின் தாக்கம், பக்கம்: 100) எனக் குறிப்பிடுகிறது. ஆனால் மார்க்சின் கருத்துப்படி பாவேந்தரின் கவிதை அணுகுமுறை மாறுபட்டதல்ல.

''விஞ்ஞான சோஷலிசம் என்பது எல்லா விதமான சூழல்களுக்கும் ஏற்றதான சர்வரோக நிவாரணி போன்ற 'ரெடிமேடு' மருந்துச் சரக்கு எனச் சமதர்மவாதிகள் கருதி விடலாகாது. ஒரு சோஷலிசவாதி, தான் செயல்படும் சூழ்நிலையில், அந்தச் சூழ்நிலை உருவானதற்கான சரித்திர ரீதியான காரணங்களை முற்றிலும் தழுவியதாகவே அவர் மேற்கொள்ளும் சமதர்ம வேலைத் திட்டம் அமைந்திருக்க வேண்டும்'' என்ற மார்க்சின் தத்துவப்படி பாரதிதாசன் வரலாற்றுக் காரணங்களுடன் சமுதாய இடையூறுகளை, சிக்கல்களை எடுத்துரைத்துள்ளார். வரலாற்றுச் சமுதாய இயக்க இயலைச் சரியாகப் புரிந்து கொண்டதன் தாக்கமே புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் மனித நேயம் மிக்க கவிதைகள்.

''பாரடா உனது மானிடப் பரப்பை
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
மானிட சமுத்திரம் நானென்று கூவு''

என்ற பாட்டாளி வர்க்கத்தின் மீது அக்கறை கொண்ட புரட்சிக் கவிஞர் மனித நேயத்தையும் மனிதத் தன்மையையும் வரிக்கு வரி பாடிய தமிழ்க் கவிஞர் வரிசையில் பாரதிதாசன் முதன்மையானவர் என்றால் மிகையல்ல.



தமிழ்ப்பற்று பொங்கியெழு!

**சாதி** மதக் கொடுமைகளைத் தூள் தூளாக்க, குருட்டுப் பழக்க வழக்கங்களைத் தகர்த்தெறிய, பகுத்தறிவை விரிவாக்க, தமிழ்ப்பற்றுப் பொங்கியெழ, பெண்ணடிமை நொறுங்க, பொதுவாக நில, பண, முதலாளிகளின் கொடுமையை உணர்த்த சுருங்கச் சொன்னால் முதலாளித்துவச் சீர்திருத்தமான பாடல்களைத் தந்துள்ளார் பாரதிதாசன். நன்றியும் வணக்கமும்.

- ப. ஜீவானந்தம்.

# பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம்!



க. இராஜாராம்
பொறுப்பதிகாரி
பாரதிதாசன் ஆய்வுமையம்
புதுச்சேரி.

**பாவேந்தரின் புதுவை இல்லம், பாவேந்தரின் அருமை பெருமைகளை விளக்கிடும் நினைவிடமாக விளங்குகிறது. பாவேந்தர் பயன்படுத்திய பொருள்கள் - நடத்திய இதழ்கள் - கையெழுத்துப் பிரதிகள் முதலானவை இந்தக் காட்சிக் கூடத்தில் உள்ளன. அவை காண்போரின் கருத்தைக் கவர்கின்றன.**

**நூ**ற்றாண்டு விழாக் கண்ட பாவேந்தரின் புதுவை இல்லத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு நூலகம் - காட்சிக் கூடம் பாரதிதாசனின் 80-ஆம் ஆண்டு பிறந்த நாளில் (29.4.1971) புதுவை மாநில முதல்வராக இருந்த மாண்புமிகு எம்.ஓ.எச். பாரூக் அவர்கள் தலைமையில் அப்போதைய துணை நிலை ஆளுநர் மேதகு பி.டி. ஜத்தி அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது.

அச்சமயத்தில் கவிஞரின் நினைவுக் குறிப்புகள், இதழ்கள், நூல்கள், கவிஞரின் வாழ்க்கையோடு தொடர்புடைய பல்வேறு நிகழ்ச்சிகளைக் குறிக்கும் புகைப்படப் பிரதிகள் மற்றும் கவிஞரின் சில சொந்த உடைமைகள் போன்றவைகளைத் திரட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு அவைகள் இக்காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டன. அப்போது இந்த நினைவு நூலகம் - காட்சிக் கூடத்தில் துணை நூலகர் ஒருவரும், காவலர் (Watchman) ஒருவரும் பணியில் இருந்தனர்.

1977-ஆம் ஆண்டு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆய்வினை மேற்கொள்ளும் வகையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு நூலகம்-காட்சிக் கூடத்தினை ஆராய்ச்சி மையமாக மாற்றுவதற்கான திட்டம் உருவாக்கப்பட்டது.


1978-ஆம் ஆண்டில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு நூலகம்-காட்சிக் கூடத்தை ஆய்வு மையமாக மாற்றுவதற்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வு மாணவர்களுக்கு ஆராய்ச்சி உதவித் தொகை வழங்குவதற்கும் இந்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகும் இக்காட்சிக் கூடம் 1984-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரை, தொடர்ந்து நினைவு நூலகம்-காட்சிக் கூடமாகவே செயல்படுத்தப் பட்டது. 1984-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதற்கொண்டு இந்நினைவு நூலகம்-காட்சிக் கூடத்தினை ஆய்வு மையமாக மாற்றி அமைப்பதற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்பொழுது இவ்வாய்வு மையத்தில் - ஆய்வுத் துணைவர், துணை நூலகர், இளநிலை எழுத்தர், பணியாள், காவலர், துப்புரவாளர் என ஆறு பேர் பணிபுரிகின்றனர்.

**நூலகம்**

நூலகம், ஆய்வாளர்களின் ஆய்விற்கு உதவியாகப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் சேகரித்து வழங்குவதோடு, நூலகப் பணியையும் ஆற்றுகின்றது.

தமிழ் இலக்கியம்/இலக்கணம் தொடர்பான தமிழ் மற்றும் ஆங்கில நூல்களும் சிறப்புப் பிரிவாகப் பாரதிதாசனின் படைப்புகள் அப்படைப்புகள் மீதான திறனாய்வு நூல்கள் ஆய்வேடுகள். காலமுறை இதழ்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கையெழுத்துப் பிரதிகள் போன்றன இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன. தமிழ் நூல்களும் குறைந்த அளவில் ஆங்கில நூல்களுமாக நூலகத்தில் 10.000 நூல்கள் இக்குறுகிய காலத்திலேயே இடம்பெற்றுள்ளன.




புரட்சிக்கவிஞர் நினைவகம்.

கிடைத்தற்கரிய இதழ்கள், பாரதிதாசன் தொடர்பான அரிய புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள், பாரதிதாசனின் திரையிசைப் பாடல்கள், பாரதிதாசன் திரைக்கதை வசனம் எழுதிய திரைப் படங்களின் படச்சுருள்கள் (பொன்முடி, ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி) போன்றன இம்மையத்திலே தொகுத்து வைக்கப்பட்டுள்ளன, தொடர்ந்து தொகுக்கப்பட்டும் வருகின்றன.

**பாரதிதாசன் நினைவுகள்**

பாரதிதாசன் தொடர்பான நினைவுகள் அடங்கிய 100 ஒலிப்பதிவு நாடாக்கள் இங்கே பாதுகாக்கப்படுகின்றன.

இந்நினைவுகள் அவர்கால அறிஞர்கள் - எழுத்தாளர்கள் - கலைஞர்கள்/அரசியல்வாதிகள்



பாவேந்தர் பயன்படுத்திய சாய்வு நாற்காலி.

உறவினர்கள்/ஆர்வலர்களிடமிருந்து ஒலிப்பதிவு செய்யப்பட்டவைகள் ஆகும்.

பாரதிதாசனின் வாழ்க்கைக் குறிப்புகள், கவிதை, நாடகம், சிறுகதை, உரைநடை, பத்திரிகை, அரசியல் திரைப்படம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இந்நினைவுகளில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வோர் ஆண்டும் புதுவை எழுத்தாளர்களின் சிறந்த படைப்பாகத் தேர்ந்தெடுக்கப்படும் படைப்புக்கு ரூ.5,000 பரிசுத் தொகை வழங்கப்படுகின்றது.

**புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களை நினைவு கூரும் வகையில் அவர் எழுதுகோல், அவர் பயன்படுத்திய சாய்வு நாற்காலி, சட்டை, மூக்குக் கண்ணாடி போன்ற பல்வேறு பொருட்கள் இந்தக் காட்சிக் கூடத்தில் இடம் பெற்றுள்ளன.**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் புகைப்படங்கள் இக்கூடத்தில் இடம் பெற்றுள்ளன.

பாரதிதாசனின் கையெழுத்துப் பிரதிகள், நூல்கள், அவர் நடத்திய இதழ்கள், அவர் பயன்படுத்திய பொருட்கள், போன்றனவும் இக்கூடத்தில் காட்சிப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளன.

பாவேந்தரின் எழுத்தோவியங்கள் சில வற்றிற்குத் தீட்டப்பட்ட வண்ண ஓவியங்களும் இக்கூடத்தில் இடம் பெற்றுள்ளன.

**ஆய்வுத் திட்டங்கள்**

பின்வரும் ஆய்வுத் திட்டங்கள் இம்மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு - ஆய்வுப் பதிப்பு
2. பாரதிதாசன் கவிதைகள் தொகுப்பு - கால வரிசைப்படி திருத்தப் பதிப்பு
3. பாரதிதாசன் சொல்லடைவு
4. பாரதிதாசன் குயில் களஞ்சியம்
5. பாரதிதாசன் நூல் களஞ்சியம்
6. பாரதிதாசன் கட்டுரைக் களஞ்சியம்
7. பாரதிதாசன் கவிதைகள் மலிவுப் பதிப்பு

பாவேந்தரை நினைவுகூரும் வகையில் அமைந்துள்ள இம்மையம், புதுவைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த காட்சிக் கூடமாகவும், ஆய்வாளர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும் பயன் தரும் ஆய்வுக் கூடமாகவும் ஒருசேரத் தம் பணியை ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



## வெற்றி ஓங்குக!

***புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போர் முகாம் அமைத்து விட்டார்; போர் வீரர்களைக் கூட்டிவிட்டார். படைக்கலன்களும் தயார். முரசும் கொட்டிவிட்டுக் கூப்பிடுகிறார்.***


> ***''கொலை வாளினை எடடா மிகு***
> ***கொடியோர் செயல் அறவே''***

***என்று அந்தக் குரல், காற்றில் மிதந்து வரும் கீதமாக மட்டும் இன்றி. கிண்கிணிச் சத்தத்தோடு இழைந்து வரும் கீதமொழியாக மட்டுமின்றி, கேட்போரின் வளைந்த முதுகை நிமிர்த்திவிடும் வீரக் குரலாகிவிட்டது. எனவே தான், நமக்கொரு வால்டேர் கிடைத்து விட்டார். நமக்கோர் ஷெல்லி கிடைத்து விட்டார். நமக்கு ஒரு கவிஞர் கிடைத்து விட்டார், அவர் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார். நம் வேலையைச் செய்கிறார். நாம் வாழ வழி அமைக்கிறார். அவர் வாழ்க, அவர் திறன் ஓங்குக! அவர் வெல்க! அவர் வெற்றியினால் நமக்கு வெற்றி ஓங்குக! என்று மனமார நாம் கூறுகிறோம். நாம் மட்டுமா, நாடே கூறுகிறது.***

— பேரறிஞர் அண்ணா



# கலைத்துறையில் பாவேந்தர்





**புலவர் தமிழ்ப்பித்தன்**

**பு**திய இலக்கியங்கள் பலவற்றை உருவாக்கித் தமிழன்னையின் பொன் அடிகளில் அர்ப்பணித்த பாவேந்தர் பாரதிதாசன், கலைத்துறையிலும் ஈடுபட்டு அரிய கருவூலங்களைப் படைத்தளித்திருக்கிறார்.

நாடகங்கள், இசைப் பாடல்கள், திரைப்படப்பாடல், திரைப்பட உரையாடல்கள் ஆகியவற்றை உருவாக்கிப் பெரும்புகழ் தேடிக் கொண்டுள்ளார். அவரது கைவண்ணம் கலைத்துறைக்குத் தனிச்சிறப்பை அளித்துள்ளது.

பாவேந்தர் முதன்முதலில் 1937-இல் டி.கே.எஸ்.சகோதரர்கள் நடித்த 'பாலாமணி அல்லது பக்காத் திருடன்' என்னும் படத்திற்குக் கதை, உரையாடல், பாடல் எழுதினார். அந்நாளில் அப்படத்திற்குச் செய்யப்பட்ட விளம்பரம் வருமாறு:

''கவிஉலகில் கீர்த்தி பெற்ற ஸ்ரீமான் புதுவை பாரதிதாசன் அவர்கள் பாடல் எழுதிய படம்''

அக்காலத்தில் தமிழாசிரியர் ஒருவர் திரைப்படத் துறையில் அடி எடுத்து வைப்பது திரையுலகுக்குக் கிடைத்த பெருமையாகக் கருதப் பட்டது. இன்று நிலைமை மாறி விட்டது. ஒருவர் திரையுலகில் பெறுகின்ற வெற்றியைக் கொண்டுதான் அவரது திறமை-பெருமை அளவிடப் படுகிறது.

தொடர்ந்து 1939-இல் காளமேகம் என்னும் படத்திற்கு உரையாடல், பாடல் எழுதினார். புகழ் பெற்ற நாதஸ்வரக் கலைஞர் திருவாவடுதுறை ராஜரத்தினம், கவி காளமேகமாக நடித்தார்.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனம் 1945-இல் தயாரித்த சுபத்ரா, 1946-இல் தயாரித்த சுலோசனா, 1947-இல் தயாரித்த ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி ஆகிய படங்களின் உரையாடல்களைப் பாவேந்தர் மிகச் சிறப்பாக உருவாக்கியிருந்தார் என்றாலும் அக்காலத்தில் விளம்பரங்களிலோ, திரைப்படப் பெயர்ப் பட்டியல் அட்டையிலோ பாவேந்தரின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான 'வளையாபதி'யை 1952-இல் திரைப்படமாக்க முனைந்த மாடர்ன் தியேட்டர்ஸ், உரையாடல்கள் அமைக்கும் பொறுப்பையும் பாடல் எழுதும் பொறுப்பையும் பாவேந்தரிடம் ஒப்படைத்தது. பாவேந்தர் தமது பணியைத் திறம் படச் செய்தார்.

மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத் தயாரிப்புகளில் ஐந்து படங்களின் உருவாக்கத்திற்குப் பாவேந்தர் பெரும் தொண்டாற்றியிருக்கிறார் என்பதிலிருந்து, பாவேந்தரின் எழுத்தில் அந்தப் பட அதிபருக்கிருந்த ஈடுபாடு தெளிவாக விளங்குகிறது.

1956-இல் ஏ.எல்.எஸ்.புரடக்ஷன் தயாரித்த அம்பிகாபதி என்னும் திரைப்படத்தின் உரையாடல் எழுதும் பொறுப்பு, பாவேந்தரிடம் ஒப்படைக்கப்பட்டது. பட இயக்குநருக்கும், பாவேந்தருக்கும், படப்பிடிப்பின்போது ஒரு காட்சி அமைப்புக் குறித்து ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் காரணமாக, பாவேந்தர் உரையாடல் எழுதுவதிலிருந்து விலகிக் கொண்டார். அரியதோர் காவியத்திற்கு அற்புதமான உரையாடல் அமையும் வாய்ப்பைத் தமிழ்த் திரையுலகம் இழந்துவிட்டது என்றே கூறலாம்.

சுலோசனா என்னும் படத்தில் கதாநாயகன் இந்திரஜித்தாக மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவன அதிபர் டி.ஆர்.சுந்தரமே நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பாவேந்தரின் எழுத்தில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

'மனைவியோ கால் கட்டு, மக்களோ... கட்டு... என ஏறக்குறைய 16 கட்டுகளை உரையாடலில் எழுதியிருந்த பாவேந்தரைப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார் டி.ஆர். சுந்தரம்' என்னும் செய்தியை மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத் தொழில் நுணுக்கக் கலைஞர்கள் பலர் தெரிவிக்கக் கேட்டிருக்கிறேன்.

ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி என்னும் படத்தில் பாவேந்தர் தீட்டிய செறிவான உரையாடல்கள் இன்னும் நினைவில் சுழன்று கொண்டே இருக்கின்றன.

அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே நினைவுகூர்வோம்.

படத்தின் கதாநாயகனான சாமியார், மன்னன் ஒருவனைச் சந்திக்கிறார். அவர்கள் இருவருக்கும் நடைபெறும் உரையாடல் வருமாறு.

**மன்னன்:** ஸ்வாமி! நான் இந் நாட்டை ஆளும் மன்னன்.

**சாமியார்:** நீயா ஆளுபவன்? ஆளுபவன் ஒருவன் இருக்கின்றான். அவன் ஊரும்பேரும் உருவமும் இல்லாதவன் என்று கூறுகிறது வேதம். தெளிவில்லாத நெஞ்சம்! தெளியும்! உன்னை நொந்து என்ன பயன்? உன்னைச் சூழ்ந்திருக்கும் அந்தகாரத்தின் கூத்து தம்பீ!

மற்றொரு கட்டம்; அபூர்வ சிந்தாமணிக்கும் அவளது தோழிக்கும் பாடம் நடத்தி வருகிறார் சாமியார். இந்தக் கட்டத்தில் நகைச்சுவை உணர்வையும் உரையாடலில் வழங்கிச் சுவைஞர்களை மகிழ்விக்கிறார். உரையாடல் வருமாறு.

**சாமியார்:** செங்கமலம்! ஒரு பெண்ணுக்கு வேண்டுவது எது? வேண்டாதது எது?

**செங்கமலம்:** வேண்டுவது புருஷன்; வேண்டாதது மாமியார். (இந்த பதிலைக் கேட்டு அரங்கமே சிரிப்பலையை உதிர்க்கும்)

**சாமியார்:** சிந்தாமணி! நீ சொல்!

**சிந்தாமணி:** வேண்டுவது பொறுமை; வேண்டாதது பொறாமை.

**சாமியார்:** ஆகா! சிந்தாமணி! உன்னைக் கலாமணி என்றே கூற வேண்டும்.

**மற்றொரு கட்டம்:** செம்படவர்கள் கூட்டத்தைச் சேர்ந்த இளம் பெண்ணான மஞ்சளழகி என்பவளை ஒரு காமுகன் கண்டு, ஆசைப்பட்டு, அவளை அடைய வழி தேடுகிறான். சாமியார் உருவில் சென்று அவளிடம் பிச்சை கேட்கிறான். இந்தக் கட்டத்திற்குப் பாவேந்தர் எழுதிய உரையாடல் கவிதையாகவே வடிவெடுத்துள்ளது. அது வருமாறு.

**சாமியார்:** பருவதா பிச்சை அம்மணி.

**மஞ்சளழகி:** என்ன வேண்டும்?

**சாமியார்:** பசிக்கு ஒரு பிடி சாதம்! புசி என்று போட்டால் போதும்!

(அவள் வீட்டிற்குள் சென்று உணவு எடுத்துக் கொண்டு வந்து சாமியாரின் திருவோட்டில் போடுகிறாள்)

**சாமியார்:** தெளிவில்லாத நெஞ்சம்! தெளியும்! சாதாரண வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்கல்லவோ இந்த உணவு! என் மெய்ப் பசியைத் தீர்ப்பதற்கு இது மட்டும் போதாதே பருவலட்சுமி!

**மஞ்சளழகி:** வேறென்ன வேண்டும்?

**சாமியார்:** சுடலை ஆடிய பரமனுக்குப் பார்வதி தந்த செங்கனிவாய் முத்தம்...!

**மஞ்சளழகி:** பாவி!

**சாமியார்:** பாவியல்ல பெண்ணே, பரமனின் வடிவம். (அவளைத் தொட முயற்சித்தல்)

**மஞ்சளழகி:** ஆ! (அலறுகிறாள்).

**சாமியார்:** ஆவிக்கு அமுதம் நீ, வா!

படத்தயாரிப்பின் நீளத்துக்குக் (Footage) கட்டுப்பாடு இருந்த காலத்திலேயே விதி விலக்குப் பெற்று 20 ஆயிரம் அடிகளில் தயாரிக்கப்பட்ட அபூர்வ சிந்தாமணியின் அமோக வெற்றியில் பாவேந்தரின் பேனாவுக்குப் பெரும்பங்குண்டு.

'பாண்டியன் பரிசு' என்னும் தமது காவியத்தைத் திரைப்படமாக்க வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டிருந்த பாவேந்தர், பாரதிதாசன் பிக்சர்ஸ் என்னும் நிறுவனத்தைத் தொடங்கினார். உரையாடல்கள், பாடல்கள் யாவையும் எழுதி முடித்தார்.

விடியும்வரை விடியட்டுமே
வெண்ணிலாவே-பொழுது
விடியும் வரைக்கும் கும்மாளமே
வெண்ணிலாவே

என்ற பாடலும் பதிவு செய்யப் பட்டு விட்டது. ஆனால் எதிர் பாராத காரணத்தால் திரைப்படத் தேர் நகரவில்லை. நின்றுவிட்டது.

அடுத்து பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைத் திரை ஓவியமாக உருவாக்கத் திட்டமிட்டார். அந்த ஆசையும் நிறைவேறாததாகி விட்டது.

*1963* வாக்கில் பாரதப் பாசறை என்னும் நாடகத்தை உருவாக்கினார். அது, சீனா இந்திய நாட்டின் மீது படையெடுத்த நேரம். அதனால் சீனருக்கு அறிவுரை கூறுவது போல் அமைந்த பாடல் ஒன்றை அந் நாடகத்திற்காக எழுதியிருந்தார் பாவேந்தர். பாடல் வருமாறு:

சென்றதடா அமைதி நோக்கி
உலகம்-அட
சீனாக்காரா ஏண்டா இந்தக்
கலகம்?
நன்றாய்நீ திருந்த
வேண்டும்-இந்த
ஞாலம் உன்னை மதிக்க
வேண்டும்.
ஒன்றாய்ச் சேர்ந்து வாழ
வேண்டும்.
ஒழுக்கங் கெட்டால் என்ன
வேண்டும்?

---

## தமிழ்நாட்டின் பொக்கிஷம்



பாரதிதாசன் ஆவேசக்கவி; அவர் (அழகு) அலங்காரக் கவியல்ல; வெறும் ஜோடிப்பு வேலை செய்பவரல்ல; அகராதியைக் கொண்டு "கவி கட்டும்" மேஸ்திரியல்ல; புன்மைக் கவிதையைக் கண்டு மனம் பொங்கும் 'புலவர்' அல்ல; ஆவேசத்தையும், உணர்ச்சியையும் வெள்ளமாகக் கொட்டும் உயிர்க்கவி பாரதிதாசன் என்பது எனது தாழ்மையான எண்ணம். அவர் கையாளும் சொற்களின் எழிலையும் பசையையும், விசித்திரத் தன்மையையும் கண்டு அனுபவிப்பவர்கள், நான் சொல்லுவதை ஆதரிப்பார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

பாரதிதாசன் தமிழ்நாட்டின் பொக்கிஷம். அந்தப் பொக்கிஷத்தைத் தமிழர்கள் அனைவரும் போற்றுவார்களாக!

- வ.ரா.

---

# யுகக் கவிஞன் பாவேந்தன்

**கவியரசர் இளந்தேவன்**



காற்றுக்குக் கவிபாட ஆசை வந்தால்
கனகசுப்பு ரத்தினத்தின் வாசல் வந்தே
ஏற்றுக்கொள் மாணவனாய் என்று கெஞ்சும்;
இளந்தென்றல் தனைப்பரிசாய்க் கொடுக்கும்;
ஊற்றுக்குத் தமிழ்பேச ஆசை வந்தால்
உச்சரிக்கும் பாவேந்தன் பேரை; திராட்சைச்
சாற்றுக்குள் சுவையோடும்; இவன்தே கத்தில்
சந்ததமும் தமிழோடும் குருதி யாக!
பொங்கும்
உள்ளத்தில் அணுசக்தி உலையைக் கொண்ட
யுகப்புரட்சிக் கவிஞனிவன் கவிதை, கால
வெள்ளத்தைக் குடித்துத்தன் வேட்கை தீரும்!
விரல்பட்டால் மின்சார விருந்து வைக்கும்!
அள்ளத்தான் குறைந்திடுமா ஆழி வெள்ளம்?
ஆண்டுகளால் இவன் வயதை அளக்க லாமா?
உள்ளத்தால், உதடுகளால் தீண்ட ஒண்ணா
ஊழித்தீ அளக்கப்புல் அளவு கோலா?

பாவேந்தர் திரைப்படங்களுக்கு நேரடியாகப் பாடல் எழுதியிருக் கிறார். அவரது கவிதைத் தொகுதி களிலிருந்து தங்கள் படங்களுக்கேற்ற முறையில் உள்ள பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பல பட அதிபர்கள் பயன்படுத்தியுமிருக்கிறார்கள். அந்தப் பாடல்கள் மக்கள் மன்றத்தில் மாபெரும் வெற்றியைப் பெற்றிருக் கின்றன.

பஞ்சவர்ணக் கிளியில் ஒலித்த 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்னும் பாடலை முழங்காத நா உண்டா?

'சித்திரச் சோலைகளே' என்ற பாடல் வெள்ளித் திரையில் ஒலித்த பின்னர், நாட்டு மக்கள் அனை வரின் நாவிலும் ஒலிக்கத் தொடங் கியதல்லவா?

'துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா' என்னும் பாடல்-ஓர் இரவின் மூல மாக கடந்த 38 ஆண்டுகளாகத் தமிழகம் முழுதும் ஒலித்துக் கொண் டிருக்கிறது.

"சங்கே முழங்கு" என்ற பாடலைச் சிறுவர்களும் முழங்கி வருவதை நாம் பார்க்கிறோம்.

கலைத்துறையில் பாவேந்தரின் பங்கு கணிசமான அளவில் இருந் திருக்கிறது. பள்ளி ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், நூலாசிரியர், நாடகாசிரியர், மேடைப் பேச்சாளர் எனப் பல்வேறு பொறுப்புகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதால் கலைத்துறையின் முழுநேர ஊழிய ராகும் வாய்ப்பு பாவேந்தருக்குக் கிட்டவில்லை என்றாலும் கலைத் துறையில் அவர் ஆற்றிய பணி தனி முத்திரை பதித்துள்ளது! தமிழுக்குப் பெருஞ்சிறப்பை அளித்துள்ளது! தமிழரின் பெருமையை உயர்த்தி உள்ளது!

# பாவேந்தர் வாழ்விலே

★ *1891* ஏப்ரல் 29-ஆம் நாள் புதன்கிழமை, புதுச்சேரி கனகசபை - இலக்குமி அம்மையாருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் சுப்புரத்தினம்.

★ *1895*-இல் ஆசிரியர் திருப்புளிசாமி ஐயா விடம் ஆரம்பக் கல்வி பயின்றார்.

★ *1906*-இல் வித்துவான் தேர்வில் வெற்றி பெற்றார்; இளமையிலேயே கவி புனையும் திறமை பெற்றார்.

★ *1907*-இல் புதுச்சேரி மகாவித்துவான் ஆ. பெரியசாமி ஐயாவிடமும், பங்காரு பத்தரிடமும் இலக்கண- இலக்கியங்களையும், வேதாந்த சித் தாந்த பாடங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

*1908*-இல் புதுச்சேரி வேணு நாயக்கர் இல்லத்தில் பாரதியாரைக் காணும் வாய்ப்பைப் பெற்றார். பாரதியாரின் புலமையும் எளிமையும் கவிஞரைப் பெரிதும் கவர்ந்தன. பாரதியார் பாடச் சொல்லி, கவிஞர் பாடிய முதல் பாட்டு ''எங்கெங்குக் காணினும் சக்தியடா'' என்னும் பாட்டு.

★ *1909*-இல் அதாவது பதினெட்டாம் வயதில், காரைக்காலைச் சேர்ந்த நிரவி என்னும் ஊரில் அரசுப் பள்ளியில் ஆசிரியராக நியமனம் ஆனார்.

★ *1910*-இல் புதுச்சேரியில் தங்கி இந்தியப் புரட்சியில் ஈடுபட்ட அரவிந்தர், வ.வெ.சு. ஐயர், டாக்டர் வரதராஜுலு நாயுடு ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றார். பாரதியார் நடத்திய 'இந்தியா' என்னும் பத்திரிகையைப் பதிப்பிக்க மறைமுகமாக ஒத்துழைத்தார். பாரதியாரிடம் தாம் கொண்ட மதிப்பின் காரணமாக 'கனக சுப்புரத்தினம்' என்னும் பெயரை, பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். அந்தப் பெயர் பிரபலமாயிற்று, மற்றும் புதுவை கே.எஸ்.ஆர்., கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், கே.எஸ். பாரதிதாசன் ஆகிய பெயர்களில் பாடல்கள், கட்டுரைகள், தேசியப் பாடல்கள் எழுதி வரலானார்.

★ *1919*-இல் புதுவையைச் சேர்ந்த திருபுவனை என்னும் ஊர்ப்பள்ளியில் ஆசிரியராக இருக்கையில், பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயல் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு ஒன்றரை ஆண்டு சிறைத் தண்டனை பெற்றார். மத்தியில் விடுதலை அடைந்தார்.

★ *1921*-இல் புவனகிரிக்கு அடுத்த பெருமாத்தூர் பரதேசி முதலியார் மகள் பழநி அம்மாளைப் பாரதிதாசனுக்குத் திருமணம் செய்து வைத்தனர். தேசிய இயக்கம் தீவிரமாக இருந்த காலம். கதர்த் துணிகளைத் தோளில் சுமந்து தெருத்தெருவாக விற்பனை செய்தார்.

★ *1921*-இல் கவிஞருக்கு முதல் பெண் குழந்தை பிறந்தது. அதுவே சரசுவதி. தேச சேவகன், புதுவை கலைமகள், தேசோபகாரி, தேச பக்தன், ஆனந்த போதினி, சுதேசமித்திரன், துய்ப்ளேக் ஆகிய இதழ்களில் கவிதை, கட்டுரை, கதைகளை, கே.எஸ். பாரதிதாசன் என்ற பெயரில் எழுதினார்.

★ *1926*-இல் 'ஸ்ரீமயிலம் சுப்பிரமணியர் துதியமுது' என்ற சிறு நூலைக்கவிஞர் இயற்றினார். அதைப் புதுவையிலிருந்த காசி ஈ. லட்சுமண பிரசாத் வெளியிட்டார்.

★ *1928*-இல் கவிஞருக்கு இரண்டாவதாக ஆண் குழந்தை பிறந்தது. இட்ட பெயர் கோபதி. பின்னர் 'மன்னர் மன்னன்' என மாற்றிக் கொண்டார்.

★ *1929*-ஆம் ஆண்டு பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. பெரியார்



நடத்திய 'குடியரசு', 'பகுத்தறிவு' இதழ்களில் கதை, கட்டுரை, கவிதை எழுதத் தொடங்கினார். இந்தியாவிலேயே முதன் முதலில் 'குடும்பக் கட்டுப்பாடு' பற்றிப் பாடல் எழுதிய ஒரே கவிஞர் பாரதிதாசன் என்ற பாராட்டைப் பெற்றார்.

★ 1931-இல் கவிஞருக்கு மூன்றாவதாகப் பெண் குழந்தை பிறந்தது. இட்ட பெயர் வசந்தா. பின்னர் வேனில் என மாற்றப் பெற்றது.

★ 1934-இல் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்னும் நாடகத்தை எழுதினார். பெரியார் தலைமையில் நாடகம் அரங்கேற்றப்பட்டது.

★ 1935-இல் ஸ்ரீசுப்பிரமணியபாரதி கவிதா மண்டலம் கவிதை இதழ் தொடங்கப் பெற்றது. அதன் ஆசிரியர் பாரதிதாசன். இதழ் முழுதும் கவிதைகளாகவே திகழ்ந்தது.

★ 1946-இல் 'முல்லை' மாத இதழை முல்லை முத்தையா தொடங்கினார். அதன் ஆசிரியரும் உரிமையாளரும் அவரே. கவிஞர் அதன் ஆதரவாளர். கவிஞரின் கவிதையும், கவிஞரைப் பற்றிய சுவையான கருத்துகளும், அறிஞர் பலருடைய கட்டுரைகளும் தாங்கிச் சிறப்பாக வெளிவந்தது. வாசகர்களிடையே 'முல்லைக்கு' நல்ல வரவேற்பு காணப்பட்டது. 'முல்லையின் முயற்சியில் தமிழ்த் தாய் அரியாசனம் ஏறுவாள்'' எனத் தமிழ்ப் பெரியார் திரு. வி.க. பாராட்டுத் தெரிவித்தார்.

★ 1946-இல் கவிஞரைப் பற்றி முதன் முதலாக அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள், மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் ஆகியோரிடமிருந்து முல்லை முத்தையா பெருமுயற்சி எடுத்து, கட்டுரைகள், கவிதைகள், வாழ்த்துரைகள் சேகரித்துப் 'புரட்சிக் கவிஞர்' என்ற தொகுப்பு நூலை வெளியிட்டார்.



துணைவியார் பழனியம்மையாருடன் பாவேந்தர்

★ 1944-இல் கவிஞரின் மூத்த மகள் சரசுவதிக்கும், கட்டிபாளையம் கண்ணப்பருக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

## புதுமை பூக்கும்

பூவேந்தும் தேன்பாடல்! புயலாய்ச் சீறிப்
புதுவேகம் தரும்பாடல்! புரட்சிப் பாடல்!
பாவேந்தன் தமிழ்ப்பாடல் எழுச்சிப் பாடல்!
பழமைக்கு வெடிவைக்கும் வேட்டுப் பாடல்!
நாவேந்திப் பாமரரும் பாடு வாரேல்
நரம்பெல்லாம் இரும்பாகும்! இரத்த நாளம்
தீயேந்திச் சூடாகும்! சமுக மாற்றம்
திசையெட்டில் உருவாகும்! புதுமை பூக்கும்!

- கவிஞர் பல்லவன்

அந்நூலுக்கு நான்கு பதிப்புகள் வெளிவந்துள்ளன. முல்லைப் பதிப்பகத்தில் கவிஞருக்கு நிதி திரட்டி அளிப்பதற்காகக் கவிஞரிடம் அபிமானம் கொண்ட பலர் சேர்ந்து குழு அமைத்தனர். அறிஞர் அண்ணா பொருளாளராகவும், டி.என். ராமன், முல்லை முத்தையா செயலாளராகவும் இருந்தனர்.

1946 ஜூன் மாதம், 29-இல், சென்னை பச்சையப்பன் விளையாட்டுத் திடலில், நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில், கவிஞருக்கு இருபத்தையாயிரம் ரூபாய் நிதி அளித்துப் பொன் ஆடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்றது. அதை அறிஞர் அண்ணா அவர்கள் சிறப்பாகச் செய்தார்.

1946-இல் நவம்பர் மாதம் புதுவை அரசுப் பள்ளியில் முப்பத்தேழு ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்து கவிஞர் ஓய்வு பெற்றார்.

# தமிழ்நாட்டுப் புரட்சிக் கவி



**பாரதியாரின் பாடல்கள் தமிழ்மக்களின் உள்ளத்தில் சுதந்திர உணர்ச்சியை உண்டு பண்ணியது போல, பாரதிதாசனுடைய பாடல்கள் சமூகச் சீர்திருத்த உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டி வருகின்றன என்றால் அது மிகையாகாது. இனிய எளிய நடையிலுள்ள இவரது பாக்கள் படிப் போருக்கு இன்பம் பயக்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. மதங்களிலும், பழைய ஆசாரங் களிலும் ஊறிக் கிடந்த மக்களிடையே இவருடைய பாடல்கள் ஒரு பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கின்றன. ஆதலால் இவர் ஒரு புரட்சிக்கவி. அமெரிக்கப் புரட்சிக்கவி வால்ட் விட்மன். தமிழ்நாட்டுப் புரட்சிக்கவி பாரதிதாசன்.**

**-கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.**

★ *1950*-இல் யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை ஏற்பாட்டில், திருச்சியில் கவிஞருக்கு மணிவிழாக் கொண்டாடி, பொன்னாடை போர்த்தி, ஆயிரம் ரூபாய் நிதியும் அளிக்கப் பெற்றது.

★ *1951*-இல் கவிஞரின் இரண்டாவது மகள் வசந்தாவுக்கும், தண்டபாணிக்கும் திருமணம் நடைபெற்றது.

★ *1954*-இல் கவிஞரின் மூன்றாவது மகள் ரமணிக்கும், சிவசுப்பிரமணியத்துக்கும் திருமணம் நடைபெற்றது.

★ *1954*-இல் புதுவைச் சட்டமன்றத் தேர்தலில் கவிஞர் வெற்றி பெற்று, சட்டமன்றத்துக்குத் தலைமை வகித்தார்.

★ *1954*-இல் ஜூன் மாதம், கவிஞர் மகன் மன்னர் மன்னனுக்கும், சாவித்திரிக்கும், தேசபக்தர் கோவை அ. அய்யாமுத்து தலைமை யில் புதுவையில் திருமணம் சிறப்பாக நடை பெற்றது.

★ *1962*-இல் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில், சென்னையில் மூதறிஞர் ராஜாஜி அவர்களால் கவிஞருக்குப் பொன்னாடை அணி வித்துக் கேடயம் வழங்கப்பட்டது.

★ *1963*-இல் மகாகவி பாரதியார் வரலாற்றைத் திரைப்படமாகத் தயாரிக்கக் கவிஞர் முயன்றார். பாரதியாராகக் கவிஞரே நடிப்பதாக இருந்தார். முயற்சி வெற்றி பெறவில்லை.

★ *1964*- ஏப்ரல் மாதம், கவிஞருக்குத் திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. உடனே சென்னை பொது மருத்துவனையில் சேர்க்கப்பட்டார். *1964* ஏப்ரல் *21*-ஆம் நாள், கவிஞர் இயற்கை எய்தி னார். பாடிப் பறந்த குயில் மறைந்தது. தமிழுக்குப் பெரிய இழப்பு; மறுநாள் கவிஞரின் உடல் புதுவைக்குக் கொண்டு செல்லப்பட்டு, புதுவைக் கடற்கரையில் அடக்கம் செய்யப் பெற்றது.

★ *1965*-இல் புதுவை நகராட்சி, கவிஞர் நினைவு மண்டபத்தை எழுப்பியது.

★ *1968*-இல் ஜனவரி மாதம், சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில், தமிழக முதல் அமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்களின் முயற்சியால் சென்னைக் கடற்கரை யில் கவிஞரின் முழு உருவச்சிலை நிறுவப் பெற்றது.

★ *1969*-இல் கவிஞர் இயற்றிய 'பிசிராந்தையார்' என்ற நாடகத்துக்கு மத்திய அரசின் சாகித்திய அகாடமியினால் ஐயாயிரம் ரூபாய் பரிசு வழங்கப் பட்டது.

★ *1971* ஏப்ரல் மாதம் *29*-ஆம் நாள் புதுவை அரசு கவிஞரின் பிறந்த நாளை, அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடியது. புதுவை, பெருமாள் கோவில் தெருவில் இருக்கும் கவிஞரின் இல்லத் தைப் புதுவை அரசு விலைக்கு வாங்கி, கவிஞரின் குடும்பத்தாருக்கு உதவி புரிந்து, அந்த இல்லத்தைக் கவிஞரின் நினைவு நூலகமாகவும், காட்சிக் கூடமாகவும் ஆக்கியது.

★ *1975*-இல் தமிழக அரசு சென்னை ராஜாஜி மண்டபத்தில் கவிஞரின் முழு உருவ வண்ணப் படத்தைத் திறந்து வைத்தது.

★ *1978*-இல் பாரதிதாசன் பிறந்தநாள் விழா தமிழக அரசின் சார்பில் கொண்டாப்பட்டது. 'பாவேந்தர் விருது' அறிமுகம் செய்யப்பட்டது. முதன் முதலாக அந்த விருது உவமைக் கவிஞர் சுரதா அவர்களுக்கு வழங்கப்பட்டது. *1978* முதல் ஆண்டுதோறும் பாவேந்தர் விழாவைத் தமிழக அரசு கொண்டாடி வருவதுடன், பாவேந்தர் விருதையும் தொடர்ந்து வழங்கி வருகிறது.

★ *1982* ஏப்ரல் மாதம் *30*-இல் திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப் பட்டது.

★ *1990* டிசம்பர் மாதம் *15* அன்று பாவேந் தரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

— 'பாவேந்தர் பெருமை' என்ற நூலிலிருந்து.

***நிகரென்று கொட்டு முரசே-இந்த***
***நீணிலம் வாழ்பவ ரெல்லாம்;***
***தகரென்று கொட்டு முரசே-பொய்மைச்***
***சாதி வகுப்பினை யெல்லாம்!***

—பாரதியார்



# பாவேந்தர் போற்றிய பாரதம்

பாரதியார் 13.2.1906 சுதேசமித்திரன் இதழில் ஒரு விண்ணப்பம் விடுக்கிறார். ''எமது தாய்நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும், தமிழிலும் பல்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கிறேனாதலின் பண்டைத் தமிழ் நூல்களில் பாரதநாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்பு வார்களாயின் அவர்மாட்டு மிக்க கடப்பாடுடையவனாவேன். தமிழ்ப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் நாட்டுப் படலங்களில் நிடதம் கோசலம் முதலிய பகுதிகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் வருணனைகள் பயன்படமாட்டா. தற்காலத்தே தமிழ்ப் புலமையிற் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக 'தேசபக்தி'ப் பாக்கள் புனைந்துனுப்புவராயின் அவையும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.'' இவ்விண்ணப்பம் பாரதமணித்திருநாட்டைப் போற்றும் ஆங்கிலம், தமிழ் மொழிப் பாடல்கள் பலவற்றையும் தொகுத்துப் பதிப்பிப்பதிலும், புதிய தேசபக்திப் பாடல்கள் தமிழில் புனையப்பட வேண்டுமென்பதிலும் பாரதிக்கிருந்த மிகுந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றது. இதற்குப் பின்னரே 1907-இல் பாரதியின் 'வந்தே மாதரமென்போம்' 'எந்தையும் தாயும்', 'மன்னுமிமய மலை' என்னும் மூன்று தேசியப் பாடல்களடங்கிய முதல் வெளியீடு திரு. வி. கிருஷ்ணசாமி ஐயரால் இலவசமாக வெளியிடப் படுகின்றது. பின்னர் ''ஸ்வதேச கீதங்கள்' (1908) 'ஜன்மபூமி' (1909) தொகுப்புகள் வெளியாகின்றன. தொடக்கத்தில் தேசபக்திப் பாடல்கள் வேண்டுமென மற்றவர்களை நோக்கி விண்ணப்பம் விடுத்த பாரதியாரே மற்றவர்கள் எவரினும் பாரத நாட்டை 'வந்தனை கூறி மனத்தில் இருத்தி வாயுற வாழ்த்திப்' பாடுபவராக மலர்ச்சி பெறுகிறார். அவரை அடியொற்றிப் பாரதிதாசனும் பாரத நாட்டைப் பல பாடல்களில் பலவாறு போற்றுகிறார்.

'தெய்வீகத் தாய்நாடு' (தே.சே 7.11.1922) எனும் பாடல் பாரத நாட்டைத் தாயாக உருவகப்படுத்தி 'யோகத்தின் தாய் கொள்கை வேகத்தின் தாய் செய்யும் யாகத்தின் தாய்'', 'ஆறு சமயத்தின் தாய்', 'நாலு வேதத்தின் தாய்', 'நாலு சாதிக்குத் தாய்', 'சீதை, அசோதை, புத்தர், சித்தர், நாரதன், பகீரதன், சோழன், சேரன், கம்பன், விசயன்'' முதலிய பலருக்கும் தாய் எனப் பலபடப் பாராட்டுகிறது. ஓரிடத்தில் ''சீனச் சிங்கர்க்குத் தாய்'' எனக் குறிப்படுவது ஆராய்தற்குரியது.

'கொள்கைத் திருநாடு' (தே.சே. 20.2.1923) எனும் பாடல் 'நீத மன்னர், பல ஞானியர் இன்னுடல் நீத்த மண் இது', 'அந்த நாளில் கண்ணன், அருச்சுனன், வில்விதுரன், அறங்காத்தனர். விண்ணின் மதியொத்த பண்டைய வாழ்வை நினைத்தால் வீரம் உண்டாகு தென்தோளில்' எனப் பாரதியை அடியொற்றிச் சென்று,

கம்பன் அருள்கவி காளியின் நற்கன
வார்ந்ததும் இந்தத் தேசமே-எனில்
இம்பரிற் கோள்நிலை எண்குறி
யாவும்அப்
பாற்கர னாருப தேசமே''

எனப் பாரத நாட்டின் பெருமைகளைப் பேசுகிறது.

'நெஞ்சில் ஏறும் கனல் நிகர்த்த பாரதத் தேவி தனது ஆசையைப் பெருக வைக்கும் பாடல்களை அன்றாடம் பாடு' எனப் பாரதிதாசனை வேண்டுகிறாளாம். அவரும் பாரதத்தாரை நோக்கித் துன்பங்களைக் கண்டு மலைக்க வேண்டாம்'.

வாழ்விற் கலந்திருந்த இன்பம்-உங்கள்
வாய்க்குத் தவறிவிட்ட தென்றே-இந்தப்
போழ்தில் உரைக்குவரும் பேச்சில்-
உள்ள
போக்கில் மலைத்துவிட வேண்டா
ஆழ்ந்து மிதந்துவரும் மீன்கள்-கடல்
ஆழந்தனை மலைப்ப துண்டோ...


என வினவி,

வெள்ளம் மடைதிறந்த வாறே-உங்கள்
வீரர் நிலத்தில்வைத்த மோகம்-அதற்
குள்ள மனவுறுதி யோடே-அச்சம்
ஓட்டிப் பணிபுரிந்து வாழ்வீர்'

என வாழும் வகையை விளக்குகிறார் (தே.சே.29.5.23)

குறிப்பு: தே.சே. தேச சேவகன்

- முனைவர் இரா. இளவரசு அவர்களின் 'இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்' என்னும் ஆய்வு நூலிலிருந்து



## பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்!

**எனக்குக்குயிலின் பாடலும், மயிலின் ஆடலும், வண்டின் யாழும், அருவியின் முழவும் இனிக்கும்; பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்.**

**- தமிழ்த் தென்றல் திரு. வி. க.**

**தன்னுடைய கொள்கைக்கு மாறான கருத்தாயினும், கவிநயத்தில் மயங்கிப் போய், பாவேந்தரின் பாடலைப் பாராட்டினார் "வ.ரா." என்பதைத் தெரிவிக்கும் கட்டுரை இது:**

'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' என்று அறிஞர் அண்ணாவால் போற்றப்பட்ட வ.ராமசாமி அய்யங்காருக்கும், பாவேந்தருக்கும் இடையே 1935-ஆம் ஆண்டு வாக்கில் நடந்த ஓர் நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடுகிறார் புதுவை சிவம்.

# புரட்சிக் கவிஞரும் வ.ரா.வும்



## புதுவை சிவம்

பிரபல எழுத்தாளரான வ.ரா. அவர்கள், சங்கு சுப்பிரமணியன் என்பவரால் நடத்தப்பெற்ற 'மணிக்கொடி', 'சுதந்திரச் சங்கு' ஆகிய பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வந்தார். அப்போது கர்ப்பத்தடை பற்றி நாட்டில் கருத்துக்கள் உலவி வந்த நேரம். வ.ரா. அவர்கள் கர்ப்பத்தடை நம் நாட்டிற்குத் தேவையில்லை என்றும், அது மகா பாவமான செயலென்றும் கடுமையாக எதிர்த்துக் கட்டுரைகள் எழுதிவந்தார். தந்தை பெரியார் அவர்கள் அப்போதுதான் மேலைநாட்டுச் சுற்றுப் பயணம் முடித்துத் திரும்பியிருந்தார். வந்தவுடன் கருத்தடையின் அவசியம் பற்றித் தீவிரமாகப் பிரச்சாரம் நடத்தி வந்தார். அந்தக் கருத்தை ஆதரித்து 'பகுத்தறிவு' பத்திரிகையில் 'கர்ப்ப ஆட்சி' என்ற மிக நீண்ட கட்டுரை வெளிவந்தது. பின்னர் அது புத்தகமாகவும் குடியரசுப் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.

வ.ரா. அவர்கள் 'மணிக்கொடிக்குப்' பாடல் எழுதி அனுப்புமாறு அவ்வப்போது பாரதிதாசனுக்குக் கடிதம் எழுதுவார். கடிதத்தைப் படித்தவுடன் பாரதிதாசன் என்னிடம் கொடுத்து 'எதையாவது அனுப்பி வை' என்பார். நானும் மணிக்கொடிக்கென்று சில பாடல்களைத் தெரிவு செய்து அனுப்பி வைப்பேன். எந்தெந்தக் கருத்துடைய பாடலை எந்தெந்தப் பத்திரிகைகட்கு அனுப்புவது என்பது என் விருப்பம். பாரதிதாசன் எழுதிப் போட்டுவிடுவார். மற்றபடி இதிலெல்லாம் தலையிடமாட்டார். அடிக்கடி அவரைக் கவிதை எழுதித்தரும்படி தூண்டிக் கொண்டேயிருப்பேன். அதன்படி அவர் எழுதிப் போடுவதை பிரதி எடுத்துத் திருத்தமிருந்தால் அவரிடம் காட்டித் திருத்திக்கொண்டு பத்திரிகைகளுக்கு அனுப்பி வைப்பேன்.

ஒருமுறை வ.ரா.விடமிருந்து கடிதம் வந்ததும் அவர் அப்போது கர்ப்பத்தடையை எதிர்த்து வந்ததால், கர்ப்பத்தடையை ஆதரிப்பதான ஒரு கவிதையை அவருக்கு அனுப்ப வேண்டும் என்று நினைத்தேன். தேசியவாதிகளும், மதவாதிகளும் அப்போது கர்ப்பத்தடையை எதிர்த்து வந்தனர். சுயமரியாதை இயக்கம் கர்ப்பத்தடையை ஆதரித்து எழுதியதால் நாட்டில் இந்த விவாதம் சூடு பிடிக்கத் தொடங்கியது. எனவே, பாரதிதாசனிடம் கர்ப்பத்தடையை ஆதரித்து ஒரு கவிதை எழுது

---

## பாவேந்தர் பாடலையே பாடு!

**மலையாங்குளத்தான்**

**சாதிப் பிரிவினையைச் சாட, சுரண்டலிலா**
**நீதித் தடம் தேட, நெறிகூட-ஆதிக்கக்**
**கோலோய்ந்து வாடக் குடியரசைப் பார்நாட**
**பாவேந்தர் பாடலையே பாடு.**

**வையம் குடும்ப விளக்கொளி கொள்ளவும்நாம்**
**உய்ய இசையமுதம் ஊட்டியும்-செய்யதமிழ்த்**
**தாயீன்ற சான்றோர்நூல் சால்பெல்லாம்**
**போற்றிவரும்**
**பாவேந்தர் பாடலையே பாடு.**

---



பாவேந்தரின் குடும்ப நண்பர் குயில் சிவா.

மாறு கேட்டுக்கொண்டேன். அவரும் 'ஆகட்டும்' என்றார். இரண்டு மூன்று நாட்கள் சென்றபின் திடீரென்று உட்கார்ந்து எழுத ஆரம்பித்தார். மளமளவென அற்புதமான கவிதையொன்றைத் தீட்டி விட்டார். கர்ப்பத்தடைக்கு முரண்படுவோர் கூட அதைப் படித்தால் நிச்சயம் வேறுபடுவர். எனவே அதைப் படியெடுத்து வ.ரா. அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

மணிக்கொடியில் போட்டால் போடட்டும் இல்லாவிட்டால் வேறு பத்திரிகைக்கு அனுப்பு வோம் என்று நினைத்திருந்தேன். அடுத்த வாரம் 'மணிக்கொடி' வந்தது. வ.ரா.விடமிருந்து ஒரு கடிதமும் வந்தது. கடிதத்தைப் பாரதிதாசனிடம் கொடுத்துவிட்டு மணிக்கொடியைப் பிரித்துப் பார்த்தேன். அதில் அக்கவிதை முக்கிய இடம் கொடுத்து வெளியிடப்பட்டிருந்தது. அவசரமாக அதைப் பாரதிதாசனிடம் 'இதோ பாருங்கள் என்று காட்டினேன். அவர் 'இதிலியா வந் திருக்கு?' என்று கேட்டபடியே 'இதைப் பார்' என்று வ.ரா.வின் கடிதத்தைக் கொடுத்தார். வ.ரா. கருத்தடையைப் பற்றித் தான் ஏற்றுக்கொண்ட கருத்து மாற்றம் அதில் புரிந்தது. மேலும் அவர் அக்கடிதத்தில்,

''காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்''

என்ற அடியைச் சுட்டிக் காட்டி, ''இதுவரை யான் கொண்டிருந்த எண்ணத்தை இவ்வரிகள் மாற்றி விட்டன. இனி நான் கருத்தடைக்கு விரோதி அல்ல'' என்றும், கவிதையை மிகவும் புகழ்ந்தும் எழுதியிருந்தார்.

பாரதிதாசன் மிகுந்த மகிழ்ச்சியுடன் 'எப் படிப்பா உனக்கு இவனுக்கு அனுப்பனும்னு தோணுச்சு' என்று மிகவும் பாராட்டினார்.

## 'பாரதிதாசன்' என்ற புனைபெயர் ஏன்?

'கனகசுப்புரத்தினம்' எப்படிப் பாரதிதாசன் ஆனார் என்பது குறித்துப் பிற்காலத்தில் பலரும் பலவிதமாக விளக்கம் தரக்கூடும் என்று கருதியோ என்னவோ, புரட்சிக் கவிஞரே அதற்கான காரணத்தை எழுதிவிட்டுச் சென்றிருக்கிறார்.

புதுவையில் உள்ள 'பாரதிதாசன் நினைவகத்'தில் உள்ள ஆளுயர வெள்ளைப்பலகையில், காணப்படும் நீல எழுத்துகள் அதை நமக்கு அறிவிக் கின்றன; இதோ அது:

"நான் பாரதிதாசன் என்ற புனைபெயர் வைத்துக் கொண்டுள்ளேன்.

அதற்குக் காரணம்:

அப்போது அவர் என் னுள்ளத்தில் முதலிடம் பெற்றிருந்ததுதான். சாதிக் கொள்கையை நன்றாக உண்மையாக எதிர்த்தவர் பாரதியார்தாம்! அவருக்கு முன், பன்னூற்றாண்டு களுக்கு முன் அவ்வாறு சாதிக் கொள்கையை எதிர்த்தவரை நான் கண்டதில்லை.

பாரதி எதிர்த்துப் பணி புரியத் தொடங்கிய பன் னாட்களுக்குப் பின்னரே பெரியார் இயக்கம் தோன் றியது. பாரதியாரை நான் ஆதரித்ததும், பாரதி தாசன் என்று நான் புனை பெயர் வைத்துக் கொண்ட தும், ஏதாவதொரு கூட் டத்தாரிடம் நன்மையை எண்ணியன்று.

சாதி ஒழிப்பு விளம்பரம் ஆதல் வேண்டும் என்பதற் காகவும், பாரதியாரைப் போல எளிய நடையில் மக்களுக்கு இன்றைக்கு வேண்டிய கருத்தை வைத் துப் பாடல் இயற்ற வேண் டும் என்பதைப் புலவர்க்கு நினைவூட்ட வேண்டும் என்பதற்காகவுமே!"

—பாரதிதாசன்





# உலக மகாகவி பாரதி



**பாவேந்தர் பாரதிதாசன்**

பாரதியார் 1906-இல் தான் புதுச்சேரிக்கு வந்தார். இன்னும் வ.வெ.சு.ஐயர், திருவல்லிக்கேணி சீனுவாச ஆச்சாரியார், அரவிந்த கோஷ் முதலியோரும் வந்தனர். இவர்களுக்கெல்லாம் சுதேசிகள் என்று பாண்டியில் பெயர்.

அரவிந்தர் - வ.ரா. முதலியோர் ஒரு குழு.

வ.வெ.சு. ஐயர் முதலியோர் ஒரு குழு.

பாரதி, நான் முதலியோர் ஒரு குழு.

சீனுவாசாச்சாரியார் எதிலும் இருப்பார்.

மூன்று குழுக்களும் வெவ்வேறாக இருந்தன.

அரவிந்தர் முதலியோர் தமிழென்று ஒரு மொழி இருப்பதையோ, அதைப் பற்றி நினைப்பதையோ அறியாதார்.

வ.வெ.சு. ஐயர் வர்ணாஸ்ரமம் உண்டு என்றால் தமிழைப் போற்றத் தயார்.

பாரதியார் தமிழிலேயே வாழ்ந்தார். அன்றைய நிலை அப்படி. பாரதியார் பார்ப்பனராக இருந்தாலும் தமிழைப் போற்றினார். காரணம், அவர் தமிழ்ப் புலவரின் மகன் என்பது தான். பாரதியார் முதலில் பாடி ஆரம்பித்தது காவடிச் சிந்து தான். புரியும்படி காவடிச் சிந்து அமைவதே காரணம்.

அரவிந்தர் ஆங்கிலத்தில் - 'Asia' பத்திரிகை ஆரம்பித்தார். ஆனால், பாரதியாரோ தமிழில் ''இந்தியா'' பத்திரிகை ஆரம்பித்தார். தமிழை பாரதி இப்படிப் போற்றினார்.

இங்கே எனக்கு முன் பேசிய விவேகானந்தா கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் மா. ராசமாணிக்கம் அவர்கள் என்னைப் பாரதியாரைப் பற்றி ''நான் கண்ட பாரதி'' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதும்படி கேட்டார். இதேபோல் முன்பே தினசரி ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம் கேட்டார். நான் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். அது ஆயிரம் பக்கங்கள் வரும்.

பாரதியார் தமிழ்ப்பற்றுடையவர், தமிழுக்கு உயிர் உண்டாக்கினார். எல்லோருக்கும் புரியும்படி எழுதினார். பாடினார். அதற்குப்பிறகுதான், அரவிந்தகோசுக்குத் தமிழ் என்று ஒன்று இருப்பதாகப் புரிந்தது. வ.ரா. முதலானோர் தமிழ்ப் புத்தகங்களைத் தேடிப் படித்தனர்.

பாரதியாருடைய முக்கிய கொள்கை ஜாதி ஒழிப்பு. அதுதான் அவரிடம் இருந்த சிறந்த கொள்கை, குறிப்பிட்டுப்பேச வேண்டிய கொள்கை.

பாரதியார் பார்ப்பனர். தெரிந்தும் சொன்னார் 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று. தமிழில் நல்ல எளிய தமிழில் எல்லோருக்கும் புரியும்படி இதைச் சொன்னார். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சந்தோஷம் கூட.

நான் அப்பொழுது பாண்டிச்சேரியில் வாத்தியார் வேலையில் இருந்தேன். அப்போதே சில பத்திரிகைகளில் கட்டுரைகளும், பாட்டுகளும் எழுதி அனுப்புவது வழக்கம். அப்போது நான் உத்தியோகத்தில் இருந்து கொண்டு இக்காரியம் செய்வது உத்தியோகத்திற்குத் தொல்லை தரும். யாராவது செய்வார்கள் என்று கருதி நான் ஓர் புனை பெயர் வைத்துக் கொள்ள விரும்பினேன். அப்போது என் கண் முன்னே 'சூத்திரனுக்கு ஒரு நீதி, தண்டச் சோற்றுப் பார்ப்புக்கு ஒரு நீதி' என்று கேட்ட பாரதியார், பார்ப்பனராய் இருந்தும் பயப்படாது தீமை வருமென்று தெரிந்திருந்தும் திகைக்காது, தமிழில் புரியும்படி சொல்லிய பாரதியார் தான் நின்றார். உடனே பாரதிதாசன் என்று புனை பெயர் வைத்துக் கொண்டேன். நான் அவருக்கு, அந்தப் புண்ணியவானுக்கு - தன் குலத்தார் எதிர்ப்பையும் பொருட்படுத்தாத புண்ணியவான் பாரதிக்குத் தாசனாக இருப்பதில் ஒன்றும் தவறில்லை என்று கருதுகிறேன்.

அவர் ஈசுவரன் கோயில் தெருவில் குடியிருந்தார். அப்போது அவர் மகளுக்குக் காய்ச்சல் வந்தது; டாக்டர் அம்பு வந்தார். விஷக் காய்ச்சல் என்று கூறினார். அவர்கள் வீட்டில் ஒரு கேணி இருந்தது. அதைப் பார்த்தார். அதில் சூரிய ஒளி படவில்லை என்றார். வேறு வீடு வேண்டும். என்ன செய்வது? என்ன நடந்தது என நினைக்கிறீர்கள்? சுமார் ஒன்றரை மணி நேரத்திற்குள்

**'உலக மகாகவி' என்று மாக்கவி பாரதியைப் போற்றினார். புரட்சிக் கவி. அவரது அழுத்தமான கொள்கைகளை - ஆணித் தரமான வாதங்களை அழகாக வடித்துக் காட்டுகிறார் பாவேந்தர்.**

## காசுக்கடை அசெம்பிளித் தொகுதியில்



### கவிஞர் பாரதிதாசனுக்கு

## யானைப் பெட்டியில்

ஓட்டு அளித்து ஆதரியுங்கள்!

**புதுவையில், புரட்சிக் கவிஞர் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட போது அச்சிடப்பட்ட சுவரொட்டி *(1954)*.**

ளாகவே அவர் வீட்டுக்கு எதிர் வீட்டில் குடியிருந்தவர்கள் காலி செய்யப்பட்டு, பாரதியார் குடியேறினார், எப்படி முடிந்தது? யார் வீடு அது தெரியுமா?

பெத்தாச்சி செட்டியார் வீடு அது. அவருக்குப் பாரதியார் அளித்த பெயர் விளக்கெண்ணெய்ச் செட்டியார் என்பது. அதில் குடியிருந்தவர் ஒரு சி.ஐ.டி.

அப்படிப்பட்ட செட்டியாரிடம், (செட்டியார் பண விஷயத்தில் மகா கண்டிப்புக்காரர்) முன் பணம் கட்டி, அங்கிருந்த சி.ஐ.டி. அவர்களைக் காலி செய்து குடியேற்றினோம். யார்? நானும் என் போன்ற தோழர்களும்.

எப்படி? எங்களுக்கு இருந்த எண்ணமெல்லாம், பாரதி வருத்தப்படக் கூடாது. அவர் மகளுக்குக் காய்ச்சல்; கேணி நல்லதல்ல, வீடு மாற்ற வேண்டும்; உடனே சென்றோம். காலி செய்யச் சொன்னோம். பயந்தே காலி செய்தனர்.

அவர் சுதேசமித்திரன் பத்திரிகையில் வேலை பார்த்தபோது, 'வெளிநாட்டு விஷயங்களை மிக நன்றாக மொழிபெயர்த்தார். சைனாவுக்குப் பக்கத்திலே ஒரு தீவு பற்றிய செய்தி வெளிவந்தால் அது எங்குள்ளது என்பது பற்றிய குறிப்பு பிராக்கட்டுக்குள் – 'அடைப்புக் குறிக்குள்' அடங்கியிருக்கும். இது தற்காலத்து உதவி ஆசிரியர்கள் அறிய வேண்டிய செய்தி.

தமிழில் புதுமுறையில் மக்களுக்குப் புரியும்படி நூல் எழுதியவர் பாரதியார் தான். அதற்கு முன் புலவர்கள் ஒரே பொருள் பற்றிப் பலநூல்கள், ஒரே முறையில் எழுதுவார்கள்.

கலம்பகம் என்றால், திருவருணைக் கலம்பகம், புதுவைக் கலம்பகம் என்று போகும். அடுத்தாற் போல் அந்தாதி என்று பல நூல்கள், மற்றும் அம்மானைகள் இப்படித்தான். புதுமுறையோ, புதுப்பொருள் பற்றிய நூல்களோ கிடையாது. தைரியமில்லை. இந்த வழியில் புதுமுறைக்கு எடுத்துக்காட்டு சிந்து: இதில் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்து பாரதியாரை மிகவும் கவர்ந்தது.

**(சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 6.9.1949-இல் நடைபெற்ற விழாவில், தலைமையேற்று ஆற்றிய உரையிலிருந்து, இந்தப் பகுதியானது அறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'மாலைமணி' நாளேட்டில் 8.9.1949-இல் வெளியிடப்பட்டது.)**

**வளரும் இளம் ஓவியர்**



**'வளரும் பயிர் முளையிலே தெரியும்' என்பார்கள்; அந்த வகையிலே குறிப்பிடத்தக்கவன்தான் வளரும் இளம் ஓவியன் எச்.விஷ்ணு தாஸ். 12 வயது நிரம்பிய இவன் புதுவை பெத்தி செமினரி மேனிலைப் பள்ளியில் 8-ஆம் வகுப்பு பயில்கிறான். 5 வயதிலிருந்தே ஓவியம் வரைய ஆரம்பித்த இவன், மாநில அளவிலான பல போட்டிகளில் பல முறை முதல் பரிசினைப் பெற்றுள்ளான்.**

**களிமண் உருவங்கள் செய்வதில் திறமைமிக்க இம்மாணவனது பேட்டி, சென்னைத் தொலைக்காட்சி, 'கண்மணிப் பூங்கா' நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகியுள்ளது.**

**இம்மாணவன் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு:**



**நீங்கள் இங்கே காணும் பாரதிதாசன் உருவமாகும். புதுவையில் கடற்கரையில் இருக்கும் சிலையைப் பார்த்து, இம்மாணவன் களிமண்ணில் செய்த சிறிய உருவமே இது.**

# மரக்காலும் மண்ணாங்கட்டியும்!

**-கலைமாமணி டாக்டர் மன்னர் மன்னன்.**

**கற்பனை என்னும் முரட்டுக் கம்பளியில் புகுந்து கொண்டு தன் உடலுக்கு மட்டும் சூடேற்றி, வீசுகின்ற வாடைக் காற்றினின்று தப்பித்துக் கொள்ள முயன்றவரல்லர் பாவேந்தர். தாம் கண்ணுற்றதைத் தம் நெஞ்சின் வழி உன்னிப் பார்த்துச் சமுதாயக் கேடுகளை நீக்கும் சம்மட்டியாய் மாறியவர் பாவேந்தர்.**

மரக்கால்-மண்ணாங்கட்டி- பாவேந்தர் தமது நாடகங்களில் உலவ விட்ட இரண்டு நாடக மாந்தர்களின் பெயர்கள் இவை.

பிள்ளை பிறந்து பிறந்து இறந்து போனபின், பிறக்கும் குழந்தைக்குக் குப்பன், குப்பாயி என்றும், மண்ணாங்கட்டி எனவும் பெயர் சூட்டி, அதனைத் தக்க வைத்துக் கொள்ள முயல்வது புதுவைப் பகுதியில் நிலவும் நம்பிக்கை.

குழந்தையே பிறக்காமல் இருந்து நீண்டகாலம் காத்திருந்து, ஏதோ தெய்வ வழிபாட்டின் பயனாய்ப் பிறந்தது என்ற கருத்தில் பிச்சை, பிச்சாண்டி என்ற பெயரிடுவதும் சில மாவட்டங்களில் வழக்கம்.

இவ்வாறு எந்தப்பழக்க வழக்கத்திற்கும் நம்பிக்கைக்கும் உட்படாத மரக்கால் எனும் பெயரையும், மண்ணாங்கட்டியையும் தம் நாடக மாந்தர்களாக்கித் தம் ஆழ்ந்த கருத்தினைப் பாவேந்தர் புலப்படுத்தி இருக்கிறார் என்றெண்ணத் தோன்றுகிறது.



''படித்த பெண்கள்'' நாடகத்தில் வருகிறான் மரக்கால். மகிழ் உந்து ஓட்டுவது இவன் வேலை. இகழ் ஒன்று, தான் பணிபுரியும் குடும்பத்திற்கு வருவதாயின் அதனைத் தடுத்துப் புகழ் சேர்க்கும் இனிய நெஞ்சம் இவனுக்கு. யாரையும் ''எடுத்தேன் கவிழ்த்தேன்'' என்று பேசுவான். ஆனால் நகைச் சுவை ததும்பும் அவன் பேச்சில் !

தனக்கு ஏன் இப்படிப் பெயரிடப்பட்டது என்று அவனே விளக்குகிறான்: ''ஒரு காரணமா வச்ச பேருங்க இது. ஆராவது எங்கியாவது போனா கூடப் போவுது பாருங்க அது என்னாங்க, நாயி; அந்த நாயை எங்கப்பா மரக்காலால் அடிச்சாருங்க, அப்பத் தானுங்க நான் பொறந்தேன். அதோட்டு எம் பேரு மரக்காண்ணு வச்சிட்டாராம் எங்கப்பா.'' விளக்கமா இது! விலா நோகச் சிரிக்க வைக்கும் குறிப்பு! ஆயினும் இதில் சீரிய கருத்தொன்று புதைந்திருக்கிறது. பெயர் வைப்பதில் எந்த விதமான கூரிய நோக்கும் இருக்கவில்லை என்பது ஒன்று. நாய், ஒருவரைப் பின்பற்றி வளைய வரும் பழக்கம் உடைய விலங்கு. ''படித்த பெண்கள்'' நாடகத்தில் க்தைத் தலைவன் பொன்னனோடு அடிக்கடி வெளியூர் செல்லும் பாத்திரம். ஒன்றைச் சுட்டிக் காட்டுவதோடு, தானும் அந்தப் பொன்னனுடன் செல்வதையும் உணர்த்துமாறு உள்ளது. நன்றிக்குக் குறியீடாக நாய் விளங்குவதே போல் இந்த மரக்காலும் விளங்குகிறான்!

மிக அதிகமாகக் குறுக்கிட்டுப் பேசும் பழக்கம் உடைய மரக்கால்,

''என்னடா நீ ஒரு பக்கம் குளறிக் கொட்டுகிறாய்'' என்று பொன்னன் கேட்கையில்,

''அதுவா கொட்டிக்கிச்சிங்க'' என்று விடையளிக்கிறான்.

முகத்தல் அளவையில் மாகாணி, படி, மரக்கால் என்பன பண்டைக்காலந்தொட்டு தமிழகத்தில் புழங்கி வருகின்றன.

இரண்டு படி மரக்கால், நான்கு படி மரக்கால் என்றெல்லாம் உண்டு.

''என்ன உன் பாட்டுக்கு படியாலும் மரக்காலாலும் அளக்கிறாய்?'' என்று கேட்டால், பொய் அளவின்றிச் சொல்லப்படுவதாகப் பொருள்படும் அன்றோ?

இப்படிப் பொய்க்குக் குறியீடாகிவிட்ட ஒரு பெயரை எதற்குச் சூட்டினார் பாவேந்தர்,

அளவின்றி அடிக்கடி பேசுகிறான். இடக்கு மடக்காக எதையாவது பொடி வைத்துப் பேசுகிறான்.

சில நேரங்களில், உண்மையில்லாததையும் சொல்லுகிறான். ஆனால் இவன் சொல்லும் ஒரு துளிப் பொய் கூட, தீமை எதையும் ஏற்படுத்த

வில்லை என்பது நாடகத்தைப் படித்து முடித்த வுடன் நமக்குத் தெரிய வருகிறது.

'பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்'

— என்ற குறட்பாவுக்கு இலக்கணமாய்ப் பொலி கிறான், மரக்கால்,

பொன்னனின் பெண்ணாசை ஒரு நாள் பொங்கிப் புயலாகிக் கரைகடக்கிறது. கட்டை உடைத்துப் புறப்பட்டான், மரக்காலின் மனைவி யிடமே தன் கைவரிசையைக் காட்டுகிறான். தடுத்துக் கொள்கிறாள் பொன்னனின் மனைவி. அவளும் மரக்காலும் பின் ஒருகால் தக்க சமயத் தில் பொன்னனைத் திருத்தி நல்வழி சேர்க்கின்றனர்.

பொன்னாசை கொண்ட பொன்னன், தன் தம்பியைக் கொன்று விட்டு அவனின் சொத்தைக் கவரத்திட்டமிடும் போது, அவனுக்கு உடன்பட்ட வன் போல் நடித்துத் தம்பியைக் காத்து அண்ண னின் மனம் திருந்தச் செய்கிறான். பொன்னனின் மனைவிக்கும் அவளின் உடன் பிறந்தாளுக்கும் உற்ற காவலனாகவும் மரக்கால் தொண்டு செய்து தலைசிறந்த சமுதாய சீர்திருத்தவாதியாய்த் துலங்கு கிறான்.

இப்படிப்பட்ட தூய நெஞ்சம் கொண்ட வனுக்கு மரக்கால் என்று பெயர் வந்த காரணம் என்ன என்று முதலில் நமக்கு விளக்கிய பாவேந்தர், நன்றியில் நாயாக மட்டுமின்றி நற்குண நாயக னாகவும்சித்திரித்துக் காட்டுகிறார்.

'அதிகம் பேசும்' மரக்கால் இவ்வாறு எனில், பேச்சு அறவேயில்லாத செயல் வீரன் 'மண்ணாங் கட்டி' அமைதி நாடகத்தில் இடம் பெற்றுப் பொன்னாங்கட்டியாகப் போற்றப்படுகிறான்.

மண்ணாங்கட்டி - எதற்கும் பயன் படாத எள்ளலுக்குரிய பொருள்.

ஆனால், பாவேந்தரின் மண்ணாங்கட்டியோ தனக்கு மட்டும் பயனற்றவன். பிறரின் நலனுக் காகத் தன்னைக்கரைத்துக் கொண்டவன்.

அவனின் ஒவ்வோர் அசைவிலும் ஊர் நலம், உயர் நோக்கம்! சூழ்ந்து வினையாற்றும் இவன், பேசுவதேயில்லை. சொந்தச் சுகத்தை எண்ணு வதே இல்லை.

இவ்விரு மாந்தர்களையும் படிக்கும் போதெல் லாம் என் கண்முன் 'குயில்' சிவாவின் உருவம் வந்து நிற்கும்.

நகைச்சுவை இழையோடும் பேச்சும், நல்ல நோக்கத்தில் வீச்சும் உடைய சிவா என்ற சிவப் பிரகாசர், எங்கள் குடும்ப நலனில் அளப்பரிய அக்கறை உடையவர். எவரையும் எள்ளி நகை யாடுவார், எதிரியைப் பந்தாடுவார் தம் வினை யாற்றும் திறனால்!

பாரதியாரால் 'குயில்' என்ற செல்லப் பெயர் சூட்டப்பெற்றவர்.



பாவேந்தர் குடும்பத்தவர்

இவரே மரக்காலோ என்று எண்ணுவதற்கு எண்ணற்ற நிகழ்ச்சிகள் உண்டு.

'படித்த பெண்கள்' நாடகத்தில், மரக்கால் சூழ்ந்து வினையாற்றும் பகுதிகள், சிவாவும் பாவேந் தரும் தம் வாழ்க்கையில் ஆற்றியவையே என்று கூறச் சான்றுகள் உண்டு.

மண்ணாங்கட்டி - ?

பாவேந்தர் நெட்டப்பாக்கம் சிற்றூர் மக்களின் நலம் காக்கத் தம் ஈடுபாட்டை எவ்விதம் காட்டி னாரோ - எந்த மனத்துணிவுடன் செயல்புரிந் தாரோ அவற்றை ஒத்திருக்கின்றன.

கற்பனை என்னும் முரட்டுக் கம்பளியில் புகுந்து கொண்டு தன் உடலுக்கு மட்டும் சூடேற்றி, வீசுகின்ற வாடைக்காற்றினின்று தப்பித்துக் கொள்ள முயன்றவரல்லர் பாவேந்தர்.

தாம் கண்ணுற்றதைத் தம் நெஞ்சின் வழி உன்னிப் பார்த்துச் சமுதாயக் கேடுகளை நீக்கும் சம்மட்டியாய் மாறியவர் பாவேந்தர்.

அவரின் படைப்புகளின் வீச்சு, தன்னலம் அற்ற சமுதாயத்தைப் படைத்திட வழி கோலட்டும். அவரின் படைப்புகள் என்றென்றும் மன மாசும் தூசும் துடைத்து மக்களின் மேம்பாட்டுக்கு வழி காட்டட்டும்!

# கவிஞரின் கடமையுணர்வும் காலந்தவறாமையும்

புதுவை ஆர்.எஸ்.டி. மூர்த்தி

**பாவேந்தர் அவர்களின் காலந்தவறாமை, கட்டுப்பாட்டுணர்ச்சி, அவர் மக்கள் பால் வைத்திருந்த பெருமதிப்பு ஆகியவற்றை விளக்கும் நிகழ்ச்சி.**

குடந்தை திரு. ஆர்.பி. சுந்தரம் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் நம்பிக்கைக்குரிய பிரமுகராவார். ஒருமுறை அவரை நேரில் காணக்குடந்தை சென்றேன். எனக்கும், பாவேந்தர் பாரதிதாசனுக்கும் உள்ள தொடர்பும், நெருக்கமும் அவருக்கு நன்றாகத் தெரியும்.

எனவே, குடந்தை அரசினர் கல்லூரியில் நிகழ இருக்கும் ஒரு இலக்கிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ''திருக்குறள்'' பற்றிச் சிறப்புரை ஆற்றுவதற்காக எப்படியும் கவிஞரை அழைத்துக் கொண்டு வரவேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொண்டார். நானும் அடுத்த புகைவண்டியிலேயே புறப்பட்டுப் புதுவைக்கு வந்து சேர்ந்தேன். கவிஞரைநேரில் கண்டு நிகழ்ந்த செய்தியைச் சொன்னேன். அவர்களும் அப்படியா! சரி-புறப்படுவோம் என்று மகிழ்வுடன் கூறினார்கள். அன்றிரவே நாங்களிருவரும் குடந்தை சென்றடைந்தோம்.

குடந்தை ஆர்.பி. சுந்தரம் அவர்களின் வீட்டுக்கருகிலேயே, தஞ்சை பரிசுத்த நாடார் அவர்களின் பூந்தோட்டம் ஒன்றிருந்தது. அதன் மையப் பகுதியில் அழகான வீடு ஒன்று, அதில் தான் தி.க. பிரமுகரும், பாவேந்தர் பால் மிகுந்த பற்றும் ஈடுபாடும் கொண்ட திரு எஸ்.கே. சாமி அவர்கள், குடும்பத்துடன் தங்கியிருந்து பூந்தோட்டத்தையும் பராமரித்து வந்தார்கள். கவிஞர் அவர்கள் குடந்தை செல்லும் போதெல்லாம் அப்பூந்தோட்ட வீட்டில் தான் தங்கியிருப்பார்கள். அதிலே அவருக்கு அவ்வளவு மகிழ்ச்சி. அந்த வீட்டில்தான் இம்முறையும் நாங்கள் போய்த் தங்கினோம்.

பகலுணவை முடித்துக் கொண்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபொழுது கல்லூரி மாணவர்கள் சிலர் திரளாக வந்து, மாலை 6 மணிக்கு நிகழ்ச்சி நடக்க இருப்பதாகவும், அதில் கவிஞர் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றி நிகழ்ச்சியைச் சிறப்பித்து நிறைவு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். கவிஞர் அவர்களும் அம் மாணவர்களிடம் சிறிது நேரம் மனங் கலந்து அளவளாவிவிட்டு, ''சரியாக 5,30 மணிக்கு நான் கல்லூரிக்கு வந்து விடுகிறேன். துல்லியமாக 6



ஆர்.எஸ்.டி.மூர்த்தி

மணிக்கு நிகழ்ச்சியைத் தொடங்கி விட வேண்டும். இந்நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு உடனே திருச்சி செல்ல வேண்டும். மறுநாள் திருச்சியில் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால், எந்தவிதமான காரணங்கொண்டும் சிறிதுகூட எதிலும் காலதாமதம் ஏற்பட்டுவிடக் கூடாது'' என்று கண்டிப்பாகச் சொல்லி அனுப்பினார்கள். மாணவர்களும் 'சரி ஐயா', என ஒத்துக் கொண்டு விடை பெற்றார்கள்.

சொன்னவாறே சரியாக 5.30 மணிக்கு கவிஞர் அவர்களும் நானும் கல்லூரிக்குச் சென்றோம். மாணவர்களும் மற்றவர்களும் அன்பாக எங்களை உபசரித்து ஒரு கூடத்தில் அமரச் செய்தார்கள். அங்கு பல பிரமுகர்களுடன் பலவகையான செய்திகளைப் பேசிக் கொண்டு இருந்தோம். மணி 6 ஆயிற்று; 6-30-ம் ஆயிற்று, பேச்சு மேடைக்கு வரும்படி எங்களை யாருமே வந்து அழைக்கவில்லை. கவிஞருக்கு மன நிலை மாறிவிட்டது. உடனே கவிஞர் என்னைப் பார்த்து ''என்ன இது? நாழியாகிறதே! என்னவென்று பாருங்கள்'' என்றார்கள். நான் மேடைப் பகுதிக்குச் சென்று பார்த்தேன். அங்கு இரசிகமணி டி.கே. சிதம்பரநாதனார் அவர்களின் சொற்பொழிவு நடந்து கொண்டிருந்தது. அவர் பேசும் தோரணையைப் பார்த்தால் அவ்வளவு விரைவாக முடிப்பவராகத் தெரியவில்லை. இந்த நிலைமையை வந்து கவிஞரிடம் சொன்னேன்.

கவிஞர், உடனே சினங்கொண்டு, புறப்பட்டுவிட்டார்கள். இந்நிலைமையைப் புரிந்து கொண்ட சில மாணவர்கள் வந்து கவிஞர் அவர்களைத் தடுத்து நிறுத்தி ''ஐயா, மற்றொரு பகுதியில் திறந்த வெளிநாடக மேடை அமைந்திருக்கின்றது. நாடக மேடையில் மக்கள் நிறையக் கூடியிருக்கிறார்கள். அங்கே வந்து இரண்டொரு கருத்துக்களைச் சொல்லுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

'அப்படியா, இதோ வரேன் '' என்று சொல்லி நாடக மேடைக்குப் போனார். அங்கே மக்கள் நிறையப் பேர் திரண்டிருந்தார்கள். அம் மக்களைப் பார்த்து, கவிஞர் ''உங்கள் மனத்தை நிறைவு செய்ய முடியாத நிலையை இங்கு நிகழ்ச்சி நடத்துபவர்கள் உண்டாக்கி விட்டாங்க. 6 மணிக்கு திருக்குறள் பற்றிப் பேச வேண்டும் என்று என்னைக் கூப்பிட்டு விட்டு மாலை 6.45 ஆகிறது. அந்நிகழ்ச்சியை இதுவரையில் துவக்காமல் காலம் கடத்துவதற்காக

இப்போது நாடக மேடையில் வந்து என் கருத்தைச் சொல்லச் சொன்னால், நான் என்ன சொல்ல முடியும்? இப்போதுள்ள நிலையில் இதுதான் என் கருத்து. நிகழ்ச்சி நடத்துபவர்கள் இதையெல்லாம் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். எங்களுக்குப் பல இடங்களில் பல நிகழ்ச்சிகள் இருக்கலாமல்லவா? அதில் காலத்தோடு சென்று கலந்து கொள்ள வேண்டாமா? கலந்து கொள்ளவில்லையென்றால், எதிர் பார்த்துக் காத்திருக்கும் மக்கள் என்னை நினைப்பார்கள்? மக்களை ஏமாற்றலாமா? மாணவர்கள் இனியாவது இதையெல்லாம் நன்கு சிந்தித்துச் செயல்பட வேண்டும். இதோ இப்பொழுதே நான் திருச்சிக்குப் போயாக வேண்டும்'' என்று புறப்பட்டு விட்டார்கள்.

நகரத்திற்கும் கல்லூரிக்கும் இடையே ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றின் மேலமைந்த சிறு ஒற்றையடிப் பாலத்தின் மேல் நடந்து போய்க் கொண்டிருந்தார். அப்போது சில மாணவர்கள் ஓடிவந்து வழியை மறித்து 'ஐயா, ஐயா, டி.கே.சி. நிகழ்ச்சி முடிந்து விட்டது. தாங்கள் வந்து நிகழ்ச்சியை நடத்திக் கொடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்கள். கவிஞர் அவர்கள் மேலும் கோபமாகக் குறுக்கே நின்ற மாணவர்களிடம் 'இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம் வழியை விடுங்கள்' என்று கையைப் பிடித்து இழுத்து விட்டுவிட்டு என்னைக் கூடக் கவனிக்காமல், ஒரு ஒற்றை மாட்டு வண்டியில் ஏறி நேரே திரு. ஆர்.பி. சுந்தரம் அவர்கள் இல்லத்திற்குச் சென்று விட்டார்கள். மாணவர்கள் என்னிடம் வந்து எப்படியாவது கவிஞரைச் சமாதானப்படுத்தி நிகழ்ச்சியை நடத்திக் கொடுக்கும்படி செய்யுங்கள் என்று கேட்டார்கள். நானும் முயற்சிக்கின்றேன்! எனக் கூறி ஒரு வழியாக சுந்தரம் அவர்கள் இல்லம் சென்று அவர்களிடம் நடந்த விவரத்தைச் சொன்னேன். அவர் மாணவர்களின் செயலுக்கு மிகவும் வருந்தி, என் மூலமாகக் கவிஞரை வரவழைத்து அவரை நல்ல படியாய் நடத்தித் திருப்தி செய்ய முடியாத நிலைக்கு மிகவும் வருத்தம் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்தச் சமயத்தில் கல்லூரி மாணவர்களும், மற்றும் சில தோழர்களும் அங்குவந்து சேர்ந்தார்கள்.



தந்தை பெரியாருடன் ஒரே மேடையில் புரட்சிக்கவிஞர்.

நான் அவர்களிடம் கவிஞரைச் சென்று பாருங்கள் என்றேன். அவர்களும் கவிஞர் அருகே சென்று ''அய்யா, கோபித்துக் கொள்ளல் கூடாது. எப்படியும் நீங்கள் எங்களுக்கு ஒரு நிகழ்ச்சியை நடத்திக் கொடுக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள்.

கவிஞரவர்கள் ''சரி, இப்பொழுது நான் திருச்சி செல்கின்றேன். அங்கு இரண்டொரு நிகழ்ச்சிகளை முடித்து விட்டு நாளை மறுநாள் புதுவைக்குத் திரும்புவேன். முடியுமானால் நாளை மறுநாள் குடந்தை டவுன்ஹாலில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்து கொண்டு திருச்சி அசோகா லாட்ஜிக்குத் தகவல் தெரியப்படுத்துங்கள்,'' என்று சொல்லி -மாணவர்களை அனுப்பி வைத்து விட்டார்கள். அன்றிரவு திருச்சிக்குச் சென்று அசோக லாட்ஜில் (ஜங்ஷனுக்கருகில்) தங்கிக் கொண்டோம்.

மறுநாள் காலை கவிஞர் திருச்சி வந்துள்ளதை அறிந்த திருலோக சீத்தாராம் அவர்கள் விடுதிக்கு வந்து கவிஞரைச் சந்தித்துப் பேசிவிட்டுச் சென்றார். இவர் மூலமாகப் பல அன்பர்களுக்கும் செய்தி சொல்லி அனுப்பியதும் அனைவரும் வந்து கவிஞரிடம் பேசிக் கொண்டிருந்தனர். அன்று கவிஞருக்கு இரண்டு நிகழ்ச்சிகள் ஒன்று திருச்சி வானொலியில் ''ஊழ்'' என்பதைப் பற்றிப் பேசுவது. இரண்டு: நாடகத்தந்தை என்று சொல்லப்படும் யதார்த்தம் பொன்னுசாமிப்பிள்ளை அவர்களுக்கு எஸ்.எஸ். இராஜேந்திரன் அவர்கள் மூன்று நிதியுதவி நாடகங்களை நடத்திக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதில் முதல் நாள் நாடகம் பேரறிஞர் அண்ணா தலைமையிலும், இரண்டாம் நாடகம் முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையிலும் நடந்தது. மூன்றாம் நாள் நாடகம் நம் கவிஞர் பாவேந்தர் தலைமையில் நடக்க இருந்தது.

எனவே, இன்று இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் நிறைவு செய்ய வேண்டியிருந்தது. காலை 10 மணியளவில் வானொலி நிகழ்ச்சிக்கான உரையைத் தனியறையில் உட்கார்ந்து கவிஞரவர்கள் எழுதிக் கொண்டிருந்தார். அப்போது யதார்த்தம் பொன்னுசாமி அவர்கள் அங்கு வந்து கவிஞரைப் பார்க்க வேண்டும் என்று என்னைக் கேட்டார். சிறிது

நேரம் இருங்கள். கவிஞர் உள்ளே வேலையாக இருக்கின்றார் என்று சொன்னேன்.

கொஞ்சநேரம் பொறுத்துக் கவிஞர் என்னை அழைத்தார். உள்ளே சென்றதும் யதார்த்தம் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார் என்று சொன்னேன். ''இருக்கட்டும், முதலில் இதைப் பாருங்கள்'' என்று சொல்லி ''ஊழ்'' என்பதைப் பற்றி வானொலியில் பேசுவதற்காக எழுதியதை என்னிடம் படித்துக் காட்டினார்கள்.

பிறகு யதார்த்தத்தைக் கூப்பிடுங்கள் என்றார். கூப்பிட்டேன். அவர் மிகவும் பணிவாகவும், அடக்கமாகவும், பவ்யமாகவும் உள்ளே வந்து வணக்கம் தெரிவித்தார். பின்னர் 'அய்யா இன்று இரவு நாடகத்துக்குத் தலைமை தாங்க வேண்டும்' என்று கேட்டார். அதற்குத்தானே வந்திருக்கிறேன் என்று கவிஞர் சொன்னதும், ''பகலுணவு கொண்டு வந்திருக்கிறேன். அறைக்கு அதை எடுத்து வந்து விடுகிறேன்'' என்று சொல்லி, சிறிது நேரத்தில் உணவு வகைகளை எங்களிடம் ஒப்படைத்துவிட்டு, 'வருகிறேன் அய்யா', என்றதும் ''9 மணிக்கு நாடகத்துக்கு வந்து விடுகிறேன்'' என்று சொல்லி அனுப்பி விட்டார்.

பகல் உணவை முடித்ததும் ஓய்வெடுத்துக் கொண்டபின் சுமார் 5.30 மணியளவில் கவிஞரும், நானும், திருலோக சீத்தாராம்மற்றும் சில நண்பர்களுடன் வானொலி நிலையம் சென்றோம். 6 மணியளவில் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு நிலையத்தார் தந்த காசோலையைப் பெற்றுக் கொண்டு அருகிலிருந்த ''காதல்'' ஆசிரியர் அரு. இராமநாதன் அலுவலகத்திற்குச் சென்றோம். இராமநாதன் அவர்கள் காசோலையைக் காசாக்கிக் கொடுத்தார்.

பின்னர் நேரே, பாரதியாரின் மனைவியார் குடியிருந்த வீட்டிற்குச் சென்று, அந்த அம்மையாரிடம் பேசியிருந்துவிட்டு, மற்றும் பல நண்பர்களைப் பார்த்து விட்டு இறுதியில் நாடகம் நடக்கின்ற தேவர் ஹாலுக்குச் சென்றோம். இரவு நாடகத் தலைமையை முடித்துவிட்டு ஓட்டல் - அசோகாவுக்குத் திரும்பினோம்.

மறுநாள் காலை குடந்தையிலிருந்து கல்லூரி மாணவர்கள் குடந்தை டவுன் ஹாலில் 6 மணியளவில் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், அதில் கவிஞர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுமாறும் தந்தி கொடுத்திருந்தார்கள்.

கவிஞர் அவர்கள் தந்தி மூலம் ஒப்புதல் தெரிவித்தபின் மாலை குடந்தை புறப்படுவதற்கு ஆயத்தம் ஆனோம். பகலுணவு ஓய்வுக்குப் பிறகு சாமான்களை வண்டியிலேற்றி, குடந்தைக்கு டிக்கெட்டும் வாங்கச் சொல்லி ஆள் அனுப்பி இருந்தோம். புறப்படும் வேளையில் நண்பர்கள் வந்து பேசிப் பேசி காலம் கடந்து கொண்டபோனது. குறிப்பிட்ட நேரம் வந்ததும் கவிஞருக்கு நினைவு படுத்தினேன். அவசர அவசரமாகப் புறப்பட்டு ரயிலடிக்குப் போகும் போது இரயில் விசிலடித்து புறப்படும் நிலையில் இருந்தது. இதைக் கண்ட கவிஞர் இரயிலைத் தவறவிட்டுவிடுவோமோ என்ற அச்சத்தில் வேக வேகமாக குறுக்கு வழியாகச் சென்று ஒரு தண்டவ்வாளத்தைக் கடந்து மறு தண்டவாளத்தில் உள்ள இரயில் பெட்டியில் ஏற முயற்சி செய்தார். இதைக் கண்ட இஞ்சின் டிரைவர் கவிஞர் வண்டியில் ஏறும் வரை தாமதித்து, பிறகு வண்டியை நகர்த்தினார். குடந்தையில் வண்டியை விட்டு இறங்கியதும் கவிஞர் நேரே டவுன்ஹாலுக்குப் போய்விட்டார்கள். நான் பெட்டி படுக்கையை ஒரு வண்டியில் ஏற்றிக் கொண்டு ஆர்.பி. சுந்தரம் வீட்டிற்குச் சென்றேன். எங்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த சுந்தரம் அவர்கள் என்னைக் கண்டதும், 'கவிஞர் எங்கே? வரவில்லையா?' என்று மிகவும் ஆவலோடு கேட்டார்கள். 'எனக்கு முன்னால் தானே வந்தார்கள்' என்று சொல்லி, பின் நானும் அவரும் நேரே டவுன் ஹாலுக்குச் சென்றோம்.

போனால், அங்கு கவிஞர் மேடையில் பேசிக் கொண்டிருந்தார்கள். கூட்டம் நிரம்பி வழிந்தது. பேச்சின் சுவாரசியத்தில் ஈர்க்கப்பட்ட ரசிகர்கள் தங்கள் அன்பையும், ஆதரவையும் அடிக்கடி கையொலி மூலம் ஆரவாரஞ் செய்து தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். இப்படியாக இனிய நிகழ்ச்சி இரவு 10 மணியளவில் முடிந்தது.

திருச்சியில் ஓயாது உடனிருந்த நான், திருச்சியில் இரயிலடியில் பிரிந்த அவரைக் குடந்தைக் கூட்டம் முடிந்து தான் சந்திக்க முடிந்தது. கவிஞர் அவர்களது காலந்தவறாமையையும் அவரின் கட்டுப்பாட்டுணர்ச்சியையும், மக்கள்பால் அவர் வைத்திருந்த பெருமதிப்பையும் எண்ணி எண்ணிப் பேசிப் பேசி மகிழ்ந்தோம்.

இன்றைய தலைவர்களும், இளைஞர்களும் இந்தக் காலந்தவறாத ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்தால் வருங்கால மக்களுக்கு வழிகாட்டுதலாகாதா?

## என் கவியாசான்

நீரைப்போல் அண்ணாவும், திண்மை கொண்ட
நிலத்தைப்போல் பெரியாரும், கரிகாற் சோழன்
தேரைப்போல் அழகிரியும் இருந்த நாளில்
தீயைப்போல் பாவேந்தர் இருந்து வந்தார்;
நேருக்கு நேராகப் பகைவர் தம்மை
நின்றெதிர்க்கும் பெருங்கவிஞர் தம்வாழ் நாளில்
ஆருக்கும் அஞ்சாமல் வாழ்ந்து வந்தார்
அவரேன் கவியாசான்; அதங்கோட் டாசான்!

—உவமைக் கவிஞர் சுரதா



**பாரதிதாசனின் 96-வது ஆண்டு பிறந்த நாள் விழாவைப் புதுவை அரசு 1986-இல் கொண்டாடிய போது, அக்காலத்தில் தன்னுடன் பணியாற்றிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பற்றி, எம்.பி. ரொலான் (முன்னாள் பொதுக்கல்வி இயக்குநர்) அவர்கள் எழுதியிருந்த பிரஞ்சு மொழிக் கட்டுரையொன்றின் தமிழாக்கம் வருமாறு:**

# இவர்தான் பாரதிதாசன்

**எம்.பி. ரொலான்**

**(தமிழாக்கம் - புதுவை சந்திரஹரி)**

டூப்ளே சிலை போலப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கும் கடற்கரைப் பகுதியில் சிலை உண்டு. சமூக-பொருளாதார அடிப்படை மாற்றங்களைக் கொணர்வது இவர் இலட்சியம். அவர் தனது பல எண்ணங்களைச் செயல்படுத்த விரும்பினார். வாழ்வு முழுமையும் அவர் கடைப்பிடித்த எண்ணங்கள் அவை. அவருடைய ஆத்மார்த்தக் கலையுணர்வு, புலமை ஆகியவை எப்போதும் அவருடைய முகத்தில் பிரதிபலித்தன. அவர் முகம் ஆழ்ந்த சிந்தனையில் தோய்ந்திருக்கும், வயதால் அமைதி பெற்றிருக்கும். சமுதாயத்தை அழுத்திக் கொண்டிருந்த ஏற்றத் தாழ்வுகள் இவரைச் சீற்றங் கொண்டு பொங்கியெழச் செய்தன.

இவரை 'வாத்தியார் கனகசுப்புரத்தினம்' என்று தான் அழைப்பார்கள். கனகசுப்புரத்தினம் என்பது அவர் இயற்பெயர். அரசுத் தமிழ் மொழியாசிரியராக இருந்தார். தமிழ் மொழியாசிரியரை விட, பிரெஞ்சு மொழியாசிரியர் தகுதி மிக்கவராக வைக்கப்பட்டிருந்த காலம் அது.

கனகசுப்புரத்தினம் ஓரளவு உயரமான தோற்றமுடையவர். பலமான உடலமைப்பு உடையவர். அமெரிக்கன் மாடல் என்றழைக்கப்பட்ட விதத்தில் தலைமுடியைச் சீவி விட்டிருப்பார். கைகள் திரண்டுருண்ட நல்லமைப்புக் கொண்டவை. நன்கமைந்த சதுர மீசை. சாதாரண மூக்குக் கண்ணாடி தான் அணிந்திருப்பார். அதற்குள் அசாதாரணக் கண்கள். தெறித்துநின்ற புருவங்கள். வெற்றிலையால் சிவந்த வாய். ஜிப்பா அணிந்திருப்பார். விரைந்து நடக்கும் இயல்புடையவர். நிமிர்ந்து நடப்பார். வேட்டியின் ஒரு முனையைக் கையில் பிடித்தபடி நடப்பார். இத்தகைய குறிப்பிடத்தக்க தோற்றத்தால் அவர் மற்ற தமிழாசிரியர்களிலிருந்து மாறுபட்டிருப்பார். அவர்களும் பணிவும் எளிமையும் மரியாதையும் உள்ளவர்கள்தான்.

1926-இல் மயிலம் முருகன் மீது கவிதை இயற்றினார் பாரதிதாசன். பாரதியும் பாராட்டும்படி அப்போதே தமிழ்த்தாய்க்கு ஓர் அழகிய கோட்டை கட்டும் பணியைத் தொடங்கி விட்டார் அவர் எனலாம்.

பாரதி பாதையில் சென்று 1930-இல் 'சஞ்சீவிபர்வதத்தின் சாரல்' என்று ஓர் காவியம் செய்யுளில் இயற்றினார். அதில் பல மூடப் பழக்கவழக்கங்களைச் சாடினார்.

அவர் சக்திமிக்க சுதந்திர எண்ணம் கொண்டவர். ஓர் சிறந்த போர் வீரர் போலத் திகழ்ந்தார். நிர்வாகம், சமயம் போன்றவற்றில் தாம் கண்ட முரண்பாடுகளை எதிர்த்தார். அது அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது; வாழும் முறைமையாக மிளிர்ந்தது.

அவர் எளிதில் கோபம் கொள்ளும் இயல்புடையவர்; விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் வரம்பு மீறிய சொற்களால் சாடுவார்.

ஒரு சமயம், ஒரு சொற்பொழிவிற்கெனத் தமிழ்நாட்டிலிருந்து வந்தார் ஒரு கல்வியாளர். அவர் தமிழ், சமஸ்கிருதம் நன்கு கற்றவர். அவ்விழாவிற்குப் பாரதிதாசன் சென்றிருந்தார். சொற்பொழிவாளர் பேச்சின் இடையே இளைய தலைமுறைப் புலவர்களைப் பற்றி பேசினார். இத்தகைய புலவர்களின் செய்யுட்களில் பெரிய சுவையேதுமில்லை. இலக்கிய மதிப்பும் இல்லை என்று கூறி- பாரதியார், கனகசுப்புரத்தினம் போன்றோர்களின் நூல்களை எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டார்!

அவர் அக்காலத்தில் நிலவியிருந்த ஒரு கருத்தையே அப்படிக் குறிப்பிட்டார். அப்பொழுது திடீரென எழுந்தார் அவையிலிருந்த கனகசுப்புரத்தினம். பேச்சாளரை இடைமறித்து நிறுத்தினார். பின்பு பொரிந்து தள்ள ஆரம்பித்தார் - ''புதிய கவிதைகளைப் பற்றி உனக்கென்ன தெரியும்? அவற்றைப் புரிந்து கொண்டு நுட்பம் அறிய உனக்கு என்ன தகுதியிருக்கிறது? உனக்குக் கால்கள் ஊனம். இரு கைத்தடிகளைக் கொண்டு நடக்கின்றாய். வழக்கமான விதிமுறைகளின்படி முறையாக ஆசிரியர் ஒருவரிடம் நன்கு பயிலவும், பல இலக்கியங்களைக் கற்கவும் உனக்குத் தடைபோடப்பட்டுள்ளது. எப்படி உன்னுடைய முறையற்ற வாயாடித்தனமான பேச்சினைக் கேட்டுக் கொண்டிருப்பது?'' என்றார்.

அதிர்ந்துபோன பேச்சாளர், நண்பர்களுடன் அங்கிருந்து வெளியேறினார். இது ஒரு கடுமையான செயல். கொடூரமானதும் கூட அல்லவா?

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பலமான தமிழ்ப்பற்று உடையவர். தனக்கு நியாயம் என்று படுவதற்கு மட்டுமே இசைவார். எப்போதும் பலவீனர்கள் பக்கம் சாய்ந்திருப்பார். பலமுடையவர்களைத் துணிந்து எதிர்த்து நிற்பார். ஆட்டு மந்தைகளுள் ஓர் ஆடாக அவர் இருக்க விரும்பியதில்லை. அவரது கணீரென்ற குரல், அவரது பேச்சுக்குத் தனி அழகைத் தந்தது. எளிமையாக விளக்கி மக்களுக்குப் புரிய வைத்துச் சிரிக்க வைப்பார். அவரும் சேர்ந்து சிரிப்பார். அவர் தம் பண்பறிந்த சிலர் அவரிடம் தொடர்ந்து பழக அஞ்சியதில்லை.

அந்நாளில், பள்ளியாண்டு இறுதியில், கோடை விடுமுறைக்கு முன் பள்ளித் தலைமையாசிரியருக்கு விருந்தளித்துப் பரிசளிப்பது என்பது வழக்கம். அதற்கு அனைத்து ஆசிரியர்களும் ஒப்புதல் அளிப்பார்கள், தலைமையாசிரியருக்கு வருத்தம் ஏற்படக் கூடாது என்பதற்காக. ஆனால் அதைக் கனகசுப்புரத்தினம் ஒரு சில ஆசிரியர்களோடு சேர்ந்து எதிர்த்தார். விழாநாள் அன்று 3-ஆம் வகுப்பு மாணவர்கள் கையில் மாலை பூச்செண்டு மற்றும் எலுமிச்சம், பழங்களைக் கொடுத்து அவர்களைத் தலைமையாசிரியரின் அறைக்குள் அழைத்துச் சென்றார். வேறுவழியின்றித்தலைமையாசிரியரும் கோபத்தை அடக்கிக் கொண்டு மாணவர்களை வாழ்த்தும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இப்படி அந்த வழக்கத்தை மாற்றினார்.

37 ஆண்டுக்காலம் ஆசிரியராகப் பணிபுரிந்த கனகசுப்புரத்தினம், மற்றவர்களிலிருந்து எப்போதும் மாறுபட்டேயிருந்தார்.

3 அல்லது 4-ஆம் வகுப்புக்குப் பாடம் நடத்தியபோதும், அதனை அவர் இழிவாய் நினைத்ததில்லை. முழு அர்ப்பணிப்போடு தன் கடமையைச் செய்தார். பணியில் மிகுந்த மகிழ்ச்சி கொண்டிருந்தார். அவர் குரல் கேட்டு மாணவர்கள் நடுங்கிய போதும், மகிழ்வுடன் அவர் வகுப்பு நடத்துவதை ஆர்வத்துடன் அவர்கள் செவிமடுத்தனர். கரும்பலகையில் படங்கள் கோடுகள் போட்டுப் புதுவிதமாக அவர் போதிக்கும் விதம் மாணவர்களை மிகவும் கவர்ந்தது. அக்காலத்தில் தினமும் ஒரு நன்மொழியைக் கரும்பலகையில் எழுதி விளக்கம் தருதல் வேண்டும். பாரதிதாசனும் அவ்வாறு நன்மொழிகள் எழுதி வந்தார். அவையே பின்னர் 'பாரதிதாசன் ஆத்திசூடி' என்று புத்தகமாக வெளியிடப்பட்டது.!

அந்நாளில், கருத்து முரண்பட்ட இரண்டு ஆசிரியர்கள் மாணவர்களைப் பங்கிட்டுக் கொள்வது வழக்கம். பாரதிதாசனுக்கு எதிராக நின்றவர்ஆசிரியர் துரைசாமி முதலியார். இவர் இலக்கண நூல் வல்லார். கவிஞரும்கூட. இவர்கள் இருவருமே கல்விக் களஞ்சியமாக விளங்கிய பங்காரு பத்தர், பெரியசாமிப் பிள்ளை ஆகியோரிடம் முறையாகக் கல்வி பயின்றவர்கள்.

துரைசாமி முதலியார் பழைய இலக்கண இலக்கியங்களுக்காக வாதிடுவார்; கனகசுப்புரத்தினம் புதிய இலக்கண இலக்கியங்களுக்குத் துணை நிற்பார்.

மாணவர்களின் சந்தேகங்களை விளக்கும்போது ஆசிரியர்களின் கௌரவம் அதில் குடி கொள்ளும். ஒருவர் ஒரு விதமாகச் செய்யுளை விளக்குவார். மற்றவர் அதையே வேறு விதமாக விளக்கி, அதுவே உண்மையுரை என்று சாதிப்பார். இம்முறையில் இவ்விருவருக்கும் இடைத்தரகர் மூலமாகச் சொற்போர் நிகழும். சுப்புரத்தினம் பாரதியின் சீடர் என்ற நிலையில் எதையும் மதியாமல் மிடுக்காக நின்றார். துரைசாமி முதலியார் ஒரு பண்டிதர்க்குரிய அமைதியோடு திகழ்ந்தார். இவ்விரு புலவர்களின் போராட்டத்தையும் பலர் ரசித்தனர்.

கனகசுப்புரத்தினம் பல பத்திரிகைகளை வெளியிட்டார். கிணற்றுத் தவளையாக இருந்த சில புலவர்களை இலக்கியங்களில் ஈடுகொள்ளச் செய்தார். தமிழில் வல்லவர் என்பதற்காக அவர் பிரெஞ்சு மொழி இலக்கியங்கள் மீது வெறுப்பைக் கொண்டிருக்கவில்லை. பிரெஞ்சு இலக்கியங்களிலும் மற்றவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டினார்.

நடுநிலை நின்றாய்ந்த எவரும் அவரிடம் பொதிந்து கிடந்த எண்ணக் குமுறல்களை, எதிர்ப்பார்ப்புகளை மண்டிக் கிடந்த புரட்சி நிலைகளை உணராமல் இருந்திருக்க முடியாது.

கனகசுப்புரத்தினத்திற்குள் ஊடுருவிய பாரதிதாசன் சிறந்த புரட்சி எழுத்தாளர், அசாதாரணத் துணிவு உள்ளவர், எதிர்காலத்தில் புகழேணியின் உச்சிக்குச் சென்றிட வல்லவர் என்பதை அப்போதைய நிலையில் அவரை நன்கு அறிந்தவன் என்பதால் என்னால் முன்கூட்டியே உணர முடிந்தது. இது எனக்குப் பெருமை தானே!

Regd. No.TN /PY 17 Prix : 2 Rs.

# LE TRAIT-D'UNION

Organe de l'amitié franco-Indienne JUILLET 1986

Directeur de la Publication: H. PARAMANANDA MARIADASSOU Tél: 4147 Vol. XLII No. IX

Rédaction, Administration: 214, rue Barathi PONDICHÉRY 605001 (India) Tél: 3688

## Baradidàssan perce sous Canaga Souppourattiname

**A l'occasion du 96è anniversaire de naissance de Baradidassan que le Gouvernement de Pondichéry a célébré le 3 mai dernier, notre collaborateur M. P. Rollin a bien voulu évoquer ici quelques souvenirs personnels qu'il a gardés de ce poète, son ancien collègue**

N. d. l. d.

Face à la mer(1) qu'il a souvent chantée et devant un autre révolutionnaire pacifique, Baradidassan se dresse immobile, un rouleau de parchemins à la main, comme celui de la statue de Dupleix dont on lui avait donné la place, sous la poussée des raz-de-marée de l'histoire qui apportent des changements radicaux, parfois éphémères.

Son regard passant par-dessus les flots bleus du golfe de Bengale fixe l'horizon pour voir poindre le jour où se réalisera l'idéal multiple qu'il a poursuivi pendant toute la vie et son âme d'artiste, non seulement de poète, qui a cherché le sourire de la beauté, mais aussi d'amoureux des formes et des couleurs, se reflète sur son visage glabre et pensif, calmé par l'âge, débarrassé des indignations violentes provoquées par les iniquités pesant sur la société.

Si ceux qui l'ont connu dans la force de l'âge laissent leur imagination remonter le cours du temps et raniment les images couvant sous la cendre des souvenirs, ils se rappelleront cet homme original et dynamique appelé dans son quartier Vâttiar Canaga Souppourattiname, instituteur public de langue indienne, appartenant à un cadre inférieur à celui d'instituteur de langue française, ce qui était normal à cette époque où le drapeau français flottait sur le Territoire de Pondichéry, à cette époque où les élèves ânonnaient dans les manuels d'Histoire «notre pays s'appelait autrefois la Gaule».

C. Souppourattiname était un homme d'assez grande taille, d'une forte carrure, aux mains souples et fines, aux cheveux peignés à la mode dite alors américaine, de devant en arrière, sans raie médiane comme c'était l'habitude, à la moustache bien fournie, taillée en brosse, aux yeux malicieux derrière des verres ordinaires, sous des sourcils broussailleux, à la bouche souvent rougie par les chiques de bétel.

Il portait une chemise-veste et marchait d'une allure rapide, la tête haute, tenant l'extrémité du sômane à la main, débordant d'énergie. Sous cet aspect extérieur, il différait beaucoup des autres maitres de tamoul, ses collègues doux et modestes, effacés et polis.

Sa vaste culture tamoule, ses travaux dans son atelier de poésie étaient pour lui une source de juste fierté.

N'avait-il pas déjà en 1920 composé des vers, appréciés des connaisseurs, sur Mourougane, le dieu du temple de Mailam, qui chaque année se rend à Pondichéry, en palanquin, pour la fête de Mâcymagam? N'avait il pas fait ainsi ses preuves devant ses émules, appartenant à l'Ecole des Anciens très attachés aux formes stéréotypées de la poésie, léguées par les siècles et amoureux de vers sybillins, lourds de mots chargés de vétusté, mais vides de pensées nouvelles et originales? N'avait-il pas été félicité par Baradi lui-même quand sur son invitation il composa une poésie à la manière du poète visionnaire dont le génie le marque pour toute la vie? N'était-il pas le desservant d'une chapelle où l'on vouait un culte nouveau à la déesse du tamoul le chef d'une écurie où l'on entrainait les jeunes gens aux examens tamouls de la colonie?

Délaissant les sentiers battus, n'avait-il pas en 1930 publié, en marchant sur les traces de Baradiar, un roman en vers, Sandjivi Parvadattine Sâral où se révélaient le poète satirique et le virulent contempteur des religions et des superstitions des années à venir? D'esprit fort indépendant, batailleur en diable, il était souvent en lutte contre les autorités administratives, religieuses, contre les bonzes des chapelles littéraires; le combat, c'était un plaisir pour lui, une raison de vivre; l'écrivain engagé qu'il deviendra plus tard y apprenait le maniement des armes et y imaginait des bottes originales.

Très susceptible quand on l'attaquait sur ses vers, il laissait alors libre cours à sa colère, il se défendait, dents et griffes dehors, sans se soucier

1) Sa statue est maintenant dans le parc Baradi.

(இந்தப் பக்கத்திலுள்ள கட்டுரை வெளியிடப் பட்ட பிரஞ்சு ஏடான 'இணைப்புக்கோடு' - ஜூலை 1986-ன் நகல் இது. இதழின் முதல் பக்கத்திலேயே இக்கட்டுரை வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.)

# சந்தனக்கல்!



**தனது தந்தையாரின் தந்தையார் எப்போதும் சந்தனப் பொட்டுடனேயே காட்சி தருபவர் என்பதைச் சொல்லி, சந்தனம் இழைக்கப் பாவேந்தர் பட்டபாட்டை நகைச் சுவையோடு எடுத்துச் சொல்லுகிறார் அவரது தலைமகள்:**

***திருமதி சரசுவதி கண்ணப்பன்***

**பா**வேந்தரைப் பற்றி எழுத வேண்டுமென்றால் நீண்டதோர் கட்டுரை எழுத நேரம் தேவைப்படும். அவர் வாழ்க்கையில் எல்லாமே சுவையான நிகழ்ச்சிகள்தாம்!

ஒரு சமயம் பாவேந்தருக்கு 12 வயதில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று இதோ! பாவேந்தரின் அப்பா கனகசபை முதலியார் காலையில், மாலையில், நெற்றியில் சந்தனப்பொட்டு வைத்துக் கொள்வது வழக்கம். கடையில் வாங்கிய சந்தனம் வைத்துக் கொள்வதில்லை. சந்தனக்கல்லில் சந்தனக் கட்டையை நீர் விட்டு இழைத்துத்தான் உபயோகப் படுத்தி வந்தார்.

இவ்வாறு சந்தனச் சாந்தைத் தயாரித்துக் கொடுப்பதுதான் பாவேந்தரின் அன்றாட வழக்கம். இழைத்து, இழைத்து சந்தனக்கல்லே தேய்ந்து மிகவும் இளைத்து விட்டது. இதுபற்றி அப்பாவிடம் பாவேந்தர் கூறினார். அப்பாவோ இரண்டு மூன்று மாதம் கடந்தும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஒரு வெள்ளிக்கிழமை பாவேந்தர் அப்பாவிடம் சொன்னார். ''ஏம்பா நீங்கள் சந்தனக்கல் வாங்கித் தரவில்லையென்றால் சந்தனம் இழைக்க முடியாத நிலைதான் அப்பா!'' என்று சொன்னார்.

எப்பொழுதும் தந்தையாரிடம் வெகுவாக மரியாதை வைத்திருப்பதால் கடிந்து சொல்லவும் முடியாத பாவேந்தர் சனிக்கிழமை காலை ஏழு மணிக்கு, பெரிய வீடு ஆகையால் வீட்டின் முன்புறம் சந்தனம் அறைக்க ஆரம்பித்தர். கல் இலேசாக இருந்த காரணத்தால் நகர்ந்து, நகர்ந்து வந்தது. பாவேந்தரும் அதனுடன் நகர்ந்து, நகர்ந்து



சரசுவதி-கண்ணப்பர்

கடைசியில் நடுரோட்டிலேயே அப்படி இழைத்துக் கொண்டிருக்கும்போது, தெருவில் போனவர்கள் ''ஏம்பா சுப்பு இங்கே வந்து சந்தனம் இழைக்கிறாய்?'' என்று கேட்டனர்!

பாவேந்தர் சொன்னார்- ''நான் வந்து ரோட்டில் சந்தனம் இழைக்கவில்லை, இந்தச் சந்தனக்கல் தான் இங்கு நகர்ந்து என்னை இழுத்துகிட்டு வந்துட்டுது'' என்றார்.

இதற்குள் கனகசபை முதலியார் வந்து சம்பவத்தைப் பார்த்தார். ''நான் சந்தனக்கல் வாங்கி வரவில்லை என்பதால் இந்தப் பயல் இப்படி எல்லோரும் கேட்கும்படி நடுத்தெருவில் வந்து சந்தனம் இழைக்கிறான்'' என்று சொல்லி வருத்தப் பட்டிருக்கிறார்.


அடுத்த நாளே சந்தனக்கல் ஒன்றை வாங்கி வந்து கொடுத்துவிட்டார், அவர் தந்தையார். இதை என்னுடைய தந்தையார் அடிக்கடி எங்களிடம் சொல்லி மகிழுவதுண்டு! ●

---

## பாவேந்தரின் குடும்பப் பெயர்கள்

தேசியகவி பாரதியோடிருந்த நாளில் தேசியமும் தெய்வபக்தியும் புரட்சிக்கவிஞரை ஆட்கொண்டிருந்தன; ஆகவேதான் அவர் தம்முடைய மக்கட் செல்வங்களுக்கெல்லாம்- சரஸ்வதி, கோபதி(மன்னர் மன்னன்), வசந்தா (வேனில்), ரமணி(அழகி) எனும் பெயர்களைச் சூட்டினார்.

பிற்காலத்தில், தமிழுணர்வால் பண்பட்ட பாவேந்தர் தமது பெயரன்-



பெயர்த்திகளுக்கு இட்ட பெயர்கள் யாவும்- அமுதவல்லி, தென்னவன், பாரதி, செல்வம், மணிமேகலை, தமிழ்ச்செல்வம், பாண்டியன், பாரி, சேரன், புகழேந்தி, மல்லிகை, இளமுருகு, முல்லைக்கொடி என்பனபோலத் தனித் தமிழ்ப் பெயர்களாகவே அமைந்தன!

# பெண்ணுக்குக் கல்வியே பெருமை தரும்



புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

**மகள்**

அம்மாஎன் காதுக்கொரு தோடு - நீ
அவசியம் வாங்கிவந்து போடு!
சும்மா இருக்கமுடி யாது - நான்
சொல்லிவிட்டேன் உனக்கிப் போது!



**தாய்**

காதுக்குக் கம்மல்அழ கன்று - நான்
கழறுவதைக் கவனி நன்று!
நீதர் மொழியைவெகு பணிவாய் - நிதம்
நீகேட்டு வந்துகாதில் அணிவாய்!

**மகள்**

கைக்கிரண்டு வளையல் வீதம் - நீ
கடன்பட்டுப் போட்டிடினும் போதும்!
'பக்கி'என் றெனைஎல் லோரும் - என்
பாடசாலை யிற்சொல்ல நேரும்!

**தாய்**

வாரா விருந்துவந்த களையில் - அவர்
மகிழ உபசரித்தல் வளையல்!
ஆரா வமுதேமதி துலங்கு - கண்ணே
அவர்சொல்வ துன்கைகட்கு விலங்கு!

**மகள்**

ஆப ரணங்கள்இல்லை யானால் - என்னை
ஆர்மதிப்பார் தெருவில் போனால்?
கோபமாஅம்மா இதைச் சொன்னால் - என்
குறைதவிர்க்க முடியும் உன்னால்!





**தாய்**

கற்பது பெண்களுக்கா பரணம் - கெம்புக்
கல்வைத்த நகைதீரா இரணம்!
கற்றபெண்களை இந்த நாடு - தன்
கண்ணில்ஒற்றிக் கொள்ளும்அன் போடு!

(1931-இல், தானே எழுதி நடத்திய 'சிந்தாமணி' நாடகத்திற்காக எழுதிய பாடல்)

**நடனம்:**
**செல்வி. ஆனந்தலட்சுமி**

# சிறுசேமிப்புத் துறை




எதிர்பாரா இன்னல்கள் ஏற்படுமுன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷூரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

## கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

## வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80 CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

## தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/189/MS/91/ARIES

## இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-

ரூ.50,000/- வரை தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் வசதி பெறுங்கள்.

கூடுதல் சலுகைகள்:

* இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
* சொத்து வரிவிலக்கு
* உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் நிறுவனம், சென்னை.
தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மற்றும்
இயக்குநர்
**சிறுசேமிப்புத்துறை**
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.



# பாவேந்தர் ஒரு படப்பிடிப்பு

**புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைப்பற்றி, அவரோடு, புதுவையில் அந்தக் காலம் முதல் மிக நெருங்கிப் பழகிய சிலரை நேரில் சந்தித்து விசாரித்துக் கேட்டறிந்தவற்றை இங்கே தொகுத்தளிக்கிறார், நமது சிறப்பு நிருபர் -இல. இராசேந்திரன்.**

### கேசவ செட்டியார்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், தன்னுடைய இளமைக் காலத்தில், புதுச்சேரியின் பல்வேறு தெருக்களில் வாடகை வீடுகளில் குடியிருந்தார். சேலம் மாடர்ன் தியேட்டர்சாரிடம் பணியாற்றச் சென்று வந்த பிறகுதான் பெருமாள் கோயில் தெரு 95-ஆம் எண்ணில் உள்ள இல்லம் இவரால் வாங்கப் பட்டது. அதற்கு முன்பு முத்தியால் பேட்டை தம்புநாய்க்கன் தெருவிலெல்லாம் அவர் குடியிருந்தார். 1930-இல் அவர் ஆசிரியராகப் பணியாற்றியபோது புதுவை, தம்புநாய்க்கன் தெருவில் 18-ஆம் எண் வீடுதான் பாவேந்தரின் வீடு. அவர் வீட்டையடுத்த மூன்றாவது வீட்டுக்காரர் திரு. கேசவ செட்டியார் என்பவராவார்.

முதியவரான அவரிடம் - ''பாரதிதாசன் இந்த வீதியில் குடியிருந்த அந்தக் காலத்தில் எப்படியிருந்தார்''? என்று நாம் கேட்ட கேள்விக்கு அவர் சொன்ன பதில் இது:

''அப்பல்லாம் அவர் வ.உ.சி. ஹைஸ்கூல்ல வாத்தியாரா இருந்தாரு. ஆஜானுபாகுவான தோற்றம்; அதுக்கேத்த முரட்டுக் குணம் இருந்தது. 'சத்ஃபிகாங்கிற' ஏழாங்கிளாஸ் வரைக்கும் தான் அந்த ஸ்கூல்ல; அவர் அதுல மூணாங் கிளாஸ் வாத்தியாரா இருந்தப்ப நான் அதே ஸ்கூல்ல - ஆனா அவருகிட்ட இல்ல- படிக்கிறேன். பசங்க மட்டுமில்ல; மத்த வாத்தியாருங்களும் அவர்கிட்ட பயப்படுவாங்க...'' என்று நிறுத்திச் சிரித்துக் கொண்டு மேலே தொடர்கிறார்:

''பாரதிதாசன் பெரிய கவிஞர்னு தானே இப்பல்லாம் கொண்டாடறாங்க?... அவர் அப்ப ஒரு நல்ல ஆர்ட்டிஸ்ட்டா இருந்தாரு. இதே தெருவுலதான் அவுரு வீடு. மக சரஸ்வதி... மகன் கோபதி (மன்னர் மன்னன்), இன்னொரு மக வசந்தால்லாம் இங்கே இருந்தாங்க. அவங்க ஒவ்வொருத்தரை நிக்க வெச்சி அவர் எழுதின அற்புதமான ஓவியங்களையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். ஓவியம்னா... சும்மா அப்பிடி இப்பிடி கிறுக்கறது இல்லே - பெயிண்டிங்! வாட்டர் கலர்... ஆயில் பெயிண்டிங் எல்லாம்! வண்ண ஓவியமே அழகா எழுதுவார் அவர்! இங்க மிஷன் ஸ்ட்ரீட்ல இருக்கிற வ.உ.சி. ஸ்கூல் சுவர்ல அவர் அப்ப எழுதின ஏர் உழவன்... ஏத்தம் இறைக்கிறவன்... நடவு நடறவ படமெல்லாம் இன்னமும் அழியாமெ இருக்கு; போனா பார்க்கலாம். அப்பல்லாம் அவருக்கு மேடைங்கள்ல அழகாப் பேசத் தெரியாது...'' என்று சொல்லிக் கொண்டே சென்ற அவரிடம் குறுக்கிட்டோம்-

''அவர் முப்பது ஆண்டுகளுக்கு மேல், ஆசிரியராக நல்லபடி வேலை பார்த்தாலும்கூட, அடிக்கடி ஒவ்வொரு ஊருக்கா அவரை மாத்தி பிரஞ்சு அரசாங்கம் தொல்லை கொடுத்ததாகச் சொல்கிறார்களே?''

''அதெல்லாம் தப்புங்க. அவருக்குத் தொல்லை தரணும்கிறதுக்காக இல்லை; யாரா இருந்தாலும் சரி; இவ்வளவு காலம்தான் ஒரு ஊர்ல வேலை பார்க்கலாம்கிறது பிரஞ்சு அரசாங்கச் சட்டம். அப்பல்லாம், யாரைப் பிடிச்சு சிபாரிசுக்குப் போனாலும் சரி; குறிப்பிட்ட காலத்துக்கு மேல ஒருத்தர் ஒரே இடத்துல வேலை பார்க்க முடியாது. அப்படியொரு கட்டுப்பாடு இருந்ததே தவிர, பாரதிதாசனை மட்டும் ஊர் ஊரா

மாத்தி உபத்திரவம் குடுத்தாங்கிற தெல்லாம் அப்பட்டமான பொய்ங்க!'' என்றார் திரு. கேசவ செட்டியார்.

## திரு. வ. சுப்பையா

புரட்சிக் கவிஞர் அவர்கள் புதுவை-காசுக்கடைத் தொகுதியில் தேர்தலில் நின்று வெற்றி பெற்றுச் சட்டமன்ற உறுப்பினரானார். அவர் அங்கம் வகித்த மக்கள் முன்னணியே சட்ட மன்ற எதிர்க்கட்சியாயிற்று. அப்போது எதிர்க்கட்சித் தலைவராகத் திரு. வ. சுப்பையா அவர்களும், எதிர்க்கட்சியின் துணைத் தலைவராகப் பாவேந்தர் பாரதிதாசனும் இருந்தார்கள். பிற்காலத்தில் திரு. வ. சுப்பையா அவர்கள் புதுவை மாநில அமைச்சராகப் பதவி வகித்தும் உண்டு.

''நீங்கள் எதிர்கட்சித் தலைவராகவும், பாவேந்தர் புதுவைச் சட்ட மன்றத்தில துணைத் தலைவராகவும் இருந்ததால் அவரைப் பற்றி நன்றாக அறிந்திருப்பீர்களே? புரட்சிக் கவிஞரைப் பற்றிய உங்கள் கணிப்பு என்ன?'' என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுவை மாநில முக்கியத் தலைவரான திரு வ. சுப்பையா அவர்களை நாம் கேட்டோம். மூத்து முதிர்ந்த அவர், சக்கர நாற்காலியில் இருக்கிற அளவிற்கு உடல் நலம் கெட்டிருந்தபோதும், நலிவோடும்-அதேநேரத்தில், பழைய நினைவுகளால் உண்டான மகிழ்வோடும் நம்மிடம் பேசினார்:

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 1922-களிலெல்லாம் காங்கிரஸ் பேரியக்கத்தில் இருந்தவராவார். ஒத்துழையாமை இயக்கம், கதர் இயக்கத்தையெல்லாம் அவர்கள் நடத்தியபோது, அவற்றில் இவர் பங்கு மகத்தானதாக இருந்தது. ராஜகோபாலாச்சாரியார் கதர் இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்திய போது - இங்குள்ள மகாத்மா காந்தி வீதி, நேரு வீதி போன்றவற்றில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களும், ஜெகனாத கிராமணி, கதர் நடேசன் போன்றவர்களும் தலையில் கதர் மூட்டையைச் சுமந்து கொண்டு வீதி வீதியாகப் போய் விற்றதை நானே பார்த்திருக்கிறேன்; பாரதிதாசனே கூட, அப்போதெல்லாம் கதர்வேட்டி கதர்ச்சட்டைதான் அணிவார்; முரட்டுக் கதர்த்துணியில் ஒரு கோட்டுப் போட்டிருப்பார்!'' என்று



வ.சுப்பையா

கூறிச் சற்றே பேச்சை நிறுத்திச் சிரித்துக் கொண்டார், திரு வ. சுப்பையா.

மேலும் அவர் பேசுகையில் தெரிவித்ததாவது:

''தேசியகவி பாரதியாருடன் இருந்ததால் அவரும் தேசியவாதியாகி இருந்தார் என்றுகூடச் சொல்லலாம். அப்போதெல்லாம் அவருடைய பேச்சிலும், எழுத்திலும் தேசிய கருத்துகளின் வலியுறுத்தலே மிகுந்திருந்தது; பக்தி மணம் கமழ்ந்தது; வலியவர்கள் எளியவர்களை அடிமை கொள்ளக்கூடாது; நாடு விடுதலை பெறவேண்டும்; எங்கும் சமத்துவம் நிலவவேண்டும் என்பன போன்ற கொள்கைகளே அப்போது அவரால் வலியுறுத்தப்பட்டன. 1925 திருவண்ணாமலை மாநாட்டுக்குப் பிறகு, பெரியார் ஈ.வே.இராமசாமி அவர்கள் காங்கிரசை விட்டு விலகி, ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு 'சுயமரியாதை இயக்கம்' கண்ட பிறகுதான் பாரதிதாசனின் கருத்துகளில் புரட்சிவேகம் முழுமையாக ஏற்பட்டது என்று சொல்லலாம். குறிப்பாகச் சொல்லுவதானால் புதுவை முத்தியால் பேட்டையில் 1927-இல் நடந்த பெரியாரின் பொதுக்கூட்டத்தில் சிலரால் நடத்தப்பட்ட அராஜகங்களே, அவரை அந்த இயக்கத்தில் தீவிரமாக ஈடுபடச் செய்வதாக இருந்தது''... என்று கூறிவிட்டு, திரு. வ. சுப்பையா அவர்கள் நலக் குறைவாக இருந்ததால், ஏதோ மாத்திரையைப் போட்டுக் கொண்டு சிறிது தண்ணீர் குடித்தார். சில நிமிட ஓய்வுக்குப் பிறகு அவர் பேச்சுத் தொடர்ந்தது-

''ஜீவானந்தம் அதே நேரத்திலேதான் சுயமரியாதை இயக்கத்தில் பங்கு கொண்டார் இங்கிருந்து குத்தூசி குருசாமி ஆசிரியராக இருந்த 'புதுவை முரசு' வெளிவரலாயிற்று. பாரதிதாசன் தொடர்ந்து பத்திரிகைகளில் சுயமரியாதைக் கருத்துகளோடு கவிதை கட்டுரையெல்லாம் எழுதலானார்''...

'அவருடைய அரசியல் ஈடுபாடு எப்படி இருந்தது?' என்றோம் நாம்.

''என்னைக் கேட்டால்... அவரால் முழுநேர அரசியல்வாதியாக இருக்க முடியவில்லை என்றுதான் சொல்லுவேன். 1956-இல் புதுவையில் நடைபெற்ற முதலாவது சட்ட மன்றத் தேர்தலில், என் தூண்டுதலின் பேரில்தான் அவரும் இங்குள்ள காசுக்கடைத் தொகுதியில் 'மக்கள் முன்னணி இயக்கம்' சார்பில் யானைச் சின்னத்தில், நின்று போட்டியிட்டு வென்றார். அப்போது 39 பேர் உடையதாக இருந்த புதுவைச் சட்டமன்றத்தில் எங்கள் மக்கள் முன்னணி இரண்டாவது பெரும்பான்மை பெற்று எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தது. நான் எதிர்க்கட்சித் தலைவர்; பாரதிதாசன்தான் துணைத் தலைவர்...''

''சட்டமன்றத்தைப் பொறுத்தவரை நீங்களிருவரும் ஆற்றிய முக்கியப் பணி எதையாவது குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?''

''நிறையச் செய்திருக்கோம்; சொல்றேன்... முக்கியமாகப் பாரதியார் பெயரால் இங்கே புதுவையில் அரசு ஓர் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்று அப்போது நாங்கள்தான் முதன்முதல் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினோம். அதை நான்தான் எழுதினேன்; பாரதிதாசன் முன்மொழிந்து அதன்மீது வலியுறுத்திப் பேசினார். அப்படியிருந்த நாங்கள், இரண்டே ஆண்டுகளில், புதுவையில் சிலருடைய அரசியல் சூழ்ச்சிகளால் எதிரும் புதிருமாகி விலக நேர்ந்தது. பிறகு 1960-இல் நடந்த பொதுத் தேர்தலில் அதே காசுக்கடைத் தொகுதியில் என்னுடைய மனைவி சரசுவதி நின்று பெரும் வெற்றி பெற்றார். பாரதிதாசன் டெபாசிட் இழந்தார்-'' என்று கூறிவிட்டுச் சிறிது வருத்தத்துடன் அமைதியானார், அவர்.

''பாரதிதாசன் நூற்றாண்டு தொடர்பாக ஏதாவது சொல்லுங் களேன்?''

''அவர் நூல்களை நாட்டுடைமை யாக்கி தமிழ்நாடு அரசு, அவருடைய குடும்பத்தாருக்கு எட்டு இலட்சம் ரூபாய் கொடுத்துப் பெருமைப்படுத் தியது உள்ளபடியே எல்லோரும் பாராட்டத்தகுந்த உதவிகரமான விஷயமாகும். காலத்தில் செய்த உதவி இது. தமிழ்நாடு அரசும், புதுவை அரசும் அவர் குடும்பத்திற்கு இன்னும் நிறையச் செய்யலாம். பாரதிதாசன் இறந்தபிறகு அவருடைய வீட்டைப் புதுவை அரசாங்கமே வாங்கி நினைவகம் ஆக்குவதற்கும், அவர் மகன் மன்னர் மன்னனுக்குப் புதுவை வானொலியில் வேலை கிடைப்பதற்கும் அவர்களின் மகள் வசந்தாவிற்குப் பாரதிதாசன் நினை வகத்தில் நூலகர் வேலை கிடைக்கச் செய்யவும் - அப்போது கூட்டுறவு மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்த நான்தான் மிகவும் பாடுபட்டு உதவி செய் தேன். அதை என் கடமையாகக் கருதினேன். இப்படிப்பட்ட வகை யில், பாரதிதாசன் குடும்பத்தாருக்கு அரசாங்கம் மேலும் பல உதவிகள் செய்யலாம் என்பது எனது அபிப் பிராயம்!''

## கவிஞர் தமிழ்க்கோவன்

புதுவை நேரு வீதியில் இருந்த சிற்றுண்டிச் சாலைகளில் புகழ் மிக்கதாக விளங்கிய 'மாத்ரு கபே' உரிமையாளர், பாரதிதாசனுக்கு மிக வும் வேண்டியவராவார். இரண்டு பேரும் ஏகவசனத்தில் பேசிக் கொள்ளு மளவுக்கு நெருக்கமுள்ளவர்களாக இருந்தார்கள். புரட்சிக் கவிஞருடன் நெருங்கிய நட்பினராக இருந்த பிரா மணர்கள் சிலரில் குறிப்பிடத்தக்கவ ரான அவர் இன்றில்லை.

அவருடைய மகன் கவிஞர் தமிழ்க் கோவன், புரட்சிக் கவிஞரின் எழுத் தோவியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராவார். இலக்கண இலக் கியத் தேர்ச்சிமிக்கவரான அவரிடம் பாவேந்தரைப் பற்றிக் கேட்டபோது இப்படி நம்மிடம் தெரிவித்தார்:

''எங்க மாத்ரு கபேல என்ன பலகாரம் புதுசா போட்டாலும் சரி; எங்கப்பா முதல்ல பாவேந்தர்கிட்ட கொண்டுபோய்க் குடுத்து வாடாம் பார். ஓட்டலுக்கு, அவர், எங்கப்பா வைப் பார்க்க வருவார்; ''சுப்பு ரத்தினம், குளோப்ஜாம் இப்ப போட்டது... சாப்பிட்டுப் பாரு'' என்று என் தந்தையார் அதைக் கையிலெடுத்துப் புரட்சிக் கவிஞ ருக்கு ஊட்டி விட்டதையெல்லாம் நான் பார்த்து ரசிச்சவன். ஒருசமயம் புரட்சிக் கவிஞர் சேலத்துக்குப் புறப் பட்டார். சொல்லிக்கிட்டுப்போக வந்த அவர் மேல... விலையுயர்ந்த் 'சென்ட் பாட்டில்' ஒன்றைத் திறந்து அபிசேகமே செய்துட்டார் என் தகப்ப னார்...'' என்று கூறி நிறுத்தி மனக் கண்ணால் அந்தக் காட்சியை மீண்டும் பார்த்துக் கொண்டவர்போல் சிரித் தார் திரு. தமிழ்க்கோவன் ''பாவேந்த ருக்கு நல்ல மணமுள்ள சென்ட்... பவுடர் போட்டுக்கிறதெல்லாம் ரொம்பப் பிடிக்கும்!''

சில நேரங்களில் பாவேந்தருடன் இவர் சுற்றுப் பயணங்களும் சென்ற துண்டு. அப்படிச் சென்னைக்கு ஒருமுறை சென்றிருந்தபோது, திரு வல்லிக்கேணியில் உள்ள ஒரு புகைப் பட நிலையத்திற்கு அழைத்துப்போய்ப் பாவேந்தரைச் சில புகைப்படங்கள் பிடிக்க உதவியிருக்கிறார் திரு. தமிழ்க் கோவன். தன் வீட்டில் மாட்டியுள்ள சில புகைப்படங்களைக் காட்டி, அவர் இதை நமக்குத் தெரிவித்தார். அவற்றில் பல, இன்று நாம் காணும் புகைப்படங்களாகவே இருந்தன. ''அன்னிக்கு, அங்கே பிரபல தமிழ் எழுத்தாளர் ஒருத்தரும் எதிர்பாராம வந்து சேர்ந்தார். ஆசையோட கேட்டு, பாவேந்தர்கிட்ட நின்னு ஒரு படம் பிடிச்சுகிட்டார். சமீபத்துல... அந்தப் படத்தைப் போட்டு, ஒரு



பத்திரிகைல அந்த எழுத்தாளர் பாரதிதாசன் தன்னை விரும்பி அழச்சிப் படம் பிடிச்சுகிட்டதாகவும், கூட்டத்துக்கெல்லாம்கூட கூப்பிட்ருக் கிறார்ன்னும் பொய்யா எழுதியிருந்த தைப் பார்த்து வேதனைப்பட்டேன்''...

- என்ற திரு. தமிழ்க்கோவன் ''பாரதிதாசன் நூற்றாண்டு வந்தாலும் வந்தது; அவரைப் பத்தி - அவர் யாரு, எப்படின்னு தெரியாதவங்கள்லாம் எல்லாம் தெரிஞ்சாப்ல கட்டுரையும் புத்தகங்களும் எழுதித் தள்ற வேடிக்கை நடந்துகிட்டிருக்கு!'' என்றார் சிரித்தபடி.

பாவேந்தர் எழுதிய நூல்கள் மட்டுமல்ல; அவரைப் பற்றி மற்றவர்கள் எழுதிய அத்தனை நூல்களையும் ஒன்றுவிடாமல் வாங்கிச் சேர்த்து வைத்திருக்கிறார் கவிஞர் தமிழ்க்கோவன். இந்தவகையில் தன் மனைவியும் தனக்குத் துணையிருப்பதாகச் சொன்னார், மகிழ்வோடு.

## திரு மா. தண்டபாணி

புதுவையைத் தலைமையிடமாகக் கொண்டு புரட்சிக் கவிஞர் அவர்கள் கடைசியாக நடத்திவந்த 'குயில்' வார ஏடு அலுவலகமான 'குயிலகத்'தின் நிர்வாகியாக இருந்தவர் திரு. மா. தண்டபாணி அவர்கள். பாவேந்தர் மகள் திருமதி வசந்தா அவர்களை மணந்து, ''மாப்ளே... மாப்ளே!'' என்று இராகத்தோடு, புரட்சிக் கவிஞரால் அன்பொழுக அடிக்கடி அழைக்கப்பட்டார்.

திரு மா. தண்டபாணி அவர்களைச் சந்தித்துப் பாவேந்தர் பற்றியும் இந்த நூற்றாண்டைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்த நாம் - ''புரட்சிக் கவிஞர் மிகுந்த கோபக்காரர் என்று சொல்லுகிறார்களே அது மெய்தானா?'' என்று கேட்டோம்.

''அதெல்லாம் இல்லை!'' என்று கூறிவிட்டு, அந்தக் கேள்விக்குச் சற்று விரிவாகவே இவ்வாறு விளக்கமளித்தார் அவர்.

''புதுவை மகாத்மா காந்தி வீதியில், 85-ஆம் எண்ணுள்ள இடத்தில்தான் பழனியம்மாள் அச்சகம் அமைக்கப்பட்டது; அதுதான் 'குயிலகம்'. 1955-இல் அதை என் பொறுப்பில் ஒப்படைத்தார் பாவேந்தர். நான்தான் அதன் நிர்வாகி அவர்



மா. தண்டபாணி

பாஷையில் சொல்லுவதானால் 'அமைச்சர்' ஆம்; அந்தப் பெறுப்புக்கு அவர் வைத்த பெயர் அது!'' என்று கூறி, தனக்குத்தானே ரசித்துச் சிரித்துக் கொண்டார் திரு. மா. தண்டபாணி. சில நிமிட இடைவெளிக்குப் பிறகு அவர் பேச்சு தொடர்ந்தது;

''பழனியம்மாள் அச்சகம் வெச்ச புதுசுல, வில்லியனூர் முனிசிபாலிடில எதுனா வேலை வாங்கிச் செய்து செலவை ஈடுகட்ட எண்ணினேன் நான். கவிஞரும் முடிஞ்சா செய்யுங்க மாப்ளே!'' என்றார். நான் முயற்சி பண்ணினேன். வேலை குடுத்தாங்க. தாள் எல்லாம் சொந்தப் பெறுப்புலயே கடன் வாங்கி நான் அச்சடிக்கத் தொடங்கினேன். தொடர்ந்து வேலை குடுத்தாங்க. எப்பனா, புதுவைக்கு வர்ற வில்லியனூர் முனிசிபல் செகரட்டரி, வேலை எந்த அளவுல இருக்குன்னு விசாரிக்கறதுக்காகவே எங்க. பிரஸ்சுக்கு வருவார். அவருக்கு... வேலை தர்றாரேங்கிறதால எதுனா டிஃபன் அஞ்சு ரூபாய்க்குள்ள வாங்கித் தருவோம். அவர் எங்ககிட்ட லஞ்சம் கிஞ்சம் கேட்டதில்லை; ரொம்பவும் நல்ல மனுஷன். அவருக்கு பண்ணின செலவை கணக்குலநான் வேறு மாதிரியா எழுதுவேன். ஒருநாள் என் மகன் பாண்டியனை அழைச்சிட்டுக் 'குயிலகத்'துக்கு வந்த கவிஞர், எப்போதும் போலக் கணக்கைப் பார்த்தார். அந்த அஞ்சுரூபா செலவுக் கணக்கை இன்னதுன்னு புரியாமே கோபத்தோட ஒரேயடியா சப்தம் போட்டுட்டு, என் மகனையும் அழச்சிகிட்டு கைரிக்ஷாவுல வீட்டுக்குப் போயிட்டார்...''

- என்று சொல்லித் தனக்குத் தானே சிரித்துக் கொண்டார் திரு. மா. தண்டபாணி. நாம் அவர் முகத்தையே பார்த்தோம்.

''வீட்ல போயி என் மனைவி (பாவேந்தர் மகள்) வசந்தாகிட்டயும் சப்தம் போட்டிருக்கார். நான் வீட்டுக்குச் சாப்பாட்டுக்குப் போனா அப்பவும் அந்தக் கோபம் தீரலே. கவிஞர்கிட்ட ஒரு பழக்கம் என்னன்னா அவருக்கு மேல நாம குரலை ஒசத்திப் பேசினா அடங்கிப் போயிடுவார். அப்படி நான் பேசினேன். பிறகுதான் ''பின்னே என்ன மாப்பிளே ஒண்ணும் விளங்காத கணக்கு அது?'' என்றார் கொஞ்சம் அமைதியாக. அந்த முனிசிபல் செகரட்டரிக்குக் காபி வாங்கிக் கொடுத்தது தான் அந்தக் கணக்கு என்று நான் சொன்னதும்- ''அதை ஏன் அப்படி ஒளிவு மறைவா எழுதணும்? நேரா விவரமா எழுதிட வேண்டியதுதானே?'' என்றார் கவிஞர்.

''அதெப்படி விவரமா எழுதறது?... நான் அப்படி எழுதி, கணக்கு ஆடிட்டுக்குப் போறப்ப அந்த ஆபீசர் லஞ்சம் வாங்கிருக்கார்னு மேலிடத்துல நடவடிக்கை எடுத்தா... நமக்கு வேலை கொடுத்த புண்ணியத்துக்காக அவரு வேலை காலியாயிடாதா?'' என்று நான் சற்று, உரத்த குரலில் கேட்டதுமே கவிஞரின் கோபம் அடியோடு அடங்கிவிட்டது!'' 'ஓ...கோ!'. நீங்க சொல்றதும் சரிதான் மாப்ளே'' என்றார். அமைதியோடும் வியப்போடும். பாவேந்தருக்கு வரும் கோபமெல்லாம் இப்படித்தான் சாதாரணமாக இருக்குமே தவிர, ஆபத்தானதாக ஒருபோதும் இருந்ததில்லை!

## 'கதர்' நடேசன்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரை மட்டுமல்ல; அவரால் பெரிதும் மதித்துப் போற்றப்பட்ட தேசியகவி பாரதியாரையும் நன்கறிந்த பெரியார் திரு. கதர் நடேசன் அவர்கள். இவரும் பாவேந்தரும் அரசியலில் மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டவர்களாக இருந்தாலும் அன்பு கெழுமிய நட்பினர்களாக இருந்து வந்தவர்கள். ஆகவே, கதர்மயமாகக் காட்சி தந்த அவரைச் சந்தித்துப்

புரட்சிக் கவிஞரைப் பற்றிய கருத்தைக் கேட்டோம்.

''நான் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாலுல பொறந்தவன்; எண்பத்தேழு வயசு நடக்குது...'' என்று உரத்த குரலில் தெரிவித்த அவர், ஒரு கையால் காதை அணைகோலிப் பேசியதிலிருந்தே சரியாகக் காது கேட்கவில்லை என்பதைப் புரிந்து கொண்ட நாம் அவருக்குச் சரியான குரலிலேயே வினாத் தொடுத்தோம்.

''புரட்சிக் கவிஞரிடம் தாங்கள் கண்டு வியந்த சிறப்பம்சம் என்ன ஐயா?

''கவிஞன்கிறதெல்லாம் பெரும்பாலும் எழுதத் தெரிஞ்சவனா மட்டும் தான் இருப்பான்; பாரதிதாசன் அப்படியில்லே; எழுதறதை இசையோட பாடியும் காட்டுவார்; நல்ல சங்கீத ஞானம் அவருகிட்ட இருந்தது. பாரதிதாசனோட அந்தத் திறமைக்காக... சென்னை ஜெமினி ஸ்டுடியோவுல ஒரு தடவை கொத்தமங்கலம் சுப்புவே இவர் காலைத் தொட்டுக் கும்பிட்டதை நான் பார்த்திருக்கேன். அப்படியொரு பிரமாதமானசக்தி. சண்முகப் பிரியா, காம்போதி, தோடி ராகத்துலலேல்லாம்... நாதசுரம் வாசிக்கிறதுல... அந்த நாள்ல திருவாடுதுறை ராஜரத்தினத்தைத் தட்டிக்கேட்க ஆளில்லைம்பாங்க. அவருக்கும் பாரதிதாசனுக்குமே ஒரு சமயம் ராகதாளம் பத்தின சர்ச்சையே நடந்தது. எப்ப தெரியுமில்ல? 'கவி காளமேகம்' படத்துல ராஜரத்தினம் நடிச்சுகிட்டிருந்தபோதுதான் அது! முடிவா நம்ம பாரதிதாசன்தான் ஜெயிச்சார். தவில் மீனாட்சி சுந்தரம் பிள்ளையே... பாரதிதாசன் இவ்வளவு விஷயாதியான்னு அசந்து போயிட்டார்னா பார்த்துக்குங்களேன்!''- உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக் கொண்டே சென்ற அவர் பேச்சில் நாம் குறுக்கிட்டோம்.

''பாரதிதாசன் யாருகிட்டயாவது முறைப்படி சங்கீதம் படிச்சுகிட்டாரா என்ன?''

''ஆமா! அப்பிடியில்லாம முடியுமா?... மகாகவி பாரதியார் இங்கே புதுச்சேரி ஈஸ்வரன் கோயில் தெருவுல வாழ்ந்தப்ப... சுப்பிரமணிய ஐயர்னு ஒருத்தர் இருந்தார்; அவர் பிரஞ்சுக் கல்லூரியில பேராசிரியரா இருந்தார்னாலும்கூட மிகப் பெரிய



கதர் நடேசன்

சங்கீத வித்வான் அவர். அவர், பாரதியார் மேலே ரொம்பவும் பாசமா இருந்தார்... அதே மாதிரி பாரதிதாசன் மேலயும் ரொம்ப அன்பாயிருந்தார். அந்த ரெண்டு பேருக்குமே அந்த சுப்பிரமணிய ஐயர்தான் சங்கீதம் சொல்லிக் கொடுப்பார். ராகதாளம்பத்தி நாள் பூரா அவர்கிட்டநாம கேட்டுகிட்டேயிருக்கலாம்...''

''பாரதிதாசன் மட்டுமில்லாமெ, பாரதியையும் நீங்க பார்த்ததுண்டுன்னு சொல்லுங்க?'' என்று வியப்போடு நாம் கேட்டோம்.

''நல்லா கேட்டிங்களே! பாரதியையும் எனக்கு நல்லாத் தெரியும். அப்ப இங்கே முருகேசம் பிள்ளைன்னு ஒருத்தர் இருந்தார். வசதியான மனுஷன். அவர்தான் பாரதியை காப்பாத்தி வந்தார்னு நான் சொல்லுவேன். இதைப்பத்தி எழுத்தாளர் வ.ரா.வே எழுதியிருக்கிறதா எனக்கு ஞாபகம்! முருகேசம் பிள்ளை என்ன செய்வாரு... எப்பனா பாரதிக்கு ஒரு ரூபா பணம் குடுப்பாரு... பாரதி அதை அவருக்குத் தெரியாமே என்கிட்ட குடுத்து... ''போயி லாலா கடைல சீனிமிட்டாய் வாங்கியாடாம் பாரு! ஓட்டமா ஓடிப்போய் கை நிறைய வாங்கிட்டு வருவேன். அது எனக்கு ரெண்டு... பாரதிதாசனுக்கு ரெண்டு குடுப்பாரு பாரதியார். சீனிமிட்டாய்னா எப்படி இருக்கும் கிறீங்க... வாய்ல போட்டா ஐஸ் மாதிரி கரைஞ்சிப் போய்டும்!'' ஆமா, பாரதிதாசன்கிட்ட வியக்கும்படியா என்ன இருந்ததுன்னு கேட்டிங்களே - பாரதிகிட்ட அப்படி என்ன இருந்ததுன்னு கேட்கலியே?'' என்று கேட்டுச் சிரித்தார், அவர்.

''சொல்லுங்கையா, கேட்டுக்கிறோம்!'' என்கிறோம் நாம்.

''பாரதி... ஒரு நாளாவது ஒழுங்கா முறையா வயிறாரச் சாப்பிட்டு நான் பார்த்ததே இல்லீங்க... சீனி மிட்டாய் மாதிரி கண்டதும் சாப்பிடுவாரே தவிர... இப்பிடிச் சாப்பிட்டு கிட்ட மனுஷன் எப்பிடி உயிரோட இருக்கார்னு எனக்கு ஆச்சர்யமா இருக்கும்!''...

பெருமூச்சோடு சிறிது இடைவெளி விட்டுக்கொண்டு மேலும் திரு கதர் நடேசன் சொன்னார்.

''பாரதிதாசன் அப்படியில்லீங்க... ''நல்லா சாப்பிடுவார்; வாத்தியார் வேலை பார்த்தப்ப அவருக்குச் சம்பளம் எவ்வளவு தெரியுங்களா?... இருவத்தியேழு ரூபாய் தான்! அந்தச் சம்பளத்துல... அப்பவே சிகரெட்டா ஊதித் தள்ளுவார் மனுஷன். அப்பல்லாம்... அக்பர் ஷா, ரூலர் அப்பிடின்னு ரெண்டு வகை ஒஸ்தி சிகரெட்டுங்க வந்தது; பாரதிதாசன் அதான் பிடிப்பார். ஒஸ்தி சிகரெட்டுன்னா விலை எவ்வளவு தெரியுங்களா? பத்து சிகரெட் அரையணா! வத்திப் பொட்டி காலணா! பார்க்கிறது வாத்தியார் வேலைன்னாலும் மனுஷன் கம்பீரமா இருப்பார். எதுலயும் முரட்டுத்தனம்தான். வகுப்புல... பெரும்பாலும்.. தமாஷ்தான் கலாட்டாதான்... அதுலயே புள்ளைங்களுக்குத் தமிழ் வந்துடும்!''

''முரட்டுத்தனம்கிறீங்களே, அதனால... அதாவது பாரதிதாசனால பாதிக்கப்பட்டவங்க உண்டா?''

''அவர் முரட்டுத்தனம் அவருக்கே தான் ஆபத்தா இருந்தது. ஆயிரத்து தொள்ளாயிரத்து பத்தொன்பதுல இங்கே தேர்தல் நடந்தப்ப- பாரதிதாசன், குட்டியா சபாபதிங்கிறவருக்குத் தீவிரமா வேலை பார்த்தார். அதுக்காகவே அவரைத் தீர்த்துக் கட்டவெல்லாம் முயற்சி பண்ணினாங்க: நல்லவேளை... மனுஷன் தப்பிப் பொழச்சார்! ●

**மக்களுக்கு நல்ல புத்தியும், எதிலும் சரியான தீர்வு காணக்கூடிய சிறந்த ஆலோசனையும் கொடுப்பதே படித்த பட்டதாரிகளின் அன்றாடக் கடமையாக இருக்க வேண்டும்.**

**— டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்**

## "நாக்குப் பூச்சிகளை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசியிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பன்மின்த்* தான் பலிச்சுது... பால் நஷ்டம் தராமலே!"

கறவைப்
பிராணி
உலகுக்கு
நல்ல சேதி!



தன்னிகரற்ற

# பன்மின்த்*

(மொரண்ட்டெல் ஸிட்ரேட்)

### நாக்குப் பூச்சிகளை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

''பாழும் நாக்குப் பூச்சிகளால்—அம்மம்ம, நான் பட்டபாடு: பலவீனம் பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பன்மின்த் தான் பலிச்சுது—அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!''

**பால் இழப்பே இல்லை.**

''அருமையான சேதி—எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும், சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பன்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பன்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால், மனிதருக்குக் கெடுதலே இல்லை—நூற்றுக்கு 100 பத்திரமானது.''

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

''என் தங்கச்சி—பிள்ளைத் தாய்ச்சி—அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பன்மின்த் சினைக் காலம் முழுக்க எந்தக் கெடுதலும் செய்யலை, ஏன், பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆறுதலான சுகம்!''

**வசதி மிக்கதும் கூட.**

''சாப்பிட வெகு இலகு பன்மின்த். சுண்டிவிடுங்க ஒரு குளிகை (எங்க மாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு), உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!''

பால் இழப்பே இராது
பன்மின்த்*
விலையை ஈடு செய்வது

**கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் சிறந்த மருந்து.**

# பன்மின்த்*

புழுக்களைக் கொல்லும்! ஆரோக்கியத்தை வெல்லும்!

LINTAS BMT 2 2217 TM

*யூ.எஸ்.ஏ. ஃபைஸர் இன்க்.நிறுவன டிரேடு மார்க்.

pfizer

மேலும் விவரமறிய, எழுதுவீர் இம் முகவரிக்கு:
ஃபைஸர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400 021.



# பாவேந்தர் ஒரு நல்லாசிரியர்

**பாவலர்மணி ''சித்தன்''**

> **பள்ளி ஆசிரியராக விளங்கிய பாவேந்தர் அவர்களின் தனித் தன்மைகளைச் சித்திரிக்கிறது இக்கட்டுரை.**

**பு**துவையில் பூத்து உலகெலாம் தமிழ்மணம் பரப்பும் தண்டாமரையாக விளங்கியவர் பாவேந்தர் பாரதிதாசனார்.


அவர் தமிழாசிரியராக - நூலாசிரியராக - உரையாசிரியராக - இதழாசிரியராக - நாடகாசிரியராக - இப்படிப் பல்வேறு தகுதிகளைப் பெற்றவர்.

**ஆசிரியர்**

பிஞ்சு உள்ளங்களுக்கு எப்படிக் கல்வி பயிற்றுவிக்க வேண்டும் என்பதை நன்குணர்ந்தவர் அவர். தொடக்கப் பள்ளியில் அவரிடம் பயிலும் வாய்ப்புப் பெற்றவன் யான்.

வகுப்புத் தொடங்கியதும் ''நன்மொழி'' என்று ஒரு தொடரைக் கரும்பலகையில் எழுதிவிட்டுச் சிறு சிறு நீதிக்கதைகளைச் சொல்லி அதை அருமையாக விளக்குவார்.

கரும்பலகையிலும், சுவரிலும் வண்ணச் சுண்ணாம்புக் கட்டிகளால் சேவல், பூனை முதலியவைகளை உயிரோவியங்களாக வரைந்து மாணவர்களை மகிழ்விப்பார்.



''சித்தன்''

பல வண்ணத் தாள்களில் அழகிய பல்வேறு வகையிலான பூக்களைக் கத்தரித்துக் காட்டுவார்.

தமது மெல்லிய குரலால் எளிய பாடல்களைப் பாடிக்காட்டி எங்களையும் பாடச் சொல்வார்; பாடல்கள் எளிதில் புரியும்படி அமைந்தவை, இனியவை, பயனுடையவை.

''பிளவு பட்ட குளம்புடையது மாடு
பிளவு படாக் குளம்புடையது குதிரை
முளைக்கும் இரு கொம்புடையது மாடு
முழுவதுமே கொம்பில்லாதது குதிரை.''

இப்படிப் பல.

சிறுவர்களை நிமிர்ந்து நடக்கச் சொல்வார்; எளிய உடற்பயிற்சிகளை அவரே செய்து காட்டி, எங்களைச் செய்யச் சொல்வார்.

பள்ளிக்கூடத் தோட்டத்தில் பாத்தி கட்டி, நீர் பாய்ச்சி பூச்செடிகளை வளர்க்க மாணவர்களை ஊக்குவிப்பார்.

பாத்திகளை மிதிப்பவன்; வகுப்பில் பேசுபவன்; மனப்பாடம் செய்யாதவன் - இவர்களைத் தண்டிக்கத் தவறமாட்டார்; கடமையில் கண்ணாயிருப்பவன் பிழைப்பான்.

நான்காம் வகுப்புக்குத் தமிழ்ப் பாடம் நடத்த வந்தார்; அவர் ஒரு பாடலை நடத்தி முடிக்கும்போது,



பண்பாடு பெறாதவர்களுக்கு மிகுந்த சிரமமாக இருப்பதெல்லாம் பண்பட்டவர்களுக்குச் சிரமமாக இராது; சுகமாகவே இருக்கும். இதுவே பண்பாட்டின் இரகசியம்!

—மூதறிஞர் ராஜாஜி

அப்பாடல் எங்களுக்கு மனப்பாட மாகிவிடும். அத்தகைய தனித்திறமை அவருக்குண்டு.

அவர் விளக்கும் பொருள் நம் கண்முன் நிற்கும். ''ஊருக்குக் கிழக்கே உள்ள பெருங்கடல் ஓரமெல்லாம் கீரியின் உடல் வண்ணம்போல் மணல் மெத்தை; அம்மெத்தைமேல் நேரிடும் அலையோ கல்வி நிலையத்தின் இளைஞர் போலப் பூரிப்பாய் ஏறும்; வீழும், புரண்டிடும் - பாராய் தம்பி!''

இப்பாட்டைப் போலவே அவர் பேச்சும் விளங்கும்.

செய்யுள் வகுப்பில் பாடலுக்குக் குறிப்பிடப்பட்டுள்ள பழைய உரையை வகுத்துப் புத்துரை வழங்குவார். அவ்வுரை இக்காலத்துக் கேற்றபடி அமையும்.

திருக்குறளுக்கு அவர் எழுதிய புத்துரையை உலகம் அறியுமே!

பெருந்தேவனார் பாரத வெண் பாவைப் பாடஞ்சொன்னபோது அவர் வீர அபிமன்யுவாகவே மாறி விட்டார்; நடிப்போடு கூடிய வீர வுரை - இன்றும் நெஞ்சில் பசுமை யாக உள்ளது.

**படி**

பாவேந்தர் மாணவர்கட்கு வழங் கிய அறிவுரை 'படி' என்பதே. நல்ல பாடல்களை மனப்பாடம் செய்யச் சொல்வார். இலக்கணப் பிழை களை ஏற்க மாட்டார். படிக்காத வன் பாட்டெழுதுவதை மன்னிக்க மாட்டார்.

**மாணவரிடம் அக்கறை**

ஆசிரியர் தேர்வுக்குப் பாவேந்த ரிடம் பயின்றோர் பலர். அந்நாளில் தேர்வுக் குழுவில் இருந்த சில புல வர்கள் பாவேந்தரிடம் பகைமை யுடையோர்; அவர்கள் தம் சினத்தைப் பாவேந்தரின் மாணவர்களிடம் காட்டு வர். வாய்மொழித் தேர்வில் அவர் களைத் தேறவிடாமற் செய்துவிடு வர். இப்படிக் கெட்டோர் பலர்.

ஒருமுறை பாவேந்தர் தேர்வுக் குழு உறுப்பினராக வந்தார். இதற்கு முன் தேறாமற்போன பலர் தேர்வுக்கு வந்திருந்தனர்.

தேர்வு நடந்தது. தேர்வுத்தாள் களைப் பாவேந்தர் திருத்தினார். தம் மாணவர்கள் அனைவருக்கும் நல்ல மதிப்பெண்கள் கொடுத்துவிட்டார்.

இதையறிந்த மற்ற தேர்வுக் குழு உறுப்பினர்கள் மேலதிகாரியிடம் ''சுப்பு - தம் மாணவர்களின் கேள் வித் தாள்களிலிருந்த பிழைகளைத் தம் பேனாவால் திருத்தி, சரி செய்து அதிக மதிப்பெண் கொடுத்து விட்டார்'' என்று குறை கூறினர்.

மேலதிகாரி, பாவேந்தரிடம் வந்து, ''நீர் உம் பேனாவால் திருத்தி - அதிக மதிப்பெண் கொடுத்து விட்டீர்'' என்பது உண்மையா? என்றார்.

உடனே பாவேந்தர் தம் பேனாவை மேலதிகாரியிடம் கொடுத்தார்; அவர் அதைத் திறந்து எழுதிய போது அது எழுதவில்லை; அதில் மை இல்லை.

மேலதிகாரியும், புலவர்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண் டனர்.

பாவேந்தர் சொன்னார்: ''நான் சிகப்பு மைதானே உபயோகப்படுத் தினேன்'' என்று,

மேலதிகாரி சென்றார். தேர்வில் மாணவர்கள் வென்றனர்.

செய்தி என்ன தெரியுமா?

பாண்டியன் பரிசு.

இயல் சு.

கதிர்நாட்டை நோக்கி வேழநாட்டுப் படை!

சீர்மிகுந்த கதிர்நாட்டின் மேலே, அந்தத்
திறல்மிகுந்த வேழநாட் டுப்ப டைகள்,
போர்தொடுக்கப் பாய்ந்தனவாம் கடலைப் போலே!
பொன்னொளியைப் பாய்ச்சுகின்ற தேர்ப்ப டைகள்,
கார்மிகுந்தார் போலும்யா னைப்ப டைகள்,
கடுத்துயிர் அடக்கி வைப்ப டைகள்,
கூர்மிகுந்த வில்,வேல்,வாள் தாங்கி வந்த
நெடியகா லாட்படைகள் - இவைகள் யாவும்,

மண்ணதிர விரைந்தனவாம்! முரசு, "வெற்றி
வாய்த்ததென முழங்கினவாம்! சங்கம், மற்றும்
பண்ணதிரும் கருவிபலப் பலவும் கூடிப்
பாரதிரச் செய்தனவாம்! கொடியின் கூட்டம்
விண்ணதிரப் பறந்தனவாம்! ஆயுதங்கள்
விழியுதிர மின்னினவாம்! படைத்தலைவர்,

புரட்சிக் கவிஞரின் கையெழுத்து இது; 'பாண்டியன் பரிசு' அசலிலிருந்து எடுக்கப்பட்ட நகல்.

மாணவர்களின் தாள்களைத் திருத்தி அதிக மதிப்பெண் போட்ட உடன், தோட்டத்திற்குச் சென்று, பேனாவிலிருந்த மையைக் கொட்டி விட்டு, பேனாவை நன்கு கழுவித் துடைத்து வைத்துக் கொண்டார், பகைவர்களிடம் அவர் ஏமாறுவாரா? அதனால், மேலதிகாரியின் சோதனையில் பாவேந்தர் சிக்கவில்லை.

எனினும், அதற்குப் பிறகு பாவேந்தரைத் தேர்வுக் குழு உறுப்பினராகச் சில ஆண்டுகள் போடாமல் விட்டனர்.

அந்நாளில் அரை மதிப்பெண், ஒரு மதிப்பெண் குறைந்தாலும் மாணவனைத் தேற விடமாட்டார்கள். பாவேந்தர் மாணவரின் சில தவறுகளைப் பொருட்படுத்த மாட்டார்; அதற்காக அவர்களை ஓராண்டு வகுப்பில் மடக்கிப் போட விரும்பார்.

பாவேந்தரிடம் தமிழாசிரியர் தேர்வுக்குப் பயின்றோர் பலர். அவர்களில் நானும் ஒருவன்.

**பாவேந்தரிடம் படித்தவர்களில் பெரும்பாலோர் புலவர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள், நாடகாசிரியர், இதழாசிரியர்களாக விளங்கினர். அன்றே பாவேந்தர் பரம்பரை தொடங்கிவிட்டது!**

படைப்பிலக்கிய ஆசிரியராக அவர் விளங்கினார். அவர் எழுதத் தொடங்கிவிட்டால் உலகை மறப்பார். பற்றவைத்த சுருட்டு வாய்க்குப் போகாது; விரலிடுக்கிலேயே சாம்பலாகும். குடிக்கக் கேட்ட தண்ணீர் வைத்த இடத்திலேயே இருக்கும்.

பாவேந்தரின் துணைவியார் ''ஏங்க, சாப்பிட வாங்க'' என்பார். அதற்குப் பதில் ''நான் இன்னமும் சாப்பிடவில்லையா?'' என்பது.

அருச்சுனன் குறிவைத்தபோது அவனுக்குப் பறவையின் தலை மட்டுமே தெரிந்தது. மரமோ - கிளையோ - பறவையின் உடலோ தெரியவில்லையாம். அவனைப் போலப் பாவேந்தர் எழுதத் தொடங்கி விட்டால் அனைத்தையும் மறப்பார்.

நாடக ஆசிரியராகப் பல நாடகங்களை அளித்தவர் பாவேந்தர். பள்ளி மாணவர் நடித்தனர். மாணவிகள் பாட - நடிக்கக் - கும்மி, கோலாட்டப் பாடல்கள் எழுதித் தந்தார், அனைத்தும் சீர்திருத்தப் பாடல்கள்; அவர் மேற்பார்வையிலேயே அனைத்தும் தயாராகும்.

அவர் நாடக உரையாடல்கள் அடுக்கும், மிடுக்கும், வலிவும், பொலிவும் பெற்று விளங்குவன.

**அவர் சிறந்த பாடலாசிரியர், சில மணித்துளிகளில் ஒரு பாட்டை எழுதுவார்; எனினும் எதுகை இடறாது; மோனை முறியாது. நயம் விஞ்சும், பகை அஞ்சும்; சுவை கொஞ்சும்.**

இதழாசிரியராக - அவர், ஏறாத ஆழத்தில் சேறாய்க் கிடந்தோரை வெளிஉலகுக்குக் கொண்டுவந்தார்.

கவிதா மண்டலம், குயில் முதலிய கவிதை இதழ்கள் வற்றாத தீந்தமிழ் ஓடைகள்; அவை காலத்தை வென்றவை.

பாவேந்தரின் மாணவனாகத் - தொண்டனாக - மருத்துவனாகப் பல ஆண்டுகள் பழகியவன் யான்.

தொடக்கப்பள்ளியில் அவரிடம் படித்த என்னைப் புலவனாக்கினார். பாட்டரங்கமொன்றில்,

''வித்துவான் புதுவைச் சித்தர் -
இராதா இந்நேரமிங்கே
நத்துவார்க் கெலாம் இனிக்க நறுங்
குறிஞ்சித் தேன்பெய்தார்.
அத்தவக் கவிஞர் நன்னூல் ஆய்ந்தவர்;
தமிழ்க் காப்பாளர்;
முத்தமிழ்ச் செல்வர் வாழி!
மொழிகின்றோம் அவர்க்கு நன்றி!''

என்று பாராட்டினார்!

**ஆசிரியர் பலர்; அவர்களுள் நல்லாசிரியர் ஆயிரத்தில் ஒருவர்; - பாவேந்தர் நூறாயிரத்தில் ஒருவர்!**

---

நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

## பாரதியும் பாரதிதாசனும்!

### கவியரசு கண்ணதாசன்.

இருள்சூழ்ந் திருந்த இவ்வைய முழுதும்
எழுங்கதி ரான இளைஞன் பாரதி;
எழுந்த கதிர்முன் மானிடச் சாதிக்கு
இரத்தம் ஊட்டினார் பாரதி தாசன்!

ஆதி பத்திய வேரறுக் குந்திறன்
ஆக்கித் தந்த வல்லவன் பாரதி;
அந்த வேரை அறுத்தபின் மறுவேர்
அண்டாது காத்தவர் பாரதி தாசன்!

'எங்கள் நாடு எங்கள் மொழி'யென
இயம்புந் திறனைத் தந்தவன் பாரதி;
இயம்ப மறுத்து ஏளனம் செய்தோர்
எலும்பை முறித்தவர் பாரதி தாசன்!

முன்னவர் சொன்ன பண்பா டனைத்தும்
முறையாய்த் தந்த மூத்தவன் பாரதி;
முறையாய்த் தந்ததை வகைவகை யாக்கி
முளைக்க விட்டவர் பாரதி தாசன்!

செந்தமிழ் மலரின் தேனுண்ண வாசலைத்
திறந்து விட்ட தலைவன் பாரதி;
திறந்த வாசலின் வழிப்புறம் மாடுகள்
செல்லாது காத்தவர் பாரதி தாசன்!

வகுத்தவன் முன்னோன் காத்தவன் பின்னோன்;
வாழுந் தமிழின் காவலர் இவர்கள்!

**புரட்சிக் கவிஞர் அவர்கள் செய்யத் தூண்டிய ஒரு புதுவகைப் பலகாரத்தைப் பற்றிய செய்முறைக் குறிப்பும்-அதைச் செய்ய நேர்ந்த சந்தர்ப்பமும், பாவேந்தரின் மகள் மூலம் இங்கே விளக்கப்படுகின்றன.**



சென்னைக் கடற்கரையில் உள்ள புரட்சிக் கவிஞர் திருவுருவச்சிலை.

# பயந்றொடு கும்மாயம்!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

**த. வசந்தா தண்டபாணி**

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

**பி**ற்பகல் மணி 3.30!

அம்மா பகற்பொழுதில் உறங்கி ஓய்வெடுப்ப தில்லை, சுற்றிச் சுற்றி வந்து ஏதாவது பணிகளைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

நாங்கள்-நானும், ரமணியும் அன்று வந்த வார ஏடுகள், நாளிதழ்களைப் பார்த்துக் கொண்டும், படித்துக் கொண்டும், அவை பற்றிய விளக்கங்கள் போன்ற பணிகள் அளித்தலும் ஆகிய பணிகள் எங்களுக்கு!

''பழனியம்மா'' திடீரென்று தந்தையின் குரல்.

''ஏன்'' அன்னையின் ஒற்றைக் குரல்.

''இது இருக்கா?''

''எது?''

''வெல்லம்?''

''இருக்குது.''

''தேங்கா(ய்)?''

''ஊம்!''

''பச்சைப்பயிறு?''

''இருக்குது. இதெல்லாம் எதுக்கு?''

''முதல்ல பச்சைப்பயத்தை வறு; பொன்நிறமா ஆன உடன் இறக்கு; பிறகு உடைச்சி பருப் பாக்கு!''

- இந்நாளில் கிடைப்பது போல உடைத்த பாசிப்பயறு அந்நாளில் கிடைக்காது. எனவே-தந்தையின் ஆணை பிறந்தவுடன் படுத்துக் கொண்டோ, நாளிதழ் படித்துக் கொண்டோ



திருமதி.வசந்தா(வேனில்)



## பகுத்தறிவுக் கவிஞன்

**பாரதிதாசன் அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்திய முதல் கவியும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவருக்கு அடுத்து அவருக்கு ஈடாக வேறு எந்தக் கவிஞரும் தோன்றவே இல்லை. தோன்றியவர்களும் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள்தான்.**

**இன்றைக்கு நம் நாட்டில் இவரோடு குறிப்பிடத்தக்க வேறு புலவர்கள் இருந்தார்கள் என்றோ, இருக்கின்றார்கள் என்றோ சொல்வதற்கு இல்லை.**

**அவர் புதுமைக் கருத்துக்களையும் புரட்சிக் கருத்துக்களையும் மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டுள்ளார்.**

**சுருங்கச் சொன்னால் அவர் போல் தீவிரமான கருத்துக்களை அவருக்கு முன்பும், பின்பும் எடுத்துச் சொன்னவர்கள் இன்னார் என்று எடுத்துக்காட்ட ஆளே இல்லையே!**

**— தந்தை பெரியார்.**

இருக்க முடியாது! எனவே, பறந்து சென்று அம்மாவுக்கு உதவிகள் செய்ய ஆரம்பித்தோம். ஆனால் இந்நாளில் என் பேத்தி அல்லது மகள், மருமகள் கேட்பது போல் 'இதெல்லாம் என்ன செய்வதற்கு' என்று நாங்கள் யாரும் கேட்கவில்லை! கேட்கும் வழக்கம் எங்களிடம் இருந்ததில்லை! அப்பா சொல்லியதைச் செய்கின்றோம். அவ்வளவே! ஆனாலும் நானும் தங்கையும் கண்களால் பேசிக் கொண்டோம், 'என்ன செய்யப் போறாங்க?' பச்சைப்பயறு என்ற பாசிப்பயற்றை உடைத்தாயிற்று, நெஞ்சை அள்ளும் மணத்துடன் ''கம கம'' வென்று.

'பாப்பா, நீ தேங்காயை ஒடைச்சி திருகு!''

''சோமு வாங்கிட்டு வரப்போயிக்காம்பா!''

''உடனே வரச் சொன்னியா?''

''சொல்லிட்டேம்பா!''

''சின்னப்பாப்பா நீ வெல்லத்தைச் சீவு, முந்திரிப்பருப்பைச் சுத்தம் செய்து தோலை எல்லாம் எடு. ஏலக்காய் இருக்கா?''

''இருக்குது''

''அம்மியில் நல்லா நசுக்கி எடுத்துக்கிட்டு வா!''

- இப்போது என்ன நடக்கின்றது என்றால், பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்து வறுத்து உடைத்துப் புடைத்த பச்சைப்பயற்றை அதில் கொட்டிக் கிளறிக் கொண்டிருந்தார் அம்மா, பொங்கி வழிந்து விடாமல்!

''தண்ணி திட்டமா ஆயிட்டுதானு பாத்து வெல்லத்தை அதில் போட்டு நல்லா கிளறு பழனிம்மா. வெல்லமிட்டு, தேங்காய் துருவலைக் கொட்டி நெய்யில் வறுத்த முந்திரிப்பருப்பைப் போட்டு ஏலக்காய் பொடியைச் சேர்த்து அல்வா பதத்தில் மணமிகு 'பயற்றொடு கும்மாயம்' அனைவர்க்கும் தந்தையின் கரங்களால் தட்டில் இட்டு அளிக்கப்பட்டது.

வீட்டில் இருந்த கோழி, புறாக்கள், முத்துப் பூனை உள்ளிட்ட அனைவரும் சுவைத்து மகிழ்ந்தோம். தந்தையின் அடுக்களை விரட்டல்களுக்கிடையில் நானும், தங்கையும் விரைந்து வந்து சாய்வு நாற்காலி மீது இடப்பட்டிருக்கும் எழுது பலகையில் திறந்து வைத்திருந்த நிலையில் காணப்பட்ட நூலை வாசித்ததில், எங்கட்குத் தகவல் ஒன்று புலனாயிற்று!

தமிழறிஞர் உ.வே.சா. அவர்களின் வாழ்க்கைக் குறிப்பாகிய 'என் சரித்திரத்தில் உ.வே.சா. குறிப்பிட்டிருந்த குடந்தை சாரங்கபாணி ஆலயத்துக்குத் தாம் சென்றபோது தொன்னையில் வைத்து அளிக்கப்பட்ட நிவேதனப் பண்டமான 'பயற்றொடு கும்மாயத்தை'ப் பற்றியும் அதன் செய்முறைக்குறிப்புக்களையும் தந்திருந்தார்.

அந்த நிவேதனப் பண்டமே அன்றிலிருந்து இன்று வரை எங்கள் வீட்டுச் சுவை மிகுந்த உணவாகக் கருதி வந்தோம். தந்தைக்குப் பிடித்த அந்த இனிய சுவைமிகு உணவை அன்னாரின் நினைவு நாளில் செய்து வருகின்றோம்!

## வந்தனன் பாரதிதாசன்!



**ஆனை நடையும் அரிமாப் பெருமிதமும்**
**கோனையுஞ் சாடிக்குமுறுரையும் - தானையே**
**தாக்கினு மஞ்சாத் தறுகண்ணும் மேலாடைச்**
**சேக்கையும் பாரதிதா சன்.**

**தன்னலமுந் தன்குடும்பத் தின்னலமும் பேணாது**
**மன்னலமே யென்றும் மதித்தொழுகித் -**
**தன்னினமாஞ்**
**செந்தமிழ் மக்கள் சிறந்தோங்கி வாழ்வதற்கே**
**வந்தனன் பாரதிதா சன்.**

**- மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்**

# பாடம் நடத்திய பாவேந்தர்

'செம்பியன்'

**ஒரு பள்ளி ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும்? என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் பாவேந்தர் அவர்கள். தம்மைப்போலவே மற்றவர்களும் - மற்ற ஆசிரியர்களும் விளங்க வேண்டும் என்றும் விரும்பினார் அவர். அவை என்ன என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது இக் கட்டுரை.**

1946-ஆம் ஆண்டு, புதுவை வ.உ.சி. பள்ளியில் முதன்முதலாக ஆசிரியர் பணியை ஏற்ற எனக்கு அப்போது அங்கே ஆசிரியராக விளங்கிய புரட்சிப் பாவேந்தரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது - அந்நாள் எனக்கொரு பொன்னாளாகும்.

முதன்முதலில் பணி ஏற்கும் ஒவ்வோர் ஆசிரியரும், அங்குள்ள அனுபவ மிக்க ஆசிரியர் வகுப்பில் நடத்தும் பாடங்களைத் தினமும் இரண்டு பாட வேளைகள் போய்க் கவனிக்க வேண்டும் என்பது தலைமையாசிரியர் உத்தரவு; அதன்படி, தலைமையாசிரியர் என்னைப் பாவேந்தர் வகுப்புக்கு அழைத்துச் சென்று அவரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்-

அன்று முதல் குறிப்பிட்ட பாட நேரங்களைக் கவனிக்க புரட்சிப் பாவலரிடம் செல்ல ஆரம்பித்தேன் - பாவேந்தர் கோபக்காரர், முரடர் என்றெல்லாம் பலரும் கூறியதைக் கேள்விப்பட்டிருந்த யான், அவரைப் பார்த்ததும் அவரிடம் நெருங்கிப் பழகவே அச்சமாக இருந்தது - அவரிடம் மெதுவாக நெருங்கிச் சென்று ''வணக்கம் ஐயா'' என்றேன்- தலை அசைத்த அவர், போய் அமரச் சொன்னார் - பாடம் போதித்துக் கொண்டிருந்த அவர், பாடம் முடிந்ததும், ''தம்பி இங்கே வா'' என்று கூப்பிட்டு என்னைப் பற்றிக் கேட்டறிந்து கொண்டு, ஆசிரியர் பணியைப் பற்றிய அறிவுரை கூறத் தொடங்கினார்.

''உற்சாகத்தோடு இப்பணியை ஏற்று வந்துள்ளாய் - மகிழ்ச்சி - மிகச் சிறப்பான பணி ஆசிரியர் பணி - உனக்குச் சில அறிவுரைகள் கூறுவேன் கேள்'' என்றார் - தொடர்ந்து-

''நம்மிடம் வந்துள்ள மாணவர்களை அறிவுள்ளவராக உருவாக்குவதே நமது கடமை. ஆசிரியரின் திறமையைப் பொருத்துத்தான் மாணவர்கள் திறம்



பெறுவர். முதலாவதாக, இப்பணிக்கு வந்துள்ள நீ பாடத் தயாரிப்புக் குறிப்புச் சுவடி இல்லாமல் வகுப்பில் நுழையக் கூடாது. முறையாகப் பாடம் போதிக்கக் குறிப்புச் சுவடி இன்றியமையாதது. நாம் நடத்தும் பாடம் ஒவ்வொன்றைப் பற்றியும் முன்னதாகவே தயார் செய்து கொண்டு வந்து தான் பாடம் நடத்த வேண்டும். மேலதிகாரிக்காகச் செய்வதில்லை இந்த வேலை. மனச்சாட்சிதான் முக்கியம்''- என்று கூறிவிட்டு, அவர் எழுதி வந்திருந்த குறிப்புச் சுவடியைக் காட்டினார்-

இரண்டாவதாக, எந்த வகுப்பு நடத்துகின்றாயோ அந்த வகுப்பு மாணவர்களின் பெயர்களை ஓரிரண்டு நாளில் அறிந்து கொள்ள வேண்டும். உற்சாகமும் சுறுசுறுப்பும் மலர்ந்த முகமும் உள்ள ஆசிரியராக மாணவர்முன் காட்சியளிக்க வேண்டும். வீட்டுக் கவலையோ, வேறு சிந்தனையோ கொண்டு சோர்வுடன் இருக்கக் கூடாது. மாணவர்கள் புரிந்து கொள்ளும் அளவிற்கு உன்னுடைய பாடபோதனை அமைய வேண்டும் - அப்போது தான் மாணவர்கள் விழிப் புணர்ச்சி பெறுவர்.

மூன்றாவதாக, மாணவர்கள் ஆசிரியரின் நடை உடை பாவனைகளைக் கவனிப்பார்கள் ஆனதால், அவர்கள் நம்மை விரும்பி மதிக்கும் அளவில் நடந்துகொள்வது முக்கியம் - சுருக்கமாகச் சொன்னால், இன்று காலையில் ஓர் ஆசிரியரின் காலில் காயம் பட்டதென்றால், மாலையில் அந்த ஆசிரியரைச் சந்திப்பவர்கள் ''காலில் ஏதோ காயம் பட்டதாமே?'' என்று விசாரிப்பார்கள். அந்த அளவிற்கு மாணவர் மூலம் உன் சேதி வெளியில் பரவும். ஆதலால், இத்தொழிலில் மிகவும் விழிப்பாயிருந்து நல்லாசிரியர் என்று பெயரெடுக்க வேண்டும். ஊதிய உயர்வையோ, பதவி உயர்வையோ எதிர்பாராமல், நம்மிடம் ஒப்படைத்துள்ள மாணவர்கள் கல்வி கற்று முன்னேற்றமடைய வேண்டும் என்ற ஆழ்ந்த எண்ணத்துடன் செய்யுந்தொழிலே தெய்வம் என்னும் பொன்மொழிக்கிலக்கணமாக நீ திகழவேண்டும். இதுதான் உனக்கு யான் கூறும் அறிவுரை - போய் உட்கார்ந்து நான் நடத்தும் பாடத்தைக் கவனி'' என்றார். எனக்கு ஒரே ஆச்சரியம் - அன்று எனக்குப் போதனா முறைப் பாடமே நடத்தி விட்டார் பாவேந்தர்.

**போதனா முறையில் அவர் திறமை**

அவர் நடத்தும் ஒவ்வொரு பாடமும் மாணவர் உள்ளத்தில் நன்கு பதியும் அளவிற்குத் தெளிவாகவும் சுருக்கமாக

## வெல்வோம்

**மாவேந்திக் காலமெல்லாம்**
**மடங்கலென வாழ்ந்தோன்**
**மறத்தமிழர் வாழ்வுயர்த்துஞ்**
**சிந்தனையில் ஆழ்ந்தோன்!**
**சாவேந்திப் போகாத**
**வரலாற்றைக் கொண்டோன்**
**செந்தமிழ்க்குப் பாவேந்தர்**
**மிகச்சிறந்த தொண்டோன்!**
**நாவேந்தி நாடெல்லாம்**
**பகுத்தறிவைச் சொல்வோம்**
**நற்றமிழர் அனைவரையும்**
**சுற்றமெனப் புல்வோம்!**
**பாவேந்தர் நூற்றாண்டில்**
**அவர்வழியைக் கொள்வோம்;**
**பகைமுடித்தே ஒற்றுமையாய்ப்**
**பாரதனை வெல்வோம்!**

**- புலவர் வெற்றியழகன்**



# உணர்ச்சியை ஊட்டும் உயிர்த்தன்மை!

**பாரதிதாசன் கவிதைகளில் உண்மை, இனிமை, அழகு இம்மூன்றும் அமைந்துள்ளன. அதனால் தான் அவரது கவிதைகள் படிப்போர் உள்ளத்திற்கு இன்பம் அளிக்கின்றன. இந்த மூன்று தன்மைகள் மட்டுந்தானா அவர் கவிதை களில் மிளிர்கின்றன? இல்லை. மற்றும் இரண்டு சிறப்புகளும் பொருந்தியிருக்கின்றன. அச்சிறப்புகள் எவை? அவை: எல்லோருக்கும் விளங்கக் கூடிய எளிய நடை; படிப்பவர் உள்ளத்தைத் தட்டி எழுப்பி உணர்ச்சியை ஊட்டும் உயிர்த்தன்மை என்பன.**

**-மயிலை சீனி. வேங்கடசாமி**

வும் இருக்கும். கரும்பலகையில் ஓவியந் தீட்டிக் காட்டி, அதன் மூலம் பாட போதனை நடக்கும்.

ஒருநாள், சிங்கமும், சுண்டெலியும் என்ற கதை வகுப்பு - கரும் பலகையில் சிங்கம், சுண்டெலி காட்சியளிக்கும் வகையில் ஓவியம் - சிங்கத்தின் கர்ஜனை- சுண்டெலியின் நடுக்கம் அனைத்தும் அங்கே நாடகமாகக் காட்சியளித்தது. வகுப்பில் ஒரே அமைதி - மாணவர்க்குக் கவனம் - உற்சாகம் - என்னென்பேன்! இன்றும் அக்காட்சி என்மனக் கண் முன்னே நிற்கிறது!

ஒவ்வொரு நாளும் பாட போதனை ஒவ்வொரு விதமாக அவரிடமிருக்கும்.

மாணவர்க்கேற்ற முறையில் ஒவ் வொரு பாட விளக்கமும் இருக்கும். ஒருநாள் விஞ்ஞான வகுப்பு - பாடம் கம்பளம் தயாரித்தல் - பாடத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கி விட்டு, மாணவர் உள்ளத்தில் அப்பாடம் நன்கு பதிய இறுதியில் ஒரு பாடலும் கரும்பலகையில் எழுதிவிட்டு -

**"ஆட்டின் மேலே அழகாக**
**அடர்ந்த மயிரைக் கத்தரித்து**
**நீட்டு நீட்டாய் இழையாக்கி**
**நெய்வார் அதுதான் கம்பளமாம்!"**

**என்று பாடியும் காட்டினார். மாண வர்கட்கு ஒரே உற்சாகம் - மகிழ்ச்சி - அவர் ஒரு ஆசிரியராக மட்டும் காட்சி யளிக்காமல், சொற்பொழிவாளராக, இசைக் கலைஞராக, ஓவியராக, நடிக ராக, நகைச்சுவைக் கலைஞராகப் பாட போதனையின்போது, மாணவர்முன் காட்சியளிப்பார்.**

**தொழிலில் கடமையுணர்வு**

பகுத்தறிவுக் கொள்கையுள்ளவர் - அரசியல் ஈடுபாடுள்ளவர் என்றெல்லாம் ஏதேதோ அவரைப் பற்றிக் கூறி, ஊதிய உயர்வளிக்காமல் ஊர் ஊராய் மாற்றிக் கொண்டிருந்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல், ஆசிரியர் பணியில் ஊக்கம் நிறைந்தவராக, நம்பி வந்த மாணவர்க்குப் பாடம் போதிப்பதில் அக்கறையுள்ளவராகக் கண்ணுங் கருத்து மாய்க் கடமை செய்பவராக, ஆசிரியர் பணிக்கோர் இலக்கணமாகப் பாவேந்தர் திகழக் கண்டேன் - நான் பாடம் போதிப் பதில் பிற்காலத்தில் சிறப்படைய அவரே முக்கியக் காரணமாக இருந்தார் என்பதை என்னால் என்றும் மறக்க முடியாது.

**புதுவையில் உள்ள பாவேந்தர் திருவுருவச் சிலை.**



**மற்றவர்க்கு ஆர்வமூட்டும் பண்பு**

புதுவையில் எனக்குற்ற நண்பராக இருந்த ஆசிரியர் பொன்னம்பலம் அவர்கள், பாவேந்தரின் அன்பிற்குரிய மாணவருள் ஒருவர் - அவருடன் பாவேந்தர் இல்லத்திற்கு யானும் சென்று பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. நாடகத்தில் ஊக்கமும், கவிதை எழுதும் திறமும் கொண்ட பொன்னம்பலம் அவர்கள் அவ்வப்போது தான் எழுதுவதைப் பாவேந்தரிடம் காட்டுவார். அவர் நாடகத்திலுள்ள நுணுக்கங்களையும் அமைக்க வேண்டிய முறையையும் தெளி வாகக் கூறித் திருத்துவார் - அந்த வகை யில் ஒருநாள் யாப்பிலக்கணத்தைச் சுருக்கமாகப் பாவேந்தர் தெளிவு படுத்தப் போதித்து என்னையும் கவிதை எழுதத் தூண்டினார். அன்று முதல் பாவேந்தர் மாணவரானேன் - யான் எழுதும் கவிதைகளைத் திருத்திக் காட்டி அமைய வேண்டிய முறைபற்றிக் கூறுவார். அப்போது அவர் கூறிய கருத்தொன்று யாதெனில், அகராதியை வைத்துக் கொண்டு எதுகை, மோனை தேடிக் கவிதை எழுதாதே சொந்த முயற்சியில் - எளிய நடையில் அனைவர்க்கும் புரியும் வகையில் எழுதப்பழகு என்பதேயாகும். கவிதை எழுதும்போதெல்லாம் அவர் கூறிய அந்த வார்த்தை என் நினைவிற்கு வரும். அவருடைய ஆசியால், என்னு டைய கவிதைகளும் செம்பியன் என்ற புனைபெயரில் 'குயில்', 'விடுதலை' போன்ற இதழ்களில் வெளிவரத் தொடங்கின.

பாவேந்தரிடம் உள்ள சிறப்பியல்பு என்னவென்றால், அவர் ஆழ்ந்த சிந்தனை யிலிருந்தாலும், கவிதை எழுதிக் கொண் டிருந்தாலும் உடனே எழுதுவதை நிறுத்தி விட்டு நாம் எழுதிய பாடலை வாங்கிப் படித்துத் திருத்திக்காட்டி ஆர்வமூட்டு வார். அதில் சிறிதளவும் முகச்சுளிப்போ எரிச்சலோ காணமுடியாது. கவிதை எழுதுவதற்கார்வ மூட்டுவதில் அவருக்கு நிகர் அவரே!

**சமுதாய நோக்கு**

தம்மைப்போல் கவிஞராகப் பலரும் வர வேண்டும் என்பதில் பெருவிருப்பம் கொண்டிருந்தார் பாரதிதாசன். ஆசிரியர் பொன்னம்பலம், புதுவைச் சிவம், ஆசிரியர் வாணிதாசன் போன்றவர்கள் கவிஞராக உருவாக அவருடைய தூண்டு தலே முக்கியக் காரணமாகும். என்னை யும் ஓரளவு தயார் செய்து கவிஞர் வரி சையில் ஈடுபடுத்தினார்.

புதுவை மாநிலத்தில் மட்டுமல்லாமல், தமிழகமெங்கும் கவிஞராகப் பலர் தோன்ற அவரே மூல காரணமாக இருந்தார் என்பதில் சிறிதளவும் ஐய மில்லை!

# புரட்சித் தோட்டத்தில் பூத்த மலர்கள்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் எழுதிய நூல்கள், வெளிவந்த ஆண்டு - பெயர் விவரங்கள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

| வரிசை எண். | ஆண்டு | நூற் பெயர் |
|---|---|---|
| 1. | 1926 | மயிலம் சுப்பிரமணியர் துதியமுது-கனகசுப்புரத்தின முதலியார். |
| 2. | 1930 | கதர் இராட்டினப் பாட்டு |
| 3. | 1930 | சிறுவர் சிறுமியர் தேசிய கீதம் |
| 4. | 1930 | தொண்டர் படைப்பாட்டு |
| 5. | 1930 | தாழ்த்தப்பட்டார் சமத்துவப்பாட்டு |
| 6. | 1930 | சஞ்சீவிபர்வதத்தின் சாரல் |
| 7. | 1931 | சுயமரியாதைச்சுடர் |
| 8. | 1937 | புரட்சிக்கவி |
| 9. | 1938 | இந்தி எதிர்ப்புப்பாடல்கள் (பாரதிதாசன் உட்பட பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு) |
| 10. | 1938 | பாரதிதாசன் கவிதைகள்-1 |
| 11. | 1939 | இரணியன் அல்லது இணையற்ற வீரன் |
| 12. | 1939 | இசையமுது-1 |
| 13. | 1941 | எதிர்பாராத முத்தம் |
| 14. | 1942 | குடும்பவிளக்கு-ஒருநாள் நிகழ்ச்சி |
| 15. | 1943 | பாண்டியன் பரிசு |
| 16. | 1944 | இருண்ட வீடு |
| 17. | 1944 | அழகின் சிரிப்பு |
| 18. | 1944 | நல்ல தீர்ப்பு |
| 19. | 1944 | காதல் நினைவுகள் |
| 20. | 1944 | குடும்பவிளக்கு-விருந்தோம்பல் |
| 21. | 1944 | கற்கண்டு (நாடகம்) |
| 22. | 1945 | எது இசை? |
| 23. | 1945 | தமிழியக்கம் |
| 24. | 1946 | அமைதி |
| 25. | 1946 | தன்மானத்தாலாட்டு (மாவண்ணா தேவராசன்-பாரதிதாசன்) |
| 26. | 1947 | கவிஞர் பேசுகிறார் |
| 27. | 1948 | முல்லைக்காடு |
| 28. | 1948 | மகாகவி பாரதியார் |
| 29. | 1948 | காதலா? கடமையா? |
| 30. | 1948 | கடல்மேற்குமிழிகள் |
| 31. | 1948 | குடும்பவிளக்கு-திருமணம் |
| 32. | 1948 | இந்தி எதிர்ப்புப்பாட்டு |
| 33. | 1948 | அகத்தியன்விட்ட புதுக்கரடி நல்லமுத்துக்கதை |
| 34. | 1948 | திராவிடர் திருப்பாடல் |
| 35. | 1949 | படித்த பெண்கள் |
| 36. | 1949 | சேரதாண்டவம் |
| 37. | 1949 | தமிழச்சியின் கத்தி |
| 38. | 1949 | திராவிடர் புரட்சித் திருமணத்திட்டம் |
| 39. | 1949 | பாரதிதாசன் ஆத்திசூடி |
| 40. | 1949 | ஏற்றப்பாட்டு |
| 41. | 1949 | பாரதிதாசன் கவிதைகள்-2 |
| 42, | 1950 | குடும்ப விளக்கு-மக்கட்பேறு |
| 43. | 1950 | குடும்ப விளக்கு-முதியோர் காதல் |
| 44. | 1950 | இன்பக்கடல், சத்திமுத்தப்புலவர் |
| 45. | 1950 | சௌமியன் |
| 46. | 1951 | அமிழ்து எது? |
| 47. | 1951 | கழைக்கூத்தியின் காதல் |
| 48. | 1952 | இசையமுது-2 |
| 49. | 1952 | தமிழ் இன்பம் |
| 50. | 1954 | பொங்கல் வாழ்த்துக் குயில் |
| 51. | 1955 | பாரதிதாசன் கதைகள் |
| 52. | 1955 | பாரதிதாசன் கவிதைகள்-3 |
| 53. | 1956 | தேனருவி |
| 54. | 1958 | தாயின்மேல் ஆணை |
| 55. | 1958 | இளைஞர் இலக்கியம் |
| 56. | 1959 | பாரதிதாசன் நாடகங்கள் |
| 57. | 1959 | குறிஞ்சித்திட்டு |
| 58. | 1962 | கண்ணகி புரட்சிக்காப்பியம் |
| 59. | 1962 | மணிமேகலை வெண்பா |
| 60. | 1964 | பாரதிதாசன் பன்மணித்திரள் |
| 61. | 1967 | பிசிராந்தையார் |
| 62. | 1977 | பாரதிதாசன் கவிதைகள்-4 |

### த.கோவேந்தன் தொகுத்தவை

| | | |
|---|---|---|
| 63. | 1977 | காதற்பாடல்கள் |
| 64. | 1977 | குயில் பாடல்கள் |
| 65. | 1978 | தேனருவி (புதுப்பாடல்கள்) |
| 66. | 1978 | தமிழுக்கு அமுதென்று பேர் |
| 67. | 1978 | ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது |
| 68. | 1978 | நாள் மலர்கள் |
| 69. | 1978 | புகழ் மலர்கள் |

### டாக்டர் ச.சு.இளங்கோ தொகுத்தவை

| | | |
|---|---|---|
| 70. | 1978 | தலைமலைகண்ட தேவர் |
| 71. | 1980 | ஆத்திசூடி & பொங்கல் வாழ்த்துக் குவியல் |
| 72. | 1980 | வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா? |
| 73. | 1980 | கோயில் இரு கோணங்கள் |
| 74. | 1980 | ஏழைகள் சிரிக்கிறார்கள் |
| 75. | 1980 | பாட்டுக்கு இலக்கணம் |
| 76. | 1980 | பாரதிதாசன் பேசுகிறார் |
| 77. | 1981 | சிரிக்கும் சிந்தனைகள் |
| 78. | 1981 | கேட்டலும், கிளத்தலும் |
| 79. | 1983 | மானுடம் போற்று (பாரதிதாசன் கட்டுரைகள்) |
| 80. | அச்சில் | உலகுக்கோர் ஐந்தொழுக்கம் (தலையங்கக் கட்டுரைகள்) |

—'பாரதிதாசன் நாடகங்கள் ஓர் ஆய்வு' என்ற (டாக்டர் ச.சு.இளங்கோ) நூலிலிருந்து.

**இருளைக் கண்டு அஞ்சுகிற குழந்தையைவிட, வெளிச்சத்தைக் கண்டு அஞ்சும் மனிதனே மோச மானவன்!**

**—எமர்சன்**

# கோவை-பெரியார்-நீலகிரி மாவட்டங்களில்

# காவிரி நதி நீர்ப்பங்கீடு நடுவர் குழு:

# தமிழகத்தில் இரண்டாம்கட்ட

# ஆய்வுப் பயணம்!

**கா**விரித்தாயின் கருணையால் சோலைவனமாகக் காட்சிதந்த தஞ்சாவூர் - திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் பாலைவனமாகிவிடுமோ என்கிற அச்சத்திற்கு ஆட்பட்டி ருக்கிறோம் நாம். 'சோறுடைத்து' என்று போற்றப்பட்ட சோழவளநாடு இப்போது விவசாய மந்தத்தால் 'சோர் வுடைத்து' ஆகிவிட்டது.!

காவிரித்தாயின் கருணைக்குக் கர்நாடக அரசால் தடைபோடப்பட்டுவிட்டது தான் இந்த நிலைமைக்குக் காரணம்.

''வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி'', வெறும் மணல் வீதியாகக் காணப்படக் காரணம் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகப் போதுமான நீர் வரத்து இல்லாமல் போனதுதான்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் நமக்குச் சாதகமான - வரலாறு அடிப்படையிலான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன; என்ன இருந்து என்ன? 1974-க்குப் பிறகு, ஆண்டுக்கு ஆண்டு காவிரி நீர் வரத்து அடியோடு குறைந்து விட்டதே!

**1974-75-இல், அதாவது 20.7.1974-இல் மேட்டூர் அணை திறந்து விடப்பட்டபோது காவிரியில் 279.9 டி.எம்.சி. அளவு தண்ணீர் வந்தது; 20.8.1989-இல் மேட்டூர் அணை திறந்து விடப்பட்டபோதோ காவிரி நீர் வரத்தின் அளவு 175.6 டி.எம்.சி. ஆகக் குறைந்திருந்தது; 22.8.1990-இல் திறந்து விடப்பட்டபோது வந்த தண்ணீரின் அளவைச் சொன்னால் வெட்கக்கேடு!**

**தமிழ்நாட்டின் மொத்த நீர்ப்பாசனப்பகுதியில் 85 சதவிகிதப் பாரப்பானது காவிரியாற்றங்கரைப் பகுதி யாகும்; தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பில் 34 சதவிகிதம் காவிரி பாசனப் பகுதியில் அமைந்திருக்கிறது. இதுமட்டுமல்ல; நமது தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 33 சதவிகிதம் பேர் காவிரி பாசனப் பகுதி யிலே வாழ்பவர்களாவர்.**

## நடுவர் மன்றம் அமைப்பு


இவ்வளவையும் தெரிவித்து, தமிழகம் காவிரி நீர் பெறுவதற்கான நியாயங்களையும் முறைப்படி தெரி வித்தும் - கர்நாடக அரசு செவிசாய்க்க மறுத்தே வந்தது; அந்த நிலையிலேதான் மத்திய அரசால், காவிரி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையிலே சென்ற ஆண்டில் (1990) காவிரி நதிநீர்ப் பங்கீடு நடுவர் மன்றம் (Cauvery Water Dispute Tribunal) அமைக்கப்பட்டது.

இந்த நீதிபதிகள் குழுவினர் - காவிரி தொடர்புடைய மாநிலங்களிலே சுற்றுப்பயணம் மேற்கொண்டு நிலைமை களை நேரில் கண்டறிவர் என்பது ஏற்பாடு. அதன் படி அவர்கள் சென்ற மார்ச்சு மாதம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் பயணம் மேற்கொண்டனர்.

அதன் பிறகு அவர்களுடைய இரண்டாம் கட்டச் சுற்றுப் பயணம் 12.4.91 முதல் 18.4.91 வரை தமிழகத்திலும் - கேரள மாநிலத்திலும் தொடர்ந்தது.

அமராவதி அணைக்கட்டில் நடுவர் குழுவினர்





நடுவர் மன்றத்தின் தலைமை நீதிபதி திரு சிட்டா டோஷ் முகர்ஜி, நீதிபதி எஸ்.டி. அகர்வால், நீதிபதி என்.எஸ். ராவ், திரு. ஜே.ஆர். மல்ஹோத்ரா, திரு. குல்ஷான் ராஸ், திரு. கோவிந்த் சிங் ஆகியோரே இந்த நடுவர் மன்றத்தினர் ஆவர். இவர்களோடு - தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் உடன் வந்தார்கள்.

தமிழகப் பிரதிநிதிகளின் பெயர்கள் விவரம் வருமாறு: பொதுப்பணித் துறைச் செயலாளர் திரு, டி. முருகராஜ், முன்னாள் தலைமைப் பொறியாளர்கள் திரு. ஏ. மோகனகிருஷ்ணன், திரு. பி.கே. பால கிருஷ்ணன் மற்றும் திருவாளர்கள் ஆர்.என். கிருஷ்ணன், சி.மாதாக்கண்ணு, எம்.எஸ். கணேஷ், அஜீத் சிங், கே.ஆர். சீனிவாசன், எஸ். பழனியப்பன், பி.மாணிக்க வாசகம், ஏ. ஜெகதீசன், ஏ. லோகநாதன், ஏ.வி. இராகவன், எம்.எஸ், இராமமூர்த்தி, எஸ். குளத்து, ஆர். முரளீதரன், எம். பாலசுப்பிரமணியன், கே.ஓ. பழனிச்சாமி, எஸ்.ஆர். இராகவன், எம்.ஏ. இராமநாதன், பி.பால சுப்பிரமணியன், டி. ஹரிகரன், கே.எஸ். ஜெகதீசன்.

கர்நாடக மாநிலப் பிரதிநிதிகளாகத் திரு. சிவப்பா, திரு. ஈஸ்வர்பட், திரு, மோகன் வி. கட்டார்க்கி உள்ளிட்ட 15 பேர்களும் - கேரள மாநிலப் பிரதிநிதிகளாகத் திரு. ஜெயந்த் பூஷன், திரு. குன்னிக் கண்ணன் முதலான ஒன்பது பேர்களும் - புதுவை மாநிலத்தின் சார்பில் திரு. லாரண்ட் செயிண்ட் ஆன்ட்ரூவும் இந்தப் பயணத்தில் கலந்து கொண்டார்கள்.


## கோவை மாவட்டம்

*12.4.91* அன்று நண்பகல் *1.55* -க்கு கோயம்புத்தூர் பீளமேடு விமான நிலையத்தில், விமானத்தில் வந்திறங்கினார், நடுவர்மன்ற நீதிபதிகளில் ஒருவரான நீதிபதி எஸ்.டி. அகர்வால். அன்று மாலை தலைமை நீதிபதி சிட்டாடோஷ் முகர்ஜி அதே விமான நிலையத்தில் வந்திறங்கினார். இருவரையும், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம் கலைவாணன் அன்புடன் வர வேற்றார்.

அன்று மாலையில் கடுமையான மழையின் காரணமாகக் கோவை மாநகர வீதிகளிலெல்லாம் வெள்ளப் பெருக்கு. 4 மணிக்குத் தரையிறங்க வேண்டிய விமானம் பலத்த மழை காரணமாக முக்கால் மணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்தது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அன்புடன் வழங்கிய பூச்செண்டைப் பெற்றுக் கொண்டு தலைமை நீதிபதி சிட்டாடோஷ் முகர்ஜி, சிரித்தபடி சொன்னார்: "தண்ணீரில்லாமல் கஷ்டப்படுகிறீர்களே என்று... வரும் போதே மழையையும் கொண்டுவந்திருக்கிறேன் பார்த்தீர்களா!..."

மேல்பவானி அணையில் நடுவர் குழுவினர்



அதை எல்லோரும் ரசிக்க - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். கலைவாணன் இப்படி உடனடியாகச் சொன்னார் - "இதைப்போலவே தேவையான அளவு காவிரி நீரும் நியாயத்தின் அடிப்படையில் எங்களுக்குக் கிடைக்கச் செய்வீர்கள் நீங்கள் என்று நாங்கள் நம்புகிறோம்!"

காவிரி நதிநீர்ப் பங்கீடு நடுவர் மன்றத்தின் வருகை காரணமாகக் கோவை நகரெங்கும் -

"Cauvery is our life line"...
"Welcome to the Tribunal"...

- என்பன போன்ற வாசகங்கள் கொண்ட பதாகைகள் சுவரொட்டிகள், போர்டுகள் காணப்பட்டன.

## பெரியார் மாவட்டம்

*13.4.91* அன்று காலை 9 மணியளவில், இந்தக் குழுவினர் காவிரி நதிநீர்ப் பாசனப் பகுதிகளைப் பார்வையிடுவதற்காகக் கணியூர், செங்கப்பள்ளி, பெருந்துறை, பெருமாநல்லூர் வழியாகப் பெரியார் மாவட்டத் திற்குப் பறப்பட்டார்கள்.

வழியில் - தெக்கலூர் ஊராட்சியில் மாரியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கும் மிகப் பெரிய கிணறை அவர்கள் பார்வையிட்டார்கள். ஏராளமான சுற்றுப்புறக் கிராமத்தினருக்கெல்லாம் பயன்பட்டு வந்த அந்தப் பெருங்கிணறு, நிலத்தடி நீரின்றி வறண்டு கிடந்தது. வரைபடம் மூலம், அதனால் உண்டான பாதிப்புகள் நடுவர் குழுவுக்கு விளக்கிச் சொல்லப்பட்டது. மக்கள் பலரும், நீராதாரம் கெட்டுவிட்டது பற்றிய மனுக்களை நடுவர்களிடம் கொடுத்தார்கள்.

அவினாசியில் - வீதியின் இருமருங்கிலும் ஆண்களும் பெண்களும் காலிக்குடங்களோடு அணிவகுத்து நின்று தண்ணீருக்குக் கண்ணீர்விடும்படி ஆகிவிட்ட நிலையை உணர்த்தினார்கள்.

பெரியார் மாவட்டம் செங்கப்பள்ளியில் - விஜய மங்கலத்தில் - பெருந்துறையில் வாய்க்கால் மேட்டில்... எங்கு பார்த்தாலும் காலிக் குடங்களின் வரிசை மக்கள் கூட்டம் - அவர்கள் கைகளில் -

'We want Cauvery Water'

'Protect existing irrigation'...

- என்றெல்லாம் எழுதப்பட்ட அட்டைகள் ...


"We want water" என்கிற கோஷங்கள்!

இன்னொரு சிறப்பு - சாலையின் இருபுறமும் நின்றிருந்த பல இளைஞர்களின் கரங்களில் அத்தனை அரசியல் கட்சிகளின் கொடிகளும் "வருக, நியாயம் தருக" என்பதுபோல் பறந்து கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

திண்டல் என்ற இடத்தில் பச்சைப் பாவாடை, ரவிக்கை, வெள்ளைத் தாவணியோடு இருமருங்கும் கரம் குவித்து நெடுந்தூரம் நின்றிருந்த மாணவிகள் "We want water" ... Save our soul" என்று ஒரே மாதிரியாகக் குரலெழுப்பியது எல்லோரையும் மெய்சிலிர்க்கச் செய்வதாக - கண்கலங்கவைப்பதாக இருந்தது!

### பொதுக் கூட்டம்

ஈரோட்டில் உள்ள பெரியார் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில், நடுவர் மன்றத்தினருக்காக ஏற்பாடு செய்யப்



காவிரி நதிநீர்ப் பங்கீடு நடுவர் குழுவினருடன் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், புதுவை மாநில உறுப்பினர்கள்.

பட்டிருந்த மாபெரும் வரவேற்புப் பொதுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வி.கே. சுப்புராஜ் வரவேற்புரை ஆற்றினார்.

**''கீழ்பவானி அணை மூலம் பாசன வசதி - பெறும் இந்த மாவட்டத்தில், காவிரி நீர்வரத்து இன்மையால், கடந்த ஐந்தாண்டுக் காலமாக விவசாயப் பெருமக்கள் பெரும் அவதிக்கு ஆளாகியுள்ளனர். சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் நிலம் இங்கே நீரின்றிக் காய்கிறது. காவிரி, மற்றும் கீழ்பவானி விவசாயிகளின் வாழ்வும் சாவும் மரியாதைக் குரிய நடுவர் குழுவினரின் கைகளிலேதான் இருக்கிறது'' என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.**

அவரைத் தொடர்ந்து, அக்கூட்டத்தில் - தமிழ்நாடு மஞ்சள் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு. கே.ஆர். நல்லசிவம், தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு. கே. சின்னசாமிக் கவுண்டர், கீழ்பவானி வாய்க்கால் விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. எஸ். நல்லுசாமி, கீழ்பவானி பாசனப் பிரதேசத்தின் முறை நீர்ப் பாசன விவசாயிகள் கூட்டமைப்பின் கன்வீனர் திரு. கே. ப. முத்துசாமி, அரக்கன் கோட்டை விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. கே. தேவண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி குழந்தையம்மாள், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் திரு. சாய்நாதன், முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோர் பேசினர்.

**''வெளி மாநிலங்களைவிடத் தமிழ்நாடுதான் மிகக் குறைந்த நீர்வரத்துள்ள மாநிலம் என்று மத்திய நீர்வளக் கமிஷனே கூறியிருக்கிறது; அதை மனதில் வைத்து நியாயம் வழங்கவேண்டும்!''**

**''தேசிய ஒருமைப்பாடு முக்கியம் என்பது உண்மை யானால் நதிநீர்த் திட்டங்களைத் தேசியமயமாக்க வேண்டும்!''**

**''இந்தப் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு ஆராய்ந்து தமிழ்நாட்டு மக்களாகிய எங்களுக்கு நீதி கிடைக்கச் செய்ய வேண்டும்...''**

- அவர்களுடைய பேச்செல்லாம் பெரிதும் இந்தக் கருத்துகளை வலியுறுத்துபவைகளாகவே இருந்தன.

அதன்பின், சிறிது நேர ஓய்விற்காக ஆச்சார்ய நரேந்திர தேவா நினைவு விடுதிக்குச் சென்ற நடுவர் குழுவினருக்குப் பெரியார் மாவட்ட நீர்ப்பாசனப் பகுதிகள், வரைபடம் மூலம் விளக்கிச் சொல்லப்பட்டது. பொதுமக்களால் எண்ணற்ற விண்ணப்பங்களும் அளிக்கப் பட்டன.

அதன்பின் நடுவர் குழுவினர் பவானிசாகர் அணை யைப் பார்வையிடப் புறப்பட்டனர். பெரியசேமூர், வீரப்பன் சத்திரம், சித்தோடு, ஊத்துக்காடு, செம்பூத்தாம் பாளையம், கவுந்தப்பாடி, ஒத்தக்குதிரை, கோபி... எங்கு பார்த்தாலும் சாலையோரங்களில் சிறுவர், சிறுமியர் தாய்மார்கள், முதியோர் எனச் சாரிசாரியாக மக்கள் மனிதச் சங்கிலி கோத்து நின்றிருந்தனர். அவர்களில் சிலர் ஏந்தி நின்ற அட்டைகளில்...

'நதிகளை இணைப்போம் -
ஒருமைப்பாடு காப்போம்!'...

'We want Justice'...
'Save our Right'...

**-என்பன போன்ற வாசகங்கள் காணப்பட்டன.**

**சத்தியமங்கலத்தில் அமைக்கப்பட்டிருந்த ஓர் அலங் கார வளைவில் - 'Nature may fail, Tribunal never fail' என்று எழுதப்பட்டிருந்தது.**

சுமார் 3 மணியளவில் பவானிசாகர் அணைக்கு வந்தாயிற்று; 32 டி.எம்.சி. மொத்தக் கொள்ளளவு உள்ள அந்த அணை, இப்போது 2 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே இருந்ததால் வறண்டு போய்க்கிடந்தது. நடுவர் குழுவினரிடம் வரைபடம் காட்டி - அணைக்கு நீர் வரத்தின்மையால் ஏற்பட்டுள்ள கொடிய பாதிப்புப் பற்றி வகையுற விளக்கப்பட்டது. அணையின் பெரும்பகுதியில் புல்மண்டிக் கிடந்ததைக் கண்ட அவர்கள் பார்வையில் இரக்கம் தெரிந்தது.

பிறகு, நடுவர் குழுவினர் நீலகிரி மாவட்டத்திற்குப் புறப்பட்டார்கள். ரங்கம்பாளையம், பெத்திக்குட்டை, கணேசபுரம், சிறுமுகை, ஆலாங்கொம்பு, மேட்டுப் பாளையம் வழியே பயணம் தொடர்ந்தது.

**நீலகிரி மாவட்டம்**

தமிழ்ப் புத்தாண்டு நாளான 14.4.1991 அன்று காலை 9 மணியளவில், 'மலைகளின் ராணி' எனப்படும் நீலகிரியிலிருந்து, காவிரி நீர்ப் பங்கீடு நடுவர் குழுவினர் புறப்பட்டனர். வளைந்தும் நெளிந்தும் ஏறியும் சரிந்தும் சென்ற மலைவழிப்பாதையில் சென்று 11.15 மணி அளவில் அவர்கள் மேல்பவானி அணைக்கட்டுக்குச் சென்றனர். 3.5 டி.எம்.சி. கொள்ளளவுள்ள அந்த அணையில் - அதுவும் கடந்த வாரம் பெய்த மழை



**★ குரான், பைபிள், அவஸ்தா, தொல்மத் அல்லது கீதை இவைகளில் எதன் மூலம் நோக்கினும் நமக்குக் கடவுள் ஒருவரே, அவர் உண்மை, அன்புமயம். இதை என் வாழ்நாளில் காட்டுவதைத் தவிர உயிர் வாழ்தலில் வேறு பற்றுதல் எனக்குக் கிடையாது.**

காரணமாக அரை டி.எம்.சி. தண்ணீரே அப்போது சிறு குட்டை போலத் தேங்கிக் கிடந்தது!

அந்த அணைக்கு, நீரில்லாமல் ஏற்பட்டிருக்கும் அவல நிலை பற்றி நம்முடைய பொதுப்பணித்துறை அதிகாரிகள் நடுவர் குழுவினரிடம் எடுத்துரைத்தனர்.

**பின்னர் எல்லோருமாக, அதற்கும் மேலே - அதாவது கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,500 அடிக்கும் மேலே கட்டப்பட்டுப் பாதியில் நின்றுவிட்ட கீழ் வரதப்பள்ளம் அணைக்குப் போய்ச் சேர்ந்தனர். அந்த அணை பற்றிய விவாதத்தில் கேரள மாநில அதிகாரிகள் சற்றே உரத்த குரலில் விவாதித்ததைக் கேட்க முடிந்தது.**

அதன் பிறகு - கீழே உள்ள குந்தா அருகில், மஞ்சூர் விநாயகர் கோயிலையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு விழாவில், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீனா நாயர், நடுவர் குழுவினருக்கு வரவேற்புச் சிற்றுண்டி அளித்து உபசரித்தார். அவர்களுக்குப் பூச் செண்டு வழங்கிய அந்த அம்மையார் - ''தமிழ்நாட்டு மக்கள் முகமெல்லாம் உங்கள் தீர்ப்பால் இதேபோல் மலர வேண்டும்!'' என்று தெரிவித்தார்.

சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு நமது பயணம் - அன்னமலை முருகன் கோயில் வழியாக 45 கொண்டை ஊசி மலைப்பாதை வளைவுகளைத் தாண்டி கோவையில் வந்து முடிவுற்றது.

அதற்கு மறுநாள் (15.4.91) கோவை மாவட்டத்தில் உள்ள அமராவதி அணைக்கட்டு நடுவர் குழுவினரால் பார்வையிடப்பட்டது.

4,047 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள அமராவதி அணையில், அன்றைய தினம் 137.56 மில்லியன் கன அடி தண்ணீர்தான் கிடந்தது.

**மொத்தத்தில் ஏறத்தாழ 6,000 ஏக்கர் நிலம் பயன் பெறத்தக்க அளவில் உருவாக்கப்பட்ட இந்த அணைக் கட்டில் வைக்கப்பட்டிருந்த வரைபடமே பிற மாநிலப் பிரதிநிதிகளின் விவாதத்திற்கு உள்ளாகியது.**

**''இங்குள்ள வரைபடம் தமிழ்நாட்டை மட்டுமே காட்டுகிறதே தவிர, இந்த அணையோடு தொடர்புள்ள மற்ற மாநிலங்கள் குறிக்கப்படாமல் அறைகுறையாக இருக்கிறது!'' என்றார், கர்நாடகப் பிரதிநிதிகளில் ஒருவர்.**

**''தேவையானவைதான் இதில் குறிப்பிடப்பட்டிருக் கின்றன; இதே நடுவர் குழு உங்கள் மாநிலத்திற்கு வரும்போது தமிழ்நாட்டு வரை படத்தை காட்டப் போகிறீர்களா?'' என்றார் நம்முடைய பிரதிநிதியொருவர். அதைத் தொடர்ந்து அங்கெழுந்த சிரிப்பில் நடுவர் குழுவினரும் கலந்து கொண்டார்கள்.**

கருத்துப் பரிமாற்றமெல்லாம் முடிந்த பிறகு, கேரள மாநிலத்திற்குப் பயணமான காவிரி நீர்ப் பங்கீட்டு நடுவர் குழுவினரை. ''மிகுந்த நம்பிக்கையோடு இருக்கிறோம்!'' என்று கூறி, கரங்கூப்பி வழியனுப்பி வைத்தார் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். கலைவாணன்.

கேரள மாநிலத்தில் 16,17 தேதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபின், 18.4.91 அன்று டில்லிக்குத் திரும்பிய காவிரி நீர்ப் பங்கீட்டு நடுவர் குழுவினர், இதற்கு முன்பாகக் கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப் பாசனப் பகுதியைக் காணும் தமது சுற்றுப் பயணத்தை முடித்து விட்டிருந்தனர்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**பி.எல். ஆர்.**



# பாவேந்தர் காலச் சூழ்நிலை!

**புலவர் சா.மருதவாணன்**

பாவேந்தரின் பகுத்தறிவு உள்ளத்தைக் காண்பதற்கு முன்னர், அவர் வாழ்ந்த காலச் சூழ்நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். மக்கள் கல்விக்கண் பெறமுடியாமல் திண்டாடிய காலம். மக்கள் அறியாமைக் கடலில் வீழ்ந்து தத்தளித்த காலம். பொய்யும் புனை சுருட்டும் கோலோச்சிய காலம். கல்லாதவர்களைக் கற்ற வர்கள் ஏமாற்றிய காலம்.

பாவேந்தர் தாம் வாழ்கின்ற வகை கெட்ட காலத்தைப் பார்க்கிறார். ஏடெடுத்துப் படித்தவர் களும் பகுத்தறிவிற்குக் கிஞ்சிற்றும் இடம் கொடுக் காமல், பாமரர்களாய்ப் பரிதவிப்பதைக் காணு கின்றார். இதோ, பாவேந்தரின் பகுத்தறிவுச் சிந்தனையில் விளைந்த நன்முத்துக்கள்!

''பழையநூல்கள் இப்படிப் பகர்ந்தன
என்பதால் எதையும் நம்பிவிடாதே!
உண்மை என்றுநீ ஒப்பிவிடாதே!
பெருநாளாகப் பின்பற்றப் படுவது
வழக்கமாக இருந்து வருவது
என்பதால் எதையும்நீ நம்பிவிடாதே!

இருப்பவர் பலரும் ஏற்றுக் கொண்டனர்
என்பதால் எதையும்நீ நம்பிவிடாதே!
பிழையோர் சென்ற பீடற்ற நெறியைப்
பின்பற்றுவதால் நன்மையே இல்லை!
ஆண்டில் முதியர் அழகியர் கற்றவர்
இனிய பேச்சாளர் என்பதற்காக
எதையும் நம்பிடேல்! எதையும் ஒப்பேல்!

ஒருவர் சொன்னதை ஆய்ந்துபார்
அதனை அறிவால் சீர்தூக்கிப் பார்
அறிவினை அறிவினால் ஆய்க; சரி எனில்
அதனால் உனக்கும் அனைவருக்கும்
நன்மை உண்டெனில் நம்ப வேண்டும்.
அதையே பின்பற்றி ஒழுகு!
இவ்வுண் மைகளை ஏற்றுநீ நடந்தால்
மூடப்பழக்க வழக்கம் முழுமையாய் ஒழியும்
சமயப் பொய்ம்மைகள் அறிவினால் சாமே!''

இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:



# டாக்டர் அம்பேத்கர்

## நூற்றாண்டு நிறைவு விழா

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா வள்ளுவர் கோட்டத்தில் 14.4.'91 அன்று சிறப்பாகக் கொண்டாடப் பட்டது: அன்று காலை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலர் திரு. செ. செல்லப்பன், இ.ஆ.ப. அவர்கள், டாக்டர் அம்பேத்கர் அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய புகைப் படக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

பிறகு, கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. அன்று மாலை திரு.சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் தலைமையில் டாக்டர் அம்பேத்கர் அவர்களைப் பற்றிய கருத்தரங்கம் நடந்தது. டாக்டர் அம்பேத்கர் ஒரு புரட்சியாளராகவும், சிறந்தொரு சனநாயகவாதியாகவும், சீரிய பகுத்தறிவாளராகவும், மனித நேயப் பண்பாளராகவும், சட்ட மேதையாகவும், கல்விக் கடலாகவும், சீர்திருத்தச் செம்மலாகவும் சித்திரிக்கப்பட்டார்.

செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி.ஜெயந்தி, இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று, அம்பேத்கர் பற்றிய கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கினார்.

மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்மநாராயண்சிங் அவர்கள், டாக்டர்அம்பேத்கர் நினைவு அஞ்சல் தலையை வெளியிட அதை நிலச் சீர்திருத்த சிறப்பு ஆணையர் திரு. சி.தங்கராஜ், இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக் கொண்டார். அம்பேத்கர் உருவம் பொறித்த ஒரு ரூபாய் நாணயத்தை மேதகு ஆளுநர் அவர்கள் வெளியிட, அதை ஆளுநரின் ஆலோசகர் திரு.வி.கார்த்திகேயன் பெற்றுக்கொண்டார். பின், தொழில் முனைவோர்க்குக் கடன் மற்றும் நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் ஆகியவற்றை மேதகு ஆளுநர் அவர்கள் வழங்கி விழாச்சிறப்புரை யாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''டாக்டர் அம்பேத்கர் சர்வகலா வல்லவர். ஒரு நுண்ணிய அறிஞர்-பயமே அறியாத அரிய வீரர். அவர் ஒரு நல்ல படிப்பாளி, தலைசிறந்த கல்வியாளர், அற்புதமான பேச்சாளர், அரசியல் சட்ட நிபுணர், திறமையான நிர்வாகி, அஞ்சா நெஞ்சம் கொண்ட ஏழைகளின் பாதுகாவலர். அரசியல் நிர்ணய சட்டத்தை இயற்றியதிலும், தீண்டாமையை ஒழிப்பதிலும் அவர் ஆற்றிய பணி பன்னெடுங்காலம் நம் நினைவில் பசுமையாக இருக்கும். ஜாதிகள் இருக்கும் வரை தீண்டாமையும் இருக்கும் என முழங்கியவர் டாக்டர் அம்பேத்கர்.

ஏழைகளின் வாழ்க்கைத்தரம் உயர சீரிய திட்டங்கள் தீட்டுவதில் தமிழகம் முன்னணியில் உள்ளது. ஒரு மாவட்டத்திற்கு டாக்டர் அம்பேத்கரின் பெயரை வைத்த மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான். சுயவேலைவாய்ப்பு மற்றும் தொழிற்சாலைகள் தொடங்க 100 தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கடன் மற்றும் உதவித்தொகை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. நிதி நிறுவனங்களும் சேவை சங்கங்களும் தத்து எடுத்து பராமரிக்க இரண்டு கிராமங்களை அரசு வழங்குகிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்க 15 சமூக நிலையங்களைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை சட்டக் கல்லூரி டாக்டர் அம்பேத்கர் சட்டக்கல்லூரி எனப் பெயரிடப் பட்டது. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் அம்பேத்கர் திருவுருவச்சிலை திறந்து வைக்கப் பட்டது. இந்திய அரசாங்கம் அன்னாரது நினைவாக ஒரு ரூபாய் நாணயமும், அஞ்சல் தலையும் வெளியிடத் தீர்மானித்துள்ளது. இவைகளை வெளியிடுவதில் நான் பெருமைப் படுகிறேன்.

டாக்டர் அம்பேத்கரின் ஏழு நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு ரூ.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது. டாக்டர் அம்பேத்கர் போன்றவர்கள் அடிக்கடி பிறப்பதில்லை. அவர்களுடைய செய்தியை எடுத்துச் சொல்வதின் மூலம் சமுதாயத்தில் ஒரு மறுமலர்ச்சியை நாம் ஏற்படுத்தலாம்''.

ஒரிஸ்ஸா மாநில மேதகு ஆளுநர் திரு.யக்ஞதத் சர்மா அவர்கள் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து விழாப் பேருரையாற்றினார். திருவாளர்கள் சி.டி.தண்டபாணி, ஏ.எஸ்.பொன்னம்மாள், அண்ணா நம்பி, வை.பாலசுந்தரம், சி.கே. தமிழரசன், நிலச்சீர்திருத்தத் துறை சிறப்பு ஆணையர் திரு.சி.தங்கராஜ், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலர் திரு.செ.செல்லப்பன், இ.ஆ.ப., ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.க.கணேசன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவின்றார். பின்பு கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன ●

# இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்.
## மதுரை-1

71 ஆண்டுகளாக காமராசர், பசும்பொன் தேவர் திருமகன், இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களிலுமுள்ள அனைத்து வகைப் பிரிவினருக்கும்

## சிறப்புறச் சேவை செய்வதன் மூலம் வளரும் வங்கி

**வாடிக்கையாளர்களை வரவேற்பதில் பெரும் உவகை கொள்கிறது.**

### சிறப்பு அம்சங்கள்

1. எங்கள் வங்கி அனைத்து வகை இட்டு வைப்புகளுக்கும் ½% கூடுதல் வட்டி தருகிறது.
2. எங்கள் வங்கி வழங்கும் வட்டியில் ரூ.7,000 வரை (வருடத்திற்கு) வருமானவரி விலக்கு உண்டு.
3. ரூ.2,65,000/- வரையிலான இட்டு வைப்புக்களுக்குச் செல்வ வரி விலக்கு உண்டு.
4. நிரந்தர இட்டு வைப்புகளுக்கு வாடிக்கையாளர் விருப்பப்படி மாதாந்திர வட்டி அளிக்கப்படும்.
5. இட்டுவைப்புதாரர் விருப்பப்படி வாரிசுதாரர் (நாமினி) நியமித்துக் கொள்ளலாம்.

சிறந்த சேவையுடன் கூடிய 48 கிளைகளுடன் செயல்படுகிறது.

வங்கிக்கு வருகை தாருங்கள்


வங்கியில் சேமியுங்கள்

தங்கள் பேராதரவினை என்றும் விரும்பும்,

இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி
லிமிடெட், மதுரை-1.

கோ.ராமசாமி, பி.காம்.,எச்.டி.சி.,
செயலாளர்

கா.ச்ாகுல் ஹமீது எம்.ஏ.,எம்.பி.ஏ.,எச்.டி.சி.,
தனிஅலுவலர்



## இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நிறைவு விழா

சென்னை தீவுத்திடலில் கடந்த ஜனவரி மாதம் 5-ஆம் நாள் முதல் நடைபெற்று வந்த 17-வது இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் நிறைவு விழா 12.4.'91 அன்று நடந்தது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு.ப.துரை, இ.கா.ப., அவர்கள் தலைமையில் மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு.வே.கார்த்திகேயன், அவர்கள் விழாவில் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு.ப.செல்வம், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசுகையில், ''இந்தப் பொருட்காட்சியில்தான் முதன் முதலாகப் பழமையான ஊர்திகளின் அலங்கார அணிவகுப்பும், கோலப் போட்டியும் நடத்தப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1990-91-ஆம் ஆண்டில் 9.2 கோடி ரூபாய் மொத்த வருமானம் ஈட்டியது. இது முந்திய ஆண்டைக் காட்டிலும் 20 சதவிகிதம் அதிகம்'' என்றார்.

செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் செயலர் திருமதி.ஜெயந்தி இ.ஆ.ப. அவர்கள் விழாவில் கலந்து கொண்டு பேசுகையில், 100 நாட்கள் நடைபெற்ற இந்த பொருட்காட்சியின் மூலம் 91 இலட்சம் ரூபாய் மொத்த வசூலானதாகவும் இதில் 28 இலட்ச ரூபாய் நிகர இலாபம் கிடைத்ததாகவும், சுற்றுலா வளர்ச்சிக்காகத் தமிழக அரசு இவ்வாண்டு 1.07 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும் கூறினார்.

விழாவிற்குத்தலைமையேற்றுத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு.ப.துரை அவர்கள் பேசுகையில், ''ஜனவரி 5-ஆம் தேதி தொடங்கிய இந்த சுற்றுலா பொருட்காட்சியை இதுவரை சுமார் 16 இலட்சம் மக்கள் கண்டு களித்தனர். ரூ.28 இலட்சம் நிகர இலாபம் கிடைத்தது. தமிழ்நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிக்கிறது. இந்த ஆண்டு தமிழ்நாட்டுக்கு 78 இலட்சம் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் 3.5 இலட்சம் அயல் நாட்டுப் பயணிகளும் வருகை புரிந்தனர். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வாண்டு ரூ.113 இலட்சம் லாபம் ஈட்டியிருக்கிறது'' என்று கூறினார்.

விழாவில் ஆளுநரின் ஆலோசகர் திரு.வே.கார்த்திகேயன் அவர்கள் கலந்து கொண்டு, பொருட்காட்சியில் சிறந்த அரங்குகளுக்குப்பரிசுகள் வழங்கிப் பேசுகையில், ''நமது நாட்டுக்குச் சுற்றுலா ஒரு முக்கியமான வருமானத்தை ஈட்டித் தரும் தொழில். தனியாரும், தனியார் நிறுவனங்களும் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் சுற்றுலாத் துறைக்கு ஒத்துழைப்பு தரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

பொருட்காட்சியில் கலந்து கொண்ட சிறந்த அரசுத்துறை அரங்குகளில் முதல் பரிசு இந்து அறநிலையத்துறைக்கும், சிறந்த மாநில அரசுத்துறை நிறுவனங்களில் முதல் பரிசு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்கும் வழங்கப்பட்டது.

**—நமது செய்தியாளர்.**

ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனு மில்லை ஜாதியில்;
இழிவு கொண்ட மனித ரென்ப
திந்தி யாவில் இல்லையே
வாழி கல்வி செல்வ மெய்தி
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர்ச
மானமாக வாழ்வமே!

—பாரதியார்

# பாவேந்தரும் குழந்தைகளும்

**பின்னலூர் மு. விவேகானந்தன்**

"இன்றைய முளையே நாளைய மரம்; இன்றைய குழவியே நாளைய குடி" என்ற இந்த உண்மைகள் உலகில் தோன்றிய எல்லாக் கவிஞர் களுக்கும் தெரிந்த ஒன்றுதான் எனினும் இளங்குழந்தைகளுக்காகப் பாட்டு எழுதும் ஆர்வமும் ஆற்றலும் ஒரு சிலருக்குத்தான் உண்டு.

குழந்தைகளுக்குச் செவிப்புலன் கூர்மையாத இருப்பது போலவே, கண்ணும் கூர்மை உடையது. அதனால் தான் அழும் குழந்தைகளுக்கு அம்புலி யைக் காட்டும் பழக்கம் நம்மிடையே இருந்து வருகிறது. எனவேதான் குழந்தைக் கவிஞர்கள் மலை, கடல், வயல், சூரியன், வானவில் போன்ற பல்வேறு பொருள்களைப்பற்றியும், சிட்டு, கிளி, மயில், கோழி, பசு, கன்று, குதிரை போன்ற பறவைகள், விலங்குகள் பற்றியும் பாடுவதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தம் பாடல்களில் இவ்வியற்கையின் மூலம் தமிழ் உணர்வையும், சமு தாயச் சிந்தனையையும், மாணவர் களுக்கான ஒழுக்க நெறிகளையும் பொறுப்புடன் வலியுறுத்தியுள்ளார்.

உதாரணமாக, "நிலவைப்" பற்றிப் பலர் பலவிதமான பாடல் களைப் பாடியுள்ளனர். "முழுமை நிலா அழகு நிலா முளைத்தது விண் மேலே, அது பழமையிலே, புது நினைவு பாய்ந்தெழுந்தாற் போலே" என்று பாடிய பாவேந்தர் அதே நிலவைச் சிறுவர்களுக்கு அறிமுகப் படுத்தும் பாங்கே அலாதியானது. அப்பாடல்:

"சொக்க வெள்ளித்தட்டு . மிகத்
தூய வெண்ணெய்ப் பிட்டு
தெற்கத்தியார் சுட்டு - நல்ல
தேங்காய்ப் பாலும் விட்டு
வைக்கச் சொன்ன தோசை
வயிர வட்ட மேசை
பக்க மீன்கள் பலவே! - ஒரு
பட்டத் தரசு நிலவே?"

ஔவையைப் போன்று ஆத்தி சூடி அருளிய பாவேந்தர், "இளை யார் ஆத்திசூடி, இளைஞர் இலக் கியம், இசையமுது போன்ற தொகுதி களில் சிறார்களுக்கு அறிவுரையும், அறவுரையும் அள்ளி வழங்கியுள் ளார். கல்வியின் அவசியத்தை அதிலும் குறிப்பாகப் பெண்கல்வி யின் அவசியத்தை அவர் மிகவும் வலியுறுத்தியுள்ளார்.

**நூலைப்படி**

ஒரு சமயம் பாவேந்தரின் கடைசி மகளான ரமணி பள்ளிக்கூடம் போகா மல் அடம்பிடிக்கவே, அதைச் சமா தானப்படுத்தி, பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்பதற்காகக் கல்வி யின் முக்கியத்துவத்தை உணர்த்தி ஒரு பாட்டைப் பாடினார், பாவேந்தர் அந்தப் பாடல்,

"தலைவாரிப் பூச்சூடி உன்னை-பாட
சாலைக்குப் போவென்று சொன்னாள்
உன் அன்னை!
சிலைபோல ஏன் அங்கு நின்றாய்-நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்து
கின்றாய்?
விலைபோட்டு வாங்கவா முடியும்?-
கல்வி
வேளைதொறும் கற்று வருவதால்
படியும்!
மலைவாழை யல்லவோ கல்வி!-நீ
வாயார உண்ணுவாய் போயென்
புதல்வி!

இதுவரை கல்வியைப் பாடிய பாவேந்தர் அடுத்தது பெண்கல்வி யின் அவசியத்தையும் அப்படியே பாடிச் சொல்கிறார்.

படியாத பெண்ணாய் இருந்தால் -
கேலி
பண்ணுவார் என்னை இவ்வூரார்
தெரிந்தால்!
கடியாரம் ஓடும்முன் ஓடு!-என்
கண்ணல்ல! அண்டை வீட்டுப்
பெண்களோடு!
கடிதாய் இருக்கும் இப்போது! கல்வி!
கற்றிடக் கற்றிடத் தெரியும் அப்போது!
கடல் சூழ்ந்த இத்தமிழ்நாடு - பெண்
கல்வி பெண்கல்வி என்கிறது
அன்போடு!

இத்தகைய கல்வியைப்பெற குழந்தைகள் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? அவர்கள் எந்நேரமும் படிக்க வேண்டும். படிப்பதைக்கூட எப்படிப் படிக்க வேண்டும் எத்தகைய நூல்களைப் படிக்க வேண்டும் என் பதைப் பட்டியல் போட்டுக் காட்டு கின்றார் பாவேந்தர்.

நூலைப்படி - சங்கத் தமிழ்
நூலைப்படி - முறைப்படி
நூலைப்படி!
காலையில்படி, கடும்பகலில் படி
மாலை இரவு பொருள்படும்படி
நூலைப்படி!

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வது எப்படி?
நூலைப்படி!

அறம்படி பொருளைப்படி
அப்படியே இன்பம்படி
மறைந்த தமிழ் நான்மறை
பிறந்த தென்று சொல்லும்படி
நூலைட படி!

அகப்பொருள்படி அதன்படி
புறப்பொருள்படி நல்லபடி
புகப்புகப் படிப்படியாய்
புலமை வருமென் சொற்படி
நூலைப்படி.

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படித் தெரிந்துபடி
தீமை வந்திடுமோ மறுபடி
நூலைப்படி

பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூல்களை ஒப்புவ தெப்படி!
நூலைப்படி!

தொடங்குகையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி!
அடங்கா இன்பம் மறுபடி
ஆகுமென்ற ஆன்றோர் சொற்படி
நூலைப்படி!

இவ்வளவு பெரிய பாடல் என் றாலும் இதை எளிதில் மனப்பாடம் செய்துவிடலாம். இப்பாடல் முழுமை யும் மனத்தில் இருத்திக் குழந்தைகள் கற்றுவந்தால் எதிர்காலத்தில் அவர் களும், தமிழும், தமிழகமும் கல்வி யிற் சிறந்ததொரு நிலையை, மேம் பாட்டை அடையலாம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



